உ

கடவுள் துணை.

அகஸ்தியமகாமுனிவர்

அருளிச்செய்த

வைத்திய

# இரத்தினச்சுருக்கம்

## முந்நூற்றறுபது.

—(*)—

இஃது

மைலம்,

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

—*—

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

௨

கடவுள் துணை.

—*—

## அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# வைத்தியரத்தினச் சுருக்கத்தின்

## மருந்தின் தலைப்புகளின் அகராதி.

—:*:—


| பக்கம். | பெயர். | பாடற்றொகை. |
|---|---|---|
| ௨௧ | அக்கினிசூரணம் | ௧௨௫ |
| ௨௨ | அசுவகெந்திசூரணம் | ௧௨௯ |
| ௨௫ | அசுவகெந்திபலராட்ச தத்தைதலம் | ௧௫௧ |
| ௪௭ | அபிரேகசெந்தூரம் | ௨௮௨ |
| ௧௪ | அயக்காந்தச்செந்தூர | ௨௨௬ |
| ௰ | அர்த்தனரீஸ்வரம் | ௯௫ |
| ௪௩ | ஆக்கிராணசிபம் | ௨௨௭ |
| ௩௧ | ஆதண்டத்தைலம் | ௧௭௧ |
| ௭ | இதுவுமொருவகை | ௪௰ |
| ௯ | இரசச்சிந்தாமணி | ௫௰ |
| ௪௮ | இரசபற்பம் | ௨௮௯ |
| ௯ | இரசானந்தவைரவம் | ௩௫ |
| ௨௫ | ஏலாதிசூரணம் | ௧௪௯ |
| ௩௭ | கணத்தெண்ணெய் | ௨௨௩ |
| ௧௩ | கண்டாத்திரிலேகியம் | ௭௩ |
| ௧௪ | கண்டங்கத்திரிலேகியம் | ௮0 |
| ௧௭ | கண்டங்கத்திரிலேகியம் | ௱௩ |
| ௩௭ | கண்டங்கத்திரிகிருத | ௨௧௯ |
| ௨௨ | கண்டாத்திரிசூரணம் | ௧௩௧ |
| ௭௩ | கண்டாவிழ்தம் | ௨௫௭ |
| ௪ | கபாடமாத்திரை | ௪௩ |
| ௰ | கபாடலேகியம் | ௱௮ |
| ௮௩ | கரப்பானெண்ணெய் | ௨௨௭ |
| ௧௧ | கரிசாலைஇலேகியம் | ௬௭ |
| ௰ | கலிங்காதிஎண்ணெய் | ௨௪௧ |
| ௫௪ | சன்னி பதின்மூன்றுக் கும்பெயர் | ௩௬௭ |
| ௫௮ | காரீயச்செந்தூரம் | ௩௪௫ |
| ௫௬ | காளகண்ட மேகநாரா யணசெந்தூரம் | ௩௪0 |
| ௩௧ | கீழ்க்காய்நெல்லித்தை லம் | ௧௮0 |
| ௨௭ | குமரித்தைலம் | ௧௬௧ |
| ௧௯ | கூழ்பாண்டக்கிருதம் | ௯௪ |
| ௩௫ | கூழ்பாண்டகிருதம் | ௨௧௧ |
| ௫௫ | கெந்திசெந்தூரம் | ௩௩0 |
| ௨௮ | கொம்பரக்குத்தைலம் | ௧௯௫ |
| ௰ | கோரோசினைக்குளிகை | ௫௰ |
| ௨௪ | சஞ்சீவிசூரணம் | ௧௪௫ |
| ௨௯ | சந்தனாதித்தைலம் | ௧௭௩ |
| ௧௬ | சரபங்கவில்வாதிலேகிய | ௯௭ |
| ௨௰ | சவுபாக்கியசுண்டி | ௧௧௬ |
| ௫ | சிந்தாந்தவைரவம் | ௩௩ |
| ௧௧ | சிலோதாரிமணி | ௬௪ |
| ௧௪ | சித்தாதிலேகியம் | ௮௩ |
| ௪௨ | சுக்கிநபேதியெண்ணெ | ௨௧௯ |
| ௭ | சுயமக்கினி | ௩௮ |

| பக்கம். | பெயர். | பாடற்றொகை. |
|---|---|---|
| ௪௭ | சூரணங்களின்சுத்தி | ௨௫௬ |
| ௪௪ | செந்தூரவைப்புக்குக் குரு | ௨௬௩ |
| ௫௪ | சேத்துமசுரக்கியாழம் | ௩௨௪ |
| ௫௧ | தங்கபற்பம் | ௩௱௧ |
| ௫௰ | தாம்பிரபற்பம் | ௩௱ |
| ௭௯ | தாளகபற்பம் | ௨௯௭ |
| ௨௨ | தாளிசப்பத்திரிசூரண | ௧௩௪ |
| ௧௯ | திப்பிலிச்சாயனம் | ௧௧௨ |
| ௨௧ | திரிராட்சதசூரணம் | ௧௨௧ |
| ௪௫ | திரிலோகச்செந்தூர | ௨௭௧ |
| ௪௮ | துருசுகுரு | ௨௮௮ |
| ௩௬ | தூதுளைக்கிருதம் | ௨௧௫ |
| ௫௧ | தோஷமேழுக்கும்பெயர் | ௩௨௮ |
| ௫ | ஸ்திரீபுருஷர்களுக்கு நாடிபார்க்கும்வகை | ௩0 |
| ௪௨ | நசியம் | ௨௫௬ |
| ௪௯ | நாகபற்பம் | ௨௯௭ |
| ௧ | நாடிநிதானம் | ௪ |
| ௩ | நாடிபார்க்குங்காலம் | ௧௩ |
| ,, | நாடிஇலக்கப் | ௧௪ |
| ௫ | நாடிபார்க்கும் மாதவகை | ௧ |
| ௩௩ | நிலப்பனைக்கிருதம் | ௧௬௬ |
| ௨௩ | நிலவாகைச்சூரணம் | ௧௩௯ |
| ௪௩ | பஞ்சதீபாக்கினிலேகியம் | ௭௭ |
| ௨௨ | பஞ்சதீபாக்கினிசூரண | ௧௨௭ |
| ௪௯ | பஞ்சலோகசெந்தூர | ௨௭௫ |
| ௯௨ | பதின்மூன்றுசன்னிக்குத் தைலம் | ௧௯௬ |
| ௫௨ | பவளபற்பம் | ௩௧௧ |
| ௧௨ | பழத்தெண்ணெய் | ௨௬ |
| ௫௩ | பித்தசுரக்கியாழம் | ௩௨ |
| ௩௪ | புளியாரைக்கிருதம் | ௨௧௪ |
| ௮ | பூபதிகுளிகை | ௪௫ |
| ௰ | பூமணிக்குளிகை | ௫௮ |
| ௫௯ | பூரணச்சந்திரோதய | ௩௫௭ |
| ௩௧ | பொன்னுங்காணித் தைலம் | ௧௮௩ |
| ௪௯ | பொன்னுங்காணிக்கிருதம் | ௨௱௧ |
| ௫ | மகாவில்வாதிலேகியம் | ௮௮ |
| ௨௯ | மண்டூரச்செந்தூரம் | ௨௭௮ |
| ௧௯ | மஸ்துமிரசாயனம் | ௧௧௪ |
| ௩௮ | மாந்தனெண்ணெய் | ௨௩0 |
| ௩௮ | மிருகாமத்தைலம் | ௧௬௯ |
| ௩௬ | மேகத்தெண்ணெய் | ௨௩௨ |
| ௫௮ | ரசகர்ப்பூரபற்பம் | ௩௪௯ |
| ௫௭ | ரசலோகசெந்தூரம் | ௩௪௫ |
| ௪௪ | லோகசெந்தூரம் | ௨௬௨ |
| ௧௯ | வங்கபற்பம் | ௨ ௪ |
| ௬ | வல்லாரைச்சூரணம் | ௧௩௨ |
| ௩௫ | வல்லாரைக்கிருதம் | ௨௧௭ |
| ௫௨ | வாதசுரக்கியாழம் | ௩௧௯ |
| ௪௧ | வாதயெண்ணெய் | ௨௩௬ |
| ௬ | வாதராட்சசன் | ௩௬ |
| ௨௬ | வில்வாதிதைலம் | ௧௫௭ |
| ௩௯ | விழுதியெண்ணெய் | ௨௩௬ |
| ௪௨ | வீரபத்திரக்கலிக்கம் | ௨௫௪ |
| ௫௧ | வெண்காரஞ் சிலாசத்துகலைக்கொப்புகல்நார் பஸ்பம். | ௧௩௮ |
| ௫௰ | வெள்ளிபற்பம் | ௩௧௨ |



மருந்தின் தலைப்புகளின் அகராதி முற்றிற்று

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# வைத்தியரத்தினச்

## சுருக்கம்.

### முந்நூற்றறுபது.

---

காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூரணமாய்நிறைந்தகுரு மலர்த்தாள்போற்றி
புகலுகிறேன்வைத்திய ரத்னச்சுருக்கந்தன்னை
வாரணமாமுகத்தோனைப் பணிந்துவாழ்த்தி
வைத்தியந்தான்முந்நூற்றோ டறுபதுக்குள்
காரணமாஞ்செந்தூரம் பற்பம்லேகியங்
கருவானதயிலமொடு கிருதமெண்ணெய்
சூரணமாங்கிராணமொடு கலிக்கமாத்திரை
சுளுவாகநாடிமுதற் சொன்னோம்பாரே.

## நூல்.

### நாடிநிதானம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனினாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்திற் பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்லாத முயர்நடுவிரலிற்பித்தந்
திருவிரன்மூன்றிலோடிற் சேத்துமநாடியாமே. (௧)

ஆதியநாடிமூன்றும் படபடென்றோடிற்சன்னி
வாகினிலன்னங்கோழி மயிலெனநடக்கும்வாதம்
ஏகியவானம்பட்டை பிலையெனநடக்கும்வாதம்
போகியேதவளைபாம்பு போலவாஞ்சேத்துமந்தானே. (௨)

சேத்துமமெழுந்திருக்கிற் றித்திப்புநாவிலேறும்
ஏற்றியகசப்புமீறி லெழுப்பிடும்பித்தமாகும்
மாற்றியபுளிப்புமீறில் வந்திடும்வாதமாகும்
சேத்துமந்தன்னிற்பித்தந் தீக்காற்றுவாதமாமே. (௩)

வாதத்தில்வாதமாகில் வளர்ந்திடுமன்னம்போல
நீளைத்தவுடலினேர்ந்து நெகிழ்ச்சியாய்ச்சுருக்கும்வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனி யசனமுமற்பமாகும்
ஏதுற்றதனத்தின்பின்னே யெண்ணியேபரிந்துசொல்லே. (௪)

வாதத்திற்பித்தமாகில் வாயதுகுழறிப்பேசும்
பேதித்துத்தலைபிடித்தும் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தாதுற்றபுத்திதானுந் தடைப்படுந்தடங்கண்மாதே
கோதுற்றவயிறுவிம்மிக் குறடலைப்புரட்டுந்தேனே. (௫)

வாதத்திற்சேத்துமமாகில் வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலைபிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தீதுற்றமெய்வெளுத்துத் திடமுடனசனஞ்செல்லா
பேதித்துகாவும்பேசும் பெருகவேவீக்கமுண்டாம். (௬)

பித்தத்திற்பித்தமாகிற் பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியமதிகமாகுஞ் சரீரத்திலிளைப்புமுண்டாம்
அத்தியாயுலருமேனி யாகமும்வேறதாகும்
வற்றியேவெளுத்துக்காயம் வறண்டுபின்வீக்கமுண்டாம். (௭)

பித்தத்தில்வாதமாகிற் பிடரியுங்காலுங்கையும்
குத்தத்துப்போலேயாகுங் குறுகிமெய்ப்பதறும்பின்னே
அத்தியாயுலருமேனி யாவருஞ்சுகத்தால்நோவாம்
புத்தியுமடியுமிந்தப் பொறுமைபோய்க்கோபமாமே. (௮)

பித்தத்திற்சேத்துமமாகிற் பிதற்றுவாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந் தானறியாமலோடும்
சுற்றிடும்பேய்கள்போலச் சுழற்றியேவயிற்றிரேனுடும்
பித்தமுமெடுத்துக்கொட்டிப் பிடரியில்நோவதாமே. (௯)

வாட்டிடுஞ்சேத்துமமாகில் வந்திடும்வாதமாகில்
நாட்டியகால்கள்போல நரம்பெல்லாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங் குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமெல்லாம் நாக்குவாய்குழறுந்தானே. (௰)

சீர்பெறுசேத்துமபித்தந் தின்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற் பலவிதம்புளிப்பிருப்பாம்
சேர்பதுபேசமாறுந் திடமில்லைகோழையாகும்
சார்பதுகண்ணும்பீளை சாரும்பின்சத்தம்வேறும். (௧௧)

சேத்துமத்திற்சேத்துமமாகிற் றிமிர்தமாயதியுஞ்சொன்னோம்
ஆத்துமமல்லதல்ல வழிவதுமெய்கண்டாயே

கூற்றன்வந்திடுவதாகுங் குறுவிழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னோம் யாத்திரைநாடிதானே. (௧௨)

## நாடிபார்க்குங்காலம்.

காலமேசேத்துமநாடி கட்டுச்சிபித்தநாடி
மாலையில்வாதநாடி வகைதப்பிப்பதறினின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லா மியம்பினாரிதுதானென்று
நாலஞ்சின்மரணமென்று நன்முனியருளிச்செய்தார். (௧௩)

## நாடி இலக்கணம்.

போற்றியநாடிதானும் போத்துபோற்புறந்துடித்தால்
சீற்றமின்னுதலேமிக் கிடுஞ்சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற் கருதியேதீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின் மரணமென்றுரைக்கலாமே. (௧௪)

குறித்திடுஞ்சேத்துமநாடி குதிரைபோல்திமிர்ந்துநின்றால்
கறித்திடுவிழியாய்நல்ல காரிகையாளேகேளாய்
மறித்திவைபேசவேண்டாம் வயதிவைமுடிந்ததென்று
பொறுப்பில்லைதிங்களொன்றிற் புகன்றிடுமரணமாமே. (௧௫)

ஆதித்தன்சந்திரன்போ லந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற் பெருக்கவேகையினூடே
சோதித்துக்கண்டநாடி சுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடை வந்துற்றுநிற்குந்தானே. (௧௬)

கடிந்ததோர்நாவதன்னைக் கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடி விதறியேதொடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடி கட்டுச்சிதுடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடி மாலையில்மரணந்தானே. (௧௭)

சேத்துமநாடிதானுந் தியங்கியமஞ்ஞைபோல
நாட்டியேவட்டைபோல நடுங்கியேபதறினின்றால்
கூட்டவேவேண்டாமேழு நாளினின்மரணங்கொள்ளும்
நாட்டமாய்முனிவர்சொன்னார் நயம்படக்குறித்துப்பாரே. (௧௮)

ஏற்றியதீபந்தன்னி லெரிசுடர்முனையைப்போலத்
தோற்றியநாடிதானுந் துயரநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லை குறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாண்டானும் வளர்ந்திடுந்திண்ணந்தானே. (௧௯)

### வேறு.

கண்ணும்பல்லுந்தான்கறுத்துக் கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணும்வயற்றிற்சேத்துமமு மோடிமிகவேதானடந்தாற்
பண்ணும்மருந்துபலியாது பண்பாய்சுவாசமேல்வாங்கும்
மண்ணும்விண்ணுந்தானறிய மரணமாவார்கண்டீரே. (௨௰) (?)

### வேறு.

இடைதொடைமார்பின்கீழே யெரிபடப்பதறியோடின்
முடுகிடவீங்குமாகின் மூவரிலொருவரோடில்
படரவேதாரமிஞ்சிப் பங்கிடுங்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டாலறிந்துகொள்மரணமென்றே. ()

### இஃதறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எடுக்கும்படுகருமெழுந்திருக்கு மிளைத்தேமூச்சுதலைவாங்கும்
வடுக்கத்தூத்தவிழியிரண்டு மலரவிழிக்கும்வழிபார்க்கும்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந் தொண்டைதன்னுடையபிக்கு
மடுத்துவருவதிதுகண்டா லறிவீர்மரணநிச்சயமே. (௨௨)

### இதுவும்அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாசிபோன்முகமுநீண்டு உடம்பெலாநரம்புதோன்றும்
பாதிபோங்கண்பஞ்சிட்டுப் பரந்திருண்மூடுமாகில்
பேசாவறண்டுபேசிப் பிதற்றுபிதற்றுமாகில்
காசினியறியச்சொன்னேன் கண்டுகொள்மரணமென்றே. (௨௩)

நாடியான்முன்னோர்சொன்ன நற்குறிக்குணங்களாலு
நீடியவிழியினாலு நின்றநாட்குறிப்பினாலும்
வாடியமேனியாலு மலமொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொல்லே. (௨௪)

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருங்கியகுணங்களாய்ந்து
முகங்குறிநாடிமூக்குச் செவிநுதனயனநாடி
அகந்துடியடக்குநாடி யதுதிசைவிடுநிநாடி
உகந்துடியுந்திநாடி யுண்மையாய்நடைகள்பாரே. (௨௫)

பார்மனக்கவலையற்றுப் பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்துநீயுஞ் செல்குணவிழியிதென்று
நாரகமூர்த்திதன்னி லொளிபலவியாதிசெப்பில்
தீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்கடாமே. (௨௬)

சொல்லியவுத்திதன்னிற் சுழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்திராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்ததிலெழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிந்துபாரே. (உஎ)

தான்மிகக்குளிர்ச்சிகொள்ளி நங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாய்கேப்பா விரைச்சிகளுண்டால்வாதந்
தீன்மிகவருமேயோழி தின்னவர்நாடிபித்தம்
வானகற்கனிகடன்னை வாங்கினால்வாதமாமே. (உஅ)

வாதத்திலிளநீர்பின்னை வாங்கினானாடிபித்தம்
போகவேகோபமுள்ளே பொருமினானாடிபித்தம்
கோதேசேர்குழலாள்தன்னைக் கூடினானாடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னார் திறமுடனறிந்துதானே. (உகூ)

ஸ்திரீ புருடர்களுக்கு நாடிபார்க்கும்வகை.

தானெனவுலகத்துள்ளே தயங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய் வரும்புனல்சொல்லக்கேளு
நானெனும்புருடர்க்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே. ()

நாடிபார்க்கும்மாதவகை.

சித்திரைவைகாசிக்குச் செங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி பைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில் வீழுகின்றநேரந்தானே. (கூக)

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூன்றுநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமர்முனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபாரே. (கூஉ)

நாடிநிதானம் முற்றிற்று.

## சித்தாநந்தவைரவம்.

இஃதெண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

---

பாரப்பாபுலத்தியனே சித்தானந்தம் - பரிவானவைரவந்தான்
சொல்லக்கேளு, சேரப்பாதிரிகடுகு *சிவப்புநாவி-திறமான 0 இவரிச்

* சிவப்பு-லிங்கம். 0 எரிச்சல்-பெருங்காயம்

சலொடு*பொரிச்சலேழும், நீரப்பாசமன்கூட்டிப்பழத்தின்சாற்றால்தி சமாகநாற்சாம மரைத்துக்கொண்டு, தாரப்பாகுன்றிபோ னிழலுலர்த்தத் தப்பாமற்செப்பில்வைத்துச் சொல் லக்கேளே. (௩௩)

கேளப்பாவிஞ்சிநீ ருள்ளித்தயிலம் கெடியானமூலைப்பாலிற்கொடுத்தாயானால், காளப்பாசன்னிவகை யெல்லாம்போகும் நலமாகதேன்கூட்டிக் கொடுத்தாயானால், தாளப்பாதோஷமென்றதெல்லாம்போகுந் தப்பாதுகண்ணிலிட தீருந்தீரும், கேளப்பாரசானந்தவைரவந் தான் செப்புகிறேன்சிவப்புநாற் 0 பொரிதானெட்டே. (௩௪)

இரசானந்தவைரவம்.

எட்டப்பாகாவியீரா றுமாகு மிதமானதிப்பிலியும் பன்னிரண்டு, தட்டப்பாவிஞ்சிரசந் தன்னாலாட்டித் தளமாகநாற்சாம மரைத்துக்கொண்டு, விட்டப்பாமிளகுபோ னிழலுலர்த்தி விருதானசெப்பில் வைத்துச் சொல்லக்கேளு, அட்டப்பாவருபானமறிந்துபோடு அப்பனேசன்னியென்ற மூலம்போமே. (௩௫)

வாதராக்ஷசன்.

பேரமப்பாவாதராக்ஷசனைக்கேளு புதுமையாம் ‡வேந்தனொடு ‡நாற்றங்காந்தனு, சேமப்பாவப்பிரக தாம்பிரபற்பம் திறமாகவஞ்சவிதம்சமனாய்க்கூட்டிச் சாமப்பாவெள்ளைச்சாரணையின்சாற்றால் தளமாகநாற்சாம மரைத்தபின்பு, வேமப்பாசிந்திபிட பொழுந்தன்னில் வெகுசுறுக்காய்நாற்சாம மரைத்திடாயே. (௩௬)

அரைத்திடுவாய்கொடிவேலிக் கியாழந்தன்னில் அருந்துளசிச்சாறு ?திருபலைக்கியாழம், அரைத்திடுவாய்வெவ்வேறே சாமம்ரண்டு அழகாகமொத்தையா யுருட்டிக்கொண்டு, அரைத்திடுவாய்சாரணையினிலையரைத்து அன்பாகமருந்தையுள்ளேவைத்துமூடி, அரைத்திட்டவிலைகருகப் புடத்தைப்போட்டு ஆறினபின்னெடுத்ததனை லரைக்கக்கேளே. (௩௭)

கேளப்பாசித்திரமூ லத்தின்கியாழம் கிருபையாய்நாற்சாமமரைத்துக்கொண்டு, நாளப்பாமும்மூன்று வராகன்விதம் நலமாகவேயுருட்டிக்கட்டிக்கொண்டு, தாளப்பாநிழலுலர்த்திவைத்துக்கொண்டு தள

---

* பொரிச்சல் வெண்காரம். 0 பொரி வெண்காரம். ‡வேந்தன் ரசம். ‡நாற்றம் கந்தகம். ?திரிபலை கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

மானசன்னிவகை தோஷமெல்லாம், வேளப்பா வனுபான மதிந்து போடு வெகு ஈறுக்காய்வாதமெல்லாம் விழலாய்ப்போமே. (௩௮)

### சுயமக்கினி.

கேளப்பாசுயமக்னி சொல்லக்கேளு புகழானமூன்று *நாற்றம் ரண்டு, காமப்பாகாந்த செந்தூரம்நாலு கலங்காதே †சிலைபிரண்டு ‡சிவப்பிரண்டு, தாமப்பாவெழுதுபொடிதானொன்று தவறுமல் ‡குமரிச்சாறரைப்புக்கேளு, ஆமப்பாபட்சமொன்று அரைத்துருட்டு அப்பனேபிஞ்சிரசந் திரிகடுகுனுளே. (௩௯)

துளிலேதேன்கூட்டிப் பணவிடைதான்போட்டுத் தொடர்ந்து வரைமண்டலந்தான் கொண்டாயானால், நாளிலேயக்கினியா மந்தந்தீரும் காடாதுபீலிகையுங் குன்மவாயும், தேளிலேவாயுவென்ற தெல்லாந்தீருந் திறமானகவுசியொடு பாண்டுதீரும், சூளிலேசுரமெல்லாஞ் சுறுக்காய்த்தீரும் சுகமாகும்பத்தியந்தான்புளிகசப்புத்தள்ளே. (௪௰)

### இதுவுமொருவகை.

தள்ளவேபின்னமொரு செய்திகேளு தயவானவேந்தனொன்று நாற்றம்ரண்டு, விள்ளவேஅயப்பொடிதானுலுங்கூட்டி விருதானகுமரிச்சாறதனுலாட்டிப், பள்ளவேநாற்சாம மரைத்துருட்டிப் பாங்கான வெருக்கிலையாற் சுற்றிகட்டிக், கள்ளமேவபாண்டத்தில் பட்சம்வைத்துக் கலங்காதேபொடிசெய்து திருகிக்கொள்ளே. (௪௧)

கொள்ளடாதேன்கூட்டி மண்டலந்தான் கொடியானகுன்மமெட்டும் பீலிகையுந்தீரும், கள்ளடாபாண்டுவகை யெல்லாந்தீருந் தளமானவக்கினியா மந்தந்தீரும், நள்ளடாவிஞ்சிரசந்தேனுங்கூட்டி நலமானமண்டலந்தான் கொண்டாயானல், விள்ளடாசுரமென்றதறுபானுன்கும் விட்டுவிட்டுக்கடல்புக்கும்விருதுபோடே. (௪௨)

### கபாடமாத்திரை.

போடவே கபாடமாத்திரைதான்கேளு புகழானசாதிக்காய்ப் பத்ரிக்காயம், நாடவேசிரகமும் விடையங்கிராம்பு நலமானவமினி

---

* நாற்றம் கந்தகம். † சிலைமனோசிலை. ‡ சிவப்பு லிங்கம்

‡ குமரி சோற்றுக்கற்றாழை.

* சடை வன்னிக்கற்பந், தேடவேவெந்தயமுங் கழற்சிவித்துத் திற
மானகுரோசானி பதினொன்றுக்தான், ஆடவேசமர்தூக்கிக்கல்வத்தி
ட்டு அப்பனே 0 யானந்தமூலிச்சாறே. (௪௩)

சாற்றுலேசோற்சாம மரைத்துக்கொண்டு சாதகமாயிலந்தைதனி
னைதப்பிரமாணந்தான், காத்தாலேமேதினியென்ற தயிர்காணமூன்று
கசக்காதே )(மதுவிலிடு மூன்றுநாள்தான், வார்த்தாலேவாழையிட
பூவின்சாற்றுல் வகையான தனிச்சாற்றிலிட்டாயானால், வோத்தாலே
யிரத்தமுஞ்சிழ்கிராணி விதமானசலக்கிராணி தானுமாமே. (௪௪)

ஆமப்பாசதக்கிராணி வாய்வுக்கிராணி அப்பனேசூரிகா கிராணி
தீரும், போமப்பாசோறுசோறுயக் கழிகிராணி பொலிவான நீரதாய்
க்கிராணிதீரும், நாமப்பாவயிற்றிலுள்ள கடுப்புத்தீரும் சலமானபா
ண்டுநோய்க் கிராணிதீரும், தாமப்பாயதிகாரக் கடுப்புந்தீருந் தப்பா
துபுளிக்கூட்டிப் பத்தியம்போடே. (௪௫)

## பூபதிக்குளிகை.

போடப்பாசடலத்துன்னுேய்கள்போகப் பூபதிதன்மருந்தொ
ன்று சொல்லக்கேளு, சாடப்பாதங்கமொடுவெள்ளிநாகந் தனமான
லோகமொடு மூத்துரத்தினம், நாடப்பாசூதமொடு கெந்திலிங்கம் நல
மான சிலையொடுதார்சிங்கிகாவி, ஆடப்பாவிவையெல்லாம் பழச்சாற்
றுலே ஆட்டியேசோற்சாமம் வில்லைசெய்யே. (௪௬)

செய்யப்பாவியுலர்த்தி பகலில்வைத்துத் திறமானமேல்மூடிச்
சிலைசெய்து, வையப்பாமுப்புடத்தில் சிவந்துபோகும் வளமாகயெ
டைக்கெடைதான் விங்கங்கூட்டி, மெய்யப்பாமுலைப்பாலினுலேசா
மம் விடமலரைவிரல்னீளமுண்டைசெய்து, கையப்பாநிழலுலர்த்திச்
செப்பில்வைத்துக் கலங்காதேவைரவற்குப்பூசைபண்ணே. (௪௭)

பண்ணியேபூபதியை முலைப்பாலுக்குப் பரிவாகவரிசியெடை
கொடுத்தாற்கேளு, சன்னியேசன்னிபதின் மூன்றுந்தீரும் தப்பாது
தோஷமென்ற தேமூந்தீரும், கன்னித்திரிதோஷஞ்சில விதமெல்
லாங் காணுதகடல்புக்குங்கருடிப்பாரு, விண்ணியேசிரசினின்றதோ
ஷமெல்லாம் வெகுசுறுக்காய்தீருமடா விளைந்துபாரே. (௪௮)

---

* சடைவன்னிக்கற்பம் சடைக்காஞ்சா. 0 ஆனந்தமூலிகஞ்சா
(மது தேன்.)

பாரப்பாபூபதியை யிஞ்சிச்சாற்றூற் பரிவானதேன்கூட்டிக் கொடுத்தாற்கேளு, சாரப்பாசமமாகப்போனாலுந்தான் சாதுசியப்பிராணன்வந்து சற்றேபேசும், ஆரப்பாபிரமலயியவ்வளவேயாகின் ஆசித்துப்பேசிகிட்டு மரணமாவான், தாரப்பாபூபதியைச் சொன்னேன்சொன்னேன் சாதித்துவைத்தியஞ்செய்தருமமாமே. (௪௯)

இரசசிந்தாமணி.

ஆமப்பாரசசிந்தா மணியைக்கேளு அப்பனேசூதமொடு சிவந்தரத்தம், தாமப்பாதலகமொடு வெள்ளிமுத்து தயவானபவழமொடு திட்சணந்தான், காமப்பாசிலைகெந்தி யப்பிரேகம் நலமாகவகைக்குமிரு கழஞ்சுகூட்டிக், * காமப்பால்விட்டரைப்பாய்சாமம்நாலு கருவாசித்திரமூலக் கியாழந்தானே. (௫௦)

கியாழத்தாலரைத்திடுவாய்சாமம்நாலு கெடிதான வெருக்கம்பாற் சாமம்ரெண்டு, வியாயமாஞ் ()சோகிதனிலடைத்துக்கொண்டு சிலவாமாய்மூலமென்ற சாம்பலுக்குள், வியாழமாயறைபறையாய் வைத்துமூடி விதயாகவெருசிலை மண்ணுஞ்செய்து, கியாழமாயிரவிதனி லுலரப்போட்டுத் திறமாகக்கசப்புடத்திற் சென்றுவாங்கே. (௫௧)

வாங்கியேயெடைக்கெடைதான் சூதங்கூட்டி மைந்தனேநாபிமுக்காற் கழஞ்சுகூட்டி, ஓங்கியேகாந்சாமந்திரிகடுகுகியாழ முத்தமனே திரிபலையின் கியாழந்தன்னாற், றேங்கியேயிருசாமமரைத்துப்பின்பு திறமாகவெருக்கிலிட்டப் பட்டைச்சாற்றால், தாங்கியேயிருசாம மரைத்துருட்டித் தப்பாமனிழலதனி லுலர்த்திவையே. (௫௨)

கூவத்திரனைவைரவர்க்குப் பூசைபண்ணு வாகாகக்கணபதிக்குப் பூசைபண்ணு, தைத்தசொரூமாத்திரைக்குச்செபந்தான்பண்ணுநப் பாமற்றேவியைத்தான் பூசைபண்ணு, சித்திரமாத்திரையைபனுபானத்தில் திறமாகக்குன்றியெடை கொடுத்தாற்கேளு, பற்றிநின்றசன்னிமுதற் றோஷமெல்லாம் பறக்குமடாசுரமென்றதெல்லாந்தானே.

தானென்றரசசிந்தாமணியின்பேரைச் சாற்றினல்யமனுந்தா ஓடுங்குவார்பார், ஏனென்றேதானிருந்தால்வைத்தியோரே எய்துமேசமாத்திரைதா னியப்பக்கேளு, பானென்றமாத்திரைகள் பண்பாய்ச்செய்து பரிவானவுலகத்தில் வைத்தியஞ்செய்ய, தேனென்றவைத்தியர்க்குச்சொன்னேனிந்நூல் திறமானவாதியென்றாற் செய்வான்பாரே. ()

---

* காமப்பால்-மூலைப்பால். () சோகி பலகறை.

கோரோசனைக்குளிகை.

பாரப்பாகோரோசனைக் குளிகைகேளும் பாங்காகக்கோரோசனை குங்குமப்பூ, சாரப்பாகாப்பூரம் ரசசெந்தூரஞ் சார்பானபச்சைக்கர்ப்பூரமேலம், சேரப்பாவப்பிரேகங் கிராப்புகோஷ்டம் திறமானசாதிக்கா யக்கிராகாரம், ஆரப்பாவகையொன்று கழஞ்சுமூன்று அப்பனே கல்வத்திற் பொடித்துக்கொள்ளே. (௫௫)

பொடித்திதனையரைப்பதற்குக்கிழாழங்கேளு பேரானசந்தனத்தூள் கியாழஞ்செய்து, குடித்திதனைச் சாமநாலரைத்துக்கொண்டுநலங்கவேசண்பகப்பூக் கியாழஞ்செய்து, கடித்திட்டு விருசாமமரைத்துக்கொண்டு கருவானகுங்குமப்பூ கியாழஞ்செய்து, குடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டுநலங்கவேகுன்றிபோலுருண்டைசெய்யே.

உருண்டைசெய்துநிழலுலர்த்தி செப்பில்வைத்து உத்தமனேமுலைப்பாலில் கொடுத்தாயானால், தொண்டையுறுசேத்துமங்க டொண்ணூற்றாறுந்தொலைந்துவிடுஞ்சன்னியெல்லாஞ்சொல்லாதோடும், மண்டைகட்டுரூலைமுதனீர்த்தோஷங்கள் மயக்கமொடுசேத்துமம் மாண்டுபோகும், சண்டையிட்டுவந்ததொரு வலிப்பிசுவுஞ் சண்ணுண்டு போகுமடா சொல்லக்கேளே. (௫௭)

## பூமணிக்குளிகை.

கேளடாபூமணிதான் சொல்லக்கேளு கிருலைபாம் ரோகணியுமிலுப்பைப்பூவும், நாளடாவாளமது ரொட்டிசேர்த்து நலமானகுமரிச்சா றதனாலாட்டி, வேளடாநாற்சாம மரைத்துக்கொண்டு விதமானதூதுளங்காய்ப் போலுருட்டித், தாளடாநிழலுலர்த்திச் செப்பில்வைத்துத் தளமானவிஞ்சிரசந் தேனுங்கூட்டே. (௫௮)

கூட்டியமாத்திரைதா னொன்றுதேய்த்துக் குழப்பியேகாலமே கொடுத்தாற்கேளு, நாட்டியதோர்சன்னிசுரமெல்லாந்தீரும் நலமானவிடாசுரமும் நாடாதோடும், தீட்டியதோருள்ளியென்ற தைலத்தூட்டத் திறமானதோஷமெல்லாந் தீரும்தீரும், வாட்டியேயெண்ணையிலே கொடுத்தாயானால் வாங்கிவிடும்வாயுவெல்லாம் மாண்டுபோமே.

## அர்த்தனாரீஸ்வரம்.

போமப்பாஅர்த்தனாரி சூரணந்தான்கேளு புகழானசூதமொடுநாவிகெந்தி, நாமப்பாவெண்காரம்சமனாய்த்தூக்கி நலமானகொச்சியிலைச் சாற்றினாலே, வேமப்பாவிருசாம மரைத்துக்கொண்டு விதமானகுகைபிலிட்டுச் சீலைசெய்து, தாமப்பாமண்செய்து சட்டிக்குள்ளேதயவாகவுப்பையிட்டுக் குகையையவைவையே. (௬0)

வைத்தலேமேலுமந்த வுப்பைக்கொட்டி வாகாகமேற்சட்டிகொண்டுமூடி, தைத்ததிலேசீலைசெய் தடுப்பிலேற்றித் தப்பாமற்கமலவன்னி நாலுசாமம், நைத்ததிலேயாறவிட் டெடுத்துக்கொண்டு நலமான செங்கழுநீர் சாற்றினாலே, பைத்ததிலேநாற்சாமமாட்டிக்கொண்டு பருவமுடனெச்சிரசம் விட்டேயாட்டே. (சுக)

ஆட்டப்பாநாற்சாமம் பாகசாற்றால் அப்பனேநாற்சாம மாட்டிக்கொண்டு, நாட்டப்பாரவிமுகத்திலுலர்த்தபின்பு நன்றாகக்குழலடைத்து வைத்துக்கொண்டு, மூட்டப்பா பணவெடைதூள் சாற்றிவிட்டு முறையாகக்கொடுத்திடவேசுரங்கள் தீரும், காட்டப்பாவிருபுரத்தோர்புறந்தானிற்குங் கருவானமுன்சாற்றி னசியம்பண்ணே. (சுஉ)

பண்ணப்பாஒருபுறத்திற் சுரந்தானிற்கும் பக்குவமாய் மறுபுறத்தினசியம்பண்ண, தண்ணப்பாவிருபுறமுந் தணிந்துபோகுந் தப்பாது ஆட்டுப்பாற் கஞ்சிகொள்ள, நண்ணப்பா புலத்தியற்காய்ச்சொன்னேன்கேணீ நாட்டி இள்ளோரிதையறிந்து யார்தான்செய்வார், கண்ணப்பா வொளிப்பில்லை சொல்லிவிட்டேன் கருவானவைத்தியர்க்குக் கருணைக்காணே. (சுஙு)

சிலோதாரிமணி.

காணப்பாசிலோதாரி மணியைக்கேளு கனத்த*பொரிதிரிகடுகு படியொவ்வொன்று, காணப்பாகடலுரையுஞ் சூரைவித்து நலமாகவிந்துப்பு காயமொன்று, மாணப்பாநேர்வாள மிரண்டுங்கூட்டி வகைபத்துமிளநீரிற் சாமமாட்டி, பேணப்பாவிலந்தைவிதைப் பிரமாணந்தான் பிசகாமனிழலுலர்த்திச் செப்பில்வையே (சுச)

வைத்தப்பாவிஞ்சிநீர் தேனுங்கூட்டி வளமானமாத்திரையைக் கொடுத்தாயானால், சத்தப்பாவாயுவொடு வாதமெல்லாஞ் சாந்தமாம் பித்தமெல்லாங் கீழ்சாடும், வைத்தப்பாமதுவிலே யிட்டாயானால் மாந்தமொடுவுப்பிசமும் வாங்கிப்போகும், எய்த்தப்பாநீரடைப்புசதையடைப்புதீரு மிதமானசிலோதாரி யென்றுகாணே. (சுரு)

கரிசாலைலேகியம்.

காணப்பாபாண்டுவகையாவும்போகக் கரிசாலைலேகியந்தான்சொல்லக்கேளு, நாணப்பாபொற்கைபான் சாறுபடியிரண்டு நலமான நெருஞ்சிரசம் படியிரண்டு, வாணப்பாசிறுகீரைச் சாறுபடியொன்று

* பொரி வெண்காரம்.

வளமானபொடுதலைநீர் படிதானென்று, தாணப்பாகீழ்க்காயினெல்லி ச்சாறு தருவானசெருப்படிநீர் படிதானென்றே. (௬௬)

ஓரப்பாகியாழவகை சொல்லக்கேளு உரமானகாவல்கருங்காலி பத்தி, ஒன்றப்பாதென்னம்பூ வகையொன்றுக்கு ஓர்பலந்தான்பஞ் சணன்று யிடித்துப்போட்டுக், கண்டபாதூணிநீ ரெட்டொன்றுக்கி க் கருவானசாற்றிலுள்ளே கருத்தாய்வைத்துக், சிண்டப்பாசமமாக் கி யிறக்கிக்கொண்டு கெணிதமுடன் கருசானசாற்றிற்சேரே. (௬௭)

சேர்க்கவின்னங் கியாழமொன்றுசொல்லக்கேளு செப்புகிறேன் யிளகொடியிளகரணைமூலம், மார்க்கமாம்அவுரியொடு சிற்றாமுட்டி வ ளமானபேராமுட்டி விலாயிச்சோடு, தீர்க்கமாய்ப்பலமூன்று நிறுத்து க்கொண்டுதிறமாகவிடித்ததனை தூணிநீரில், சேர்க்கவேசோடசத்தோ டொன்றாய்க்காய்ச்சி செருதேமுங்கியாழந்தன்னிற்கூட்டே. (௬௮)

கூட்டுவாய்பனைவெல்லம் பலந்தானெட்டு கூறுணகன்னல்வெல் லம் பலந்தானெட்டு, மாட்டுவாயாவின்பாற் படிதானொன்று வளமாகக்க ரைத்துவிட்டுச் சொல்லக்கேளு, காட்டுவாயடுப்பேற்றிப்பாகுசெய்து கருவானசீரகமுமேலங்கிராம்பு, நீட்டுவாய்சாதிக்காய் சாதிப்பத்திரி யினைவாகவோமந்துரோசாணியாமே. (௬௯)

ஆமப்பாநாகப்பூ கற்கடகசிங்கி அப்பனேகோஷ்டமோ டக்கி ராகாரம், தாமப்பாமதுரமோடு தாளிசப்பத்திரி தப்பாமற் றிரிகடுகு திரிபலாதி, நாமப்பாவகையொன்றிற் பலந்தானொன்று நலமாகச்சூர ணித்துமுன்பாகில்தூவி, வேமப்பாசின்னடையிலேயாவினெய்தான் வி ரைவிலரைப்படிவிதம் விட்டுக்கிண்டே. (௭௰)

கிண்டப்பாதேனதிலே படிதான்விட்டுக் கிருபையொடுதிரிலோ கச் செந்தூரந்தான், தண்டப்பாபலமொன்றுகூடப்போட்டுத் தப்பா மல் *மண்டூரம்பலமொன்றப்பா, மண்டப்பாகிண்டியதை மெழுகாய் வாங்கி மகத்தானபுன்னைக்கா யளவேவிதம், கொண்டப்பாமண்டல ந்தான் சென்றதானுற் கூறுகெட்டவெண்பாண்டஞ்சிவக்கலாச்சே ()

ஆச்சப்பா பாண்டுவகை யாவும்போகு மப்பனே பித்தவெட் டைக் கைகாலோச்சல், சாச்சப்பாகாந்தலுடனெரிவுபோகுங்கனமா

() மண்டூரம் பழஞ்செங்கற்கிட்டம்.

னவாந்தியொடு மயக்கந்தூக்கம், ஓச்சப்பாவிக்கமொடு நீர்ச்சுரப்பு-முத்தமனே கிராணியெல்லாமொழிந்துபோகும், நீச்சப்பாவரோசிய ங்களெல்லாம்போகும்-நிசமான * அசுவகெந்தித் தைலமூழ்கே. எஉ

கண்டாத்திரிலேகியம்.

மூழ்கவேகண்டாத்திரி லேகியஞ்சொல்வேன் முக்கியமாய் யிஞ் சிரசம்படிதானென்று, நீழ்கவேகண்டங்கத் திரியின்சாறு நினைவாகப் படியொன்று கூடவிட்டுத், தாழ்கவேநெருஞ்சிநீர்ப் படிதானென்று தப்பாமல்முள்ளங்கிப் படிநீர்விட்டு, வீழ்கவேபழச்சாறு படிதான் விட்டு வியனானவாவின்பாற் படியிரண்டே. எங

ரண்டானபனைவெல்லாம் பலந்தானெட்டு நணுகியதையடுப்பே ற்றி பாகுசேரிற், குன்றான திரிகடுகு சீரகமுமேலங் குலவும்வாய்விள ங்கங் கிராம்புதாளிசம், நன்றாகப்பலமொன்று சூரணித்து நலமுட னேகாற்படியான் தேனும்வாரே. எச

வார்த்தப்பாகிண்டியதை மெழுகுபோல வளமான லேகியத் தைப் பதனம்பண்ணு, பார்த்தப்பாபாக்களவு வீதமாகப் ப்தருமலி ருநேரங் கொள்ளுங்காலங், காத்தப்பாமண்டலந்தான் கொண்டாயா னாற் கலங்காதேவாதமொடு வாயுவெல்லாம், பேர்த்துநற்பித்தமொ டுவாந்திசூலைப் புகழுநல்வலியிசுவும் பறந்துபோமே. எரு

போய்ப்பாரேசிங்கங்க ளன்னதோஷம் பொறுக்காதகுன்மமெட் டும் பொருமல்விக்கல், சாமப்பாபித்தத்தி னெரிவிதெல்லாம் சாடிவி டுங்கடுப்புவலி சாந்தமாகும், நாமப்பாபித்தத்தின் கபாலகுத்தல் நா டாதுமயக்கமெலா நடுங்கியோடும், தேமப்பாகுமரியிட தைலமூழ்கி ல் திறமானபித்தநோய்த் தீருப்பாரே. எசு

பஞ்சதீபாக்கினிலேகியம்.

பாரப்பாபஞ்ச தீபாக்கினியென்னப் பகருகின்ற லேகியந்தான் சொல்லக்கேளு, ஆரப்பாதிரிகடுகுமேலஞ்சீரகம் அப்பனேவகையொ ன்று பலந்தானென்றும், பேரப்பாவிளவறுப்பாய்ச் சூரணித்துப்பெ ரிதானவாவின்பாற் படியிரண்டு, சேரப்பாபனைவெல்லம் பலந்தானெ ட்டுச் சிறப்பாகக் கரைத்ததிலே பாகுசெய்யே. எஎ

செய்யப்பாசூரணத்தைத் தூவிக்கிண்டு திறமானதேனெய்தா னுரியுழக்கு, கையப்பாவிட்டதிலே கிண்டிக்கிண்டிக் கருவாகமெழுகு பதமாகவாங்கி, மையப்பாக்களவுமிருநேரந்தான் மைந்தனேமண்ட

---

* அசுவகெந்தி - அமுக்கரா.

லந்தான் கொண்டாயானல், தையப்பாதீருகின்றவியாதிகேளு தரு வானவாய்வோடுவாதமாமே. எஅ

ஆமப்பாவுஷ்ணங்கள் பித்தவாயு அப்பனேசரீரத்தி லுளவுகுத்து, போமப்பாவலிகடுப்பு மெரிச்சல்பேதி பொருமலுடன்வாயுவென்ற கிராணிதீரும், வேமப்பாவலிகடுப்பா மஸ்திவெட்டை விருந்தானவாந்தியெல்லாம் விழலாய்ப்போகுஞ், சாமப்பாவாக்கினிட தைலமூழ்கு சகலசுரம்விட்டோடுஞ் சார்புபாரே. எகூ

## கண்டங்கத்திரிலேகியம்.

சார்வானலேகியந்தா னென்றுகேளு சாற்றுகிறேன் கண்டங்கத்திரிதூக்கம்பாரு, ஆர்வாகவிடித்ததனைத் தூணிநீரில் அப்பனேயெட்டொன்றாய்க் காய்ச்சிவிட்டுச், சேர்வாகப்பனைவெல்லம் பலந்தான்பத்துச் சேர்த்ததிலேபால்படிதான் பாகுசேரில், தார்வாகத் திரிகடுகுதிரிபலாதி தருவானவாய்விளங்கமோமமாமே. அ0

ஓமமொடுகுரோசானி லவங்கப்பட்டை உத்தமனேசிரகமு நறுக்குமூலம், காமமோடத்திதிப்பிலியுங் கோஷ்டம் நலமர்னதாளிருமுமக்கிராகாரம், வாமமொடுவகையொன்று பலந்தானென்று வளமாகச்சூரணித்துப் பாகிற்றூவி, சேமமோடாவினெய்ப் படிகால்விட்டுத் திறமானதேனதிலே படிகால்வாரே. அக

வார்த்ததிலேகிண்டியது மெழுகுபோலே வளமானலேகியம் பாக்களவுவிதம், பார்த்ததிலேயிருநேரங் கொண்டாயானாற் பறக்குமடாகழும்வாதம் பாரிச்சூலே, தேற்றியேகிருமியொடு புழுக்களெல்லாந் தேகத்தைவிட்டோடுங் கர்ப்பவாயு, சாற்றதிலேயுஷ்ணநோய் பித்தமெல்லாஞ் சாரரதுசிந்தாதி லேகியங்கேளே. அஉ

## சிந்தாதிலேகியம்.

கேளப்பாவாறுதிங்கள் சென்றகாடி கிருபையாய்ப் படிபத்தும் புளித்தமோரும், நாளப்பாபடிபத்துக் கூடவிட்டு நலமானபுளியிலே தூக்கிடித்துப்போட்டுக், கேளப்பா துருப்பிடித்த விரும்பெடைதான் போட்டுக்கொதிக்கவைத்து எட்டொன்றாயிடித்துக்கொண்டு, வேளப்பாகையானீர்படிதானிரண்டு விருதானவிஞ்சிரசம் படிதானென்றே

ஒன்றானயழச்சாறுபடிதானென்று உத்தமனேநெஞ்சிரசம் படிதானென்று, சென்றானசிறுகீரைபடிதானென்று செருப்படிதான்படியொன்று தென்னம்பூநீர், டண்டாடபடியொன்று கீழாநெல்லி பத

ருமற்படியொன்று கூடச்சேர்த்து, கண்டானவாவின்பால் படிதானு துகருவான்பணவெல்லம் பலந்தான்பத்தே. அச

பத்தாகக்கரைத்துவிட்டுப் பாகுசேரில் பக்குவமாங்கடைச்சரக்கு திரிகடுகுவோமம், நந்தானதிரிபல கோஷ்டமாஞ்சில் நலமான சீரகம்வால்மிளகுஏலம், கைத்தானகிராம்புதாளிசபத்திரி கருவானலவுங்கத்தோடானைத்திப்பிலி, ஒத்தானபலமொன்றுதூக்கிக்கொண்டு உருவாகயிளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே அடு

செய்யப்பாமுன்பாகிற்றாவிக்கிண்டிச் செயமாகவாவினெய் படிதான்வாரு, கொய்யப்பாதேனதிலே படிதான்வாரு குழம்பாகலேகியத்தைப்பதனம்பண்ணு, பையப்பாவிருகழஞ்சியிருநேரங் கொள்ளப்பறக்குமடாபாண்டுவகையெல்லாந்தீரும், மையப்பாபித்த வெட்டைபித்தவாய்வு மயக்கமோடக்கினியாமந்தந்தானே. அசு

மந்தமொடு வெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோல்பறக்குமடாமண்டலத்தில், அந்தமாமகோதரம்பீலிகையாம்வாயு அப்பனே சோகையோடு கிராணிமூலம், பொந்தமாமுடம்பெரிப் பிளேப்போடிளைபொருமலுடனுப்பிசங்கா ளிறைச்சல்தீரும், பந்தமாம் பத்தியங்கள்நன்றாய்க்காத்துப் பக்குவமாமண்டலத்தில் சொல்லக்கேளே.

மகாவில்வாதி லேகியம்.

சொல்லக்கேள்புலத்தியனே யின்னமொன்று சுறுக்காகநோய்க்கெல்லா மகாவில்வாதி, வல்லக்கேள்வில்வத்தின்மூலமப்பா வளமாகப்பலம்நூறு வெட்டிவந்து, நல்லக்கேள் விலாமிச்சைவகைபாதிரி நலமாகநன்னாரிபருவிளாவும், அலலக்கேள்சிற்றாமல்லிபேராமல்லி அழகாசிறுவிலாவேருமாமே. அஅ

ஆமப்பாசிறுவாகைமுன்னையோடு அப்பனேமுசுமுசுக்கைகொடுவேலிதேற்றான், நாயப்பாவகையென்று பலமூன்றாகும் நலமாகவிடித்தேயிரு தூணிநீரில், வேமப்பாய்வெட்டொன்றாய் வடித்துக்கொண்டு வெருளாதேகொம்மட்டிப்பழச்சாறிஞ்சி, காமப்பாசாறுபடியொன்றுவிட்டுக் கலங்காதேசர்க்கரைசேர் நாலுமாமே. அகூ

ஆமப்பாவாவின்பால்படிதான்ரண்டு அப்பனே கரைத்தெல்லாம் பாகுசேரில், போமப்பாதிரிகடுகுதிரிபலாதி புகழானலவுங்கமோடேலங் கோஷ்டம், நாமப்பாமதுரகெந்தம் சீரம்ரண்டு நலமானவிலவங்கமொடு சகஸ்திரபேதி, வாமப்வாதாளிசம்செண்பகப்பூ அக்கிராகாரம் வளமானமல்லிவிளா வரிசிதேக்கே. கூ0

தேக்கான முந்திரிகைபேரீச்சுவில்வந் திறமான வாலுளுவை மாஞ்சில் சிறுநாகம், பாங்கானநாகணமும் பருத்திவித்தும் பகருவே * னிம்பவித் திலுப்பைப்பூவு, தூக்கானவகையொன்று பலமொன்று கச் சூரணித்துப்பாகிலேதூவிக்கிண்டி, நீக்கானதேனதிலேபடியரை தான்விட்டு நினைவாகவாவினெய் படியரைதான்வாரே. கூக

வார்த்தப்பாமெழுகுமேல் கிண்டிக்கிண்டி வளமான லேகியத் தைப் பதனம்பண்ணு, கோத்தப்பாலேகியத்தைப் புன்னைக்காயளவு கொண்டுவாவிருநேரம் தீரும்நோய்கள், சாற்றப்பாசுவாசமுடனரோ சியங்கள் தவறுதேவிக்கமொடு சத்தியெரிப்பாண்டு, காத்தப்பாவிஷ பாண்டு வயிற்றெரிச்சல் கனமானவுப்பிசங்கள் கிராணிபோமே. கூஉ

போமப்பாகைகாலிலெரிவுகாந்தல் புகலும்வெள்ளோக்காள ம ன்னதோஷம், நாமப்பாசூலையொடு சயத்தானெட்டு நலமானசிரங்களா று பத்துநாலுந், தாமப்பாபித்தமென்ற நாற்பதுந்தான் தளமான வஸ்திசுரமானவெல்லாம், ஆமப்பாவதிசார மூள்ளிரோகம் அருளா னலோகம்வைத்துக் கொள்ளுக்கொள்ளே. கூங

## கூழ்பாண்டலேகியம்.

கொள்ளவேகூழ்பாண்டலேகியந்தான் குணமான கூழ்ப்படிசாறு படிநாலு, விள்ளவேதாழையிட விழுதின்சாறு விருதானபடியொன் று சென்னம்பூவொன்று, தள்ளவேபழச்சாறு படிதானொன்று தள மானவாவின்பால் படிதானிரண்டு, பள்ளவே சர்க்கரைதான் பலமோ பத்து பதறுமற் கரைத்ததனை பாகுசேரே. கூச

சேருமேசிரகமல்லிகோஷ்டம் திறமானமிளகுமா சிக்காயேலம், காருமேசாதிக்கா சாதிபத்திரி கருவானமதுரமொடு தாளிசந்தான், வாருமேஒருவகைக்குப் பலமொன்றாக வகையாகச்சூரணித்துப் பாகி ற்றூவி, நேருமேதேனின்படி யரைதான்விட்டு நினைவாகக் கூழ்போ லேகிண்டிவாங்கே. கூரு

வாங்கியேபுன்னைக்கா யளவுவீதம் வளமானலேகியத்தைக்கொ ண்டாயானால், நீங்குமேகாமாலை சோகையெல்லா நீங்காதவஸ்திரசுர மஸ்திவெட்டை, தாங்கியதோர்ப்ரமியங்கள் வெள்ளைவீழ்தல் தளமா கும் தேகபுஷ்டிவிந்துவூறும், பாங்கியேயுஷ்ணநோய் நீர்ச்சுருக்கும் பறக்குப்புளிபுகையிலைநீ தள்ளிக்கொள்ளே. கூசு

## சரபங்கவில்வாதிலேகியம்.

கொள்ளவேயின்னமொன்று சொல்லக்கேளு குணமானசரபங்க வில்வாதிலேகியம், வில்வவேர்வமட்காவேர்விருதானசங்கவேர்வகை

கூ

* நிம்பவித்து-வேப்பங்கொட்டை.

க்குத்தூக்கு, தெள்ளவேகூறுகின்ற சிற்ருமல்லி திறமானபேர்மல்லி * கூந்தல்முள்ளி, நள்ளவேசாரணைவேர் கண்டங்காலி நலமானவிலா மிச்சை சிந்தில்தானே. கஎ

தானென்றகொடிவேலிபொன்முசுட்டை தளமானநன்னாரிசிறு தேக்கப்பா, வாவென்றமூலிகைவகை பதின்மூன்றுந்தான் வளமான பலமஞ்சு இடித்துநைய, வேனென்றவாற்றுநீர் தூணிவிட்டு விளங்க வேயெட்டொன்றாய் நிறுத்துக்கொண்டு, கானென்ற கன்னல்வெல்ல ஞ்சேர்தானுலுங் கருவானவாவின்பால் படியிரண்டுசேரே. கஅ

சேர்த்தப்பாகரைத்ததிலே பாகுசெய்து திரமானதிரிகடுகு திரி பலாதி, வார்த்ததிலேகிராம்பேல மிருசீரகந்தானவளமான கோஷ்டந் தாளிசப்பத்திரி, தார்த்ததிலேயோமம்ரண்டாத்தைரண்டு தளமான கொத்தமல்லி லவங்கப்பட்டை, ஆர்த்ததிலேயக்கிராகார மாத்தைதி ப்பிலி அப்பனேவால்மிளகு சாதிக்காயாமே. கக

ஆமப்பாவகையொன்று பலமொன்றாக அப்பனேயிளவருப்பாய் சூரணித்துச், சேரப்பாகிலே தூவிக்கிண்டித், திறமானதேன் படிநெ ய்யரைதான்விட்டு நாமப்பாகுழம்புபோல் வாங்கிவைத்து நலமாகக் கழஞ்சிநிறையிருநேரங்கொள்ள, தாமப்பா பித்தவெட்டை பாண்டு ஆறுந் தவறுண்டுப்போகுமடா சயமெட்டுந்தானே. ௩௰

தானென்றகுன்மமெட்டுங் கிராணியாறுந் தடமானவாய்கசப்பு வெள்ளோக்காளந், தேனென்றவாயூறலக்கினிமந்தந் திறமானசூலை யொடு கைகால்காந்தல், பானென்றபித்தமது நாற்பதுந்தான்பறக்கும டாமண்டலத்தில் பரிந்துகொள்ளு, வேனென்றபத்தியந்தான் புளி கசப்பு விளக்கியதோர்புகையோடு பெண்ணுந்தள்ளே. ௩௧

தள்ளப்பாதிரிலோகம் வைத்துக்கொள்ளு தளமான வாலாசச் செந்தூரந்தான், கொள்ளப்பாலோக செந்தூரந்தானுங் குறையாமற் பணவெடைதான் வைத்துக்கொள்ளு, தள்ளப்பாபித்தமென்றதெல் லாம்போகுந் தருவானசேத்துமங்கள் தொண்ணூற்றாறும், விள்ளப் பாகடல்புக்குங் கண்டுகொள்ளு விருதாகவின்னமொரு சேதிகேளே.

## கண்டங்கத்திரிலேகியம்.

கௌப்பாகண்டங்கத்திரியான கெடிதானலேகியந்தான் சொல் லக்கேளு, நாளப்பாவாற்றுமுள்ளிபலந்தானாறு நலமானகரிமுள்ளி

---

* கூந்தல் - முதியார் கூந்தல்.

யதற்குப்பாதி, தாளப்பாசிற்றுமுட்டி பேராமுட்டி தளமானமிளகர ணேகொடிவேலிகளாகவும், ஆளப்பாவாதண்டைச்சிறுகாஞ்சோரி அப் பனேவிலாமிச்சை முட்காவேளையாமே. ௱௩

ஆமப்பாகோரையுடனுத்தாமணியும் அப்பனேகழற் கொடியு மாவிலிங்கம், தாமப்பாவகைபொன்று பலமொன்றாகத்தவருமவிடித் தேயிரு தூணிநீரில், வேமப்பாவெட்டொன்று பிறுத்துவாங்கி விரு தானகொம்மட்டிம்பழநற்சாறு, தாமப்பாபடியரையுங் கூடவிட்டுத் தளமானவாவின்பால் படிதான்ரண்டே. ௱௪

ரண்டானசர்க்கரைதான் பலமுமைந்து நிணவாகக் கரைத்ததி லே பாகுசேரில், கண்டானகடைச்சரக்குசொல்லக்கேளுகருவானதி ரிகடுகுதிரிபலாதி, நன்றானசிங்கியிருவாதங்காணும் நலமானவரத்தை யக்கிராலவங்கப்பட்டை, பின்றானலவங்கஞ்சாதிக்காய்பத்திரிபோரத் தைலவங்பத்திரியுங்கூட்டே. ௱௫

கூட்டுவாய்வகையொன்று பலமொன்றாகக் கூசாமவிளவறுப்பா ய்ச்சூரணித்து, நாட்டுவாய்பாகிலேதூவிக்கிண்டி நலமாகத்தேண்படி நெய்யரைதான்விட்டு, காட்டுவாய்மெழுகுபோல கிண்டிகிண்டிக்கசக் காமல்பீங்கானில் வழித்துவைத்து, தீட்டுவாய்லேகியந்தான் புன்னை க்காய்வீதம் திறமாகமண்டலத்தில் தீருநோய்கள். ௱௬

கேளுதான்சயமெட்டும் குன்மமெட்டும் கெடியானவாதமென்ற ன்பதும்போம், நாளுகாணுரைப்பிளே விழிநீர்கோவை நாடாது இது வுமுதல் சழல்வாதங்கள், தாளுதான்கொர்ப்பவெட்டைகொர்ப்பசூலே தவறுண்டுபோகுமது புழுக்கமெல்லாம், ஆளுதான்தாளகமும்லோ கங்கூட்டி அடைவாகக்கொண்டுவரத்தீரும்பாரே. ௱௭

கபாடலேகியம்.

பாருமேகபாடலேகியத்தைச்சொல்வேன் பண்பானநாவலொடு வாசுலத்தி, சேருமேகருங்காலி யொதியம்பட்டை திறமாகப்பலம் பத்துநிறுத்துக்கொண்டு, சாருமேயிடித்துநையத் தூணிநீரில் தளமா கவளப்பேற்றி யெட்டொன்றாக்கி, வாருமேபனேவெல்லம் பலந்தான் பத்து வளமாகக்கரைத்ததனிற் பாகுசெய்யே. ௱௮

பாகிலேதூவுதற்குமருந்துகேளு பதருமல் கஞ்சாவைசுத்திசெய் து. பாகிலேபலமொன்று தூத்திக்கொண்டு பாங்கானமிளகுசுக்கு சீர கமுங்கூட, பாகிலேயோமமொடு குரோசானியோமம் பருவமாய்ச் சிங்கிகாட்டாத்திப்பூவும், பாகிலேவால்மிளகுசிறுநாகப்பூ பக்குவமா மல்லியோடேலமாகும். ௱௯

ஆகுமேகிராம்புடனே சாதிப்பத்திரி அடைவானசாதிக்காய் விடையந்திப்பிலி, நாகுமேவகையொன்று பலமொன்றாக நலமாகவிளவறுப்பாய்ச்சூரணித்து, வேகுமேபாகிலே தூவியேதான்வெகுசுறுக் காய்த்தேனெய்யும் விட்டுக்கிண்டி, தாகுமேபீங்கானில் பதனம்பண்ணித் தப்பாமல்மண்டலந்தான் பாக்களவுகொள்ளே. கக0

அளவாகக்கொண்டுவரத்தீரும்நோய்கள் அதிகமுள்ளசூசிகாகிராணிவாயு, பளுவானகடுப்புமுதற் பாண்டுகிராணி பாங்கான பேதியோடுஷ்ணவாயு, களவாசமூலத்தின் கிராணிவாயுகண்சாணுதோடுமதுமற்றவாயு, வளமாகக்கிராணியெல்லாந் தீரும்தீரும் மார்க்கமுடனின்னமொரு வரிசைபாரே. ககக

## திப்பிலிரசாயனம்.

பாருமேதிப்பிலிரசாயனஞ்சொல்வோன் பகருகின்ற திப்பிலியும்பலந்தான்பத்து, சேருமேமிளகுமஞ்சு சுக்குமஞ்சுதிறமானவிருசீரமோமம்ரண்டு, ஆருமேயரத்தைரண்டு தாளிசபத்திரி அடைவானலவக்கப்பத் திரியும்பட்டை, காருமேதிரிபலை லவங்கமேலங் கனமான கொடிவேலி பலமொன்றுதூக்கே. ககஉ

தூக்கியேயிளவறுப்பாய் சூரணித்துக் சுகமானசர்க்கரைதான் சமனாய்க்கூட்டித், தாக்கியேதேன்விட்டுப் பிசைந்துகொண்டு தப்பாமல்லெருகடிதான் கொள்ளுநப்போது, தேக்கியேயிளைப்போடே யீளைகாசம் திறமான சேத்துமநோய் தொண்ணூற்றாறும், நீங்கியேயுத்தரத்தின்வாயுவெல்லாம் நீங்கிவிடும்மண்டலத்தில்கினைவாய்பாரே.

## மஸ்துமிரசாயனம்.

பார்த்திடுவாய்புலத்தியனே மேகவகைதீரப் பண்பானமஸ்துமிரசாயனஞ்சொல்வேன், சேர்த்திடுவாய்சீனமுதலமுக்கராவேர் திறமானவகையொன்று பலம்பத்தாகும், சாற்றிடுவாய் நிலப்பனைவேர்பலந்தானைந்து தனமான தண்ணிவிட்டான் பலந்தான்ரண்டு, ஆற்றிடுவாய்நன்னாரிசங்குமூலம் அன்பானதிரிகடுகுதிரிபலையுமாமே. ககச

ஆமப்பாவங்கத்தோல் லவங்கப்பத்திரி அப்பனேசிறுநாகம்வாய்விளங்கம், போமப்பாமல்லியிருசீரகமோமம்புகழானகுரோசானி அரத்தைகெந்தம், நாமப்பாசிறுதேக்கு கண்டங்காலி நலமான கொடிவேலிவிலாமிச்சைமூலம், தாமப்பா தக்கோலம் வால்மிளகினோடு தளமானமுந்திரிகை பேரீச்சுக்கூட்டே. ககரு

கூட்டப்பாவெட்பாலை தாமரைக்கிழங் குலமானசாதிக்காகிராப்புபத்திரி, நாட்டப்பாநருவேம்பி னிலைவகைக்கு நலமாகப்பலமொன்றாகநிறுத்துக்கொண்டு காட்டப்பாவிளவறுப்பாய்ச் சூரணித்துக் கரு

வானகுங்குமப்பூ கோரோசனைகர்ப்பூரம், வாட்டப்பாகழஞ்சு நிறை
கூடச்சேர்த்து, வளமானகர்க்கரைசேர் நாலுவாங்கே. ககசு

வாங்கியேயாவின்பால்படிதானாறு வளமானசர்க்கரையைக்கரை
த்துக்கொண்டு, பாங்கியேபாகுபதமாகும்போது பதறாதே சூரணத்
தைகாய்ச்சிக்கொண்டு, தேங்கியேதேன்படிதானொன்றுவாரு திறமா
னவாவினெய் யரைதானப்பா, வாங்கியேமெழுகுபோல் கிண்டிக்கி
ண்டி வளமான பீங்கானில் பதனம்பண்ணே. ககஎ

பண்ணப்பாவிருநேரம் பாக்களவுகொள்ளப் பரிவுடனே தீருகின்
றவியாதிகேளு, புண்ணப்பாகிரந்தியோடுசூலைதீருப்புதுமையாங்கண்
டத்தில்மாலைதீரும், நண்ணப்பாவாய்வோடு வாதமெல்லாம் நாடாது
பிரமியங்கள் லிங்கப்புற்று, தண்ணப்பாசேத்துமநோய் தொண்ணூற்
றாறுந் தவறுண்டுபோகுமடா பத்தியங்காரே. ககஅ

## சவுபாக்கியசுண்டு.

காரப்பாவுலகத்தோர் நோய்களெல்லாங் கலங்குமடாசவுபாக்கி
யசுண்டியென்றால், நேரப்பாசுக்கதுதான் பலந்தானெட்டுநினைவாக
மேற்றோலைச்சீவிப்போட்டு, சாரப்பாமொச்சைவிதைப் பிரமாணந்தா
ன்தளமாகவேநறுக்கிப் புதுசட்டிக்குட், சேரப்பாசெம்முள்ளிச்செந்
திராயும் திறமானமுருக்கிலையுங் கரிசாலையாமே. கககூ

ஆமப்பாசிறுசெருப்புசாற்றிலாட்டி அப்பனேசாறுவகைபடி கா
ல்வீதம், நாமப்பாபுதுசட்டிச் சுக்கில்விட்டுநலமாக வெவ்வேறேபரவி
யுலர்த்தித், தாமப்பாலிடித்துநன்றாய்ச் சூரணித்து தளமாகவடிகொ
ண்டேயப்பால்வைத்து, போமப்பாதக்கோலம் வாலுளுவைவித்து பு
கழானகூகைநீறு * கரியபோளங்கூட்டே. கஉ0

கூட்டப்பாவாய்விளங்கந் தான்மிக்காய்நெல்லி கூறானதிப்பிலியு
ந்திப்பிலிமூலம், நாட்டப்பாவகையென்று பலந்தான்வாங்கி நலமாக
விளவறுப்பாய்ச் சூரணித்துக், கூட்டப்பாவமுக்குருபொன்முசுக்கை
குருவானகண்டங்கத் திரிநன்னாரி, நீட்டப்பாநிலப்பனையும் வகையொ
ன்றுக்கு நினைவாகப்பலமிரண்டு நிறுத்துக்கொள்ளே. கஉக

மெள்ளப்பாசுத்திசெப் திடித்துத்தூளாய்க் குணமாகவடிகொ
ண்டுவைத்துக்கொண்டு, விளளப்பாமூலவகைத் தூளொன்றாய்க் கூட்
டி விளங்கவேசர்க்கரைவயச் சமனாய்வாங்கி, நள்ளப்பாவாவின்பால்ப
டியிரண்டில்நலமாகச் சர்க்கரையைக்கரைத்துக்கொண்டு, அள்ளப்பா
வடுப்பேற்றிப்பாகமானால் அப்பனேமுன்தூளைக்கொட்டிக்கிண்டே.

---

* கரியபோளம்-கறுப்புக்குங்கிலியம்.

இண்டப்பா தூளாகநன்றாய்க்கிண்டிக்-கிருபையாய்ப் புதுக்கலசந்தனிலடைத்து, கண்டப்பாவெருகடிதா னிருநேரங்கொள்ள-நலமாகத்தீருநோய் நவிலக்கேளு, கண்டப்பாகிராணிவகை யெல்லாந்தீரும் கருவானபிரமியங்கள் சூசிகாவாயு, கண்டப்பாவாதமொடு பித்தமெல்லாங்-காணுமலோடுமடா கண்டுகொள்ளே. ௧௨௩

கொள்ளவேயந்திரமாம் வாயுதீரும்-கூறுனமேகவகை வாதசூலை கொள்ளவேயக்கினியாமந்தந்தீரும்-கூர்ப்பான வாயூரல் வாய்கசப்பு, கொள்ளவேவயிற்றிலுள்ள வியாதியெல்லாம்-குடிபோகுஞ் சவுபாக்கிய சுண்டிகண்டால், கொள்ளவேபுளிகசப்புப் பத்தியந்தான்-கூறுனபுகையோடு பெண்ணுந்தள்ளே. ௧௨௪

தள்ளப்பாவக்கினியாஞ்சூரணத்தைச்சொல்வேன்-தளமானகொடிவேலி திரிகடுகுவோமம், விள்ளப்பா சிறுதேக்குயானைத்திப்பிலியுங்கோஷ்டம்-விளங்கியதோரிரண்டுப்புவகையொன்றுபலந்தான், நள்ளப்பாகாயங்கால் வசம்புகால்தான்-நலமானகடுகுபொடியரைப்பலந்தான்கூட்டித், தெள்ளப்பாவிளவறுப்பாய்ச்சூரணித்துத் - திறமானசீனிசமங் கூட்டிக்கொள்ளே. ௧௨௫

## திரிராட்சதசூரணம்.

கொள்ளவேவெருகடித்தூள் வெந்நீரிற்கொள்ளக் - கூறுனகிராணிவகையுதிரவாயு, பள்ளவேமுகவாயு வாதமெல்லாம் - பறக்குமது திரிராட்சதசூரணங்கேள், தள்ளவேமுந்திரிகைபேரீச்சம் பழந்தான் தளமானவதிமதுரம் முக்காவேளை, நல்லவேநெற்பொரியு * முத்தக்காசு-நலமானவேலமொடு கிராம்புகூட்டீட. ௧௨௬

கூட்டுவாய்கொத்தமல்லி மிலகுவேலி-கூறுனதிப்பிலியுங் கூகைலவங்கப்பத்திரி, ஆட்டுவாய்வகையொன்று பலமொன்றாக அப்பனே சூரணித்துச் சர்க்கரையைகூட்டி, வேட்டுவாய்வெருகடிதான் தேனிற்கொள்ள-வெகுசுறுக்காய்ச்சொல்லுகிறேன்விளம்பக்கேளே. ௧௨௭

கேளப்பாயந்திரவாய் பாண்டுரோகம் கெடிதான தாபசுரமயக்கந்தூக்கம், வாளப்பாபித்தவகை நாற்பதுந்தான் - வளமானவரோசிகங்க ளன்னத்தோஷம், நாளப்பாவுஷ்ணநோய் சேத்துமங்கள் நலமானவக்கினியா மந்தவாய்வு, தாளப்பாகையெரிவு காந்தலெல்லாம் தவறுண்டுபோகுமடா நெய்யிற்கொள்ளே. ௧௨௮

---

* முத்தக்காசு-கோரைக் கிழங்கு.

## அசுவகெந்திசூரணம்.

கொள்ளவேயசுவகெந்தி சூரணங்கேள்—குலமானலவங்கமொன்று நாரப்பூண்டு, தள்ளவேயேலம்வால் மிளகோரெட்டு-தளமானதிப்பிலிபீரெட்டுசுக்கு, விள்ளவேமுப்பத்திரண்டுங்கூட்டி - விசையானவசுவகெந்தி யறுபத்துநாலு, நள்ளவேசுத்திசெய் துலர்த்திக்கொண்டு நளமாகவிளவறுப்பாய்ச் சூரண்ந்தான்செய்யே. கஉகூ

செய்யப்பாசமனாசச் சர்க்கரையைக்கூட்டித் திறமானவாவின்பால் நெய்யிற்கொள்ள, கையப்பாவெருகடிதான் கொள்ளும்போது தனமானமேகவகை யெல்லாந்தீரும், மெய்யப்பாவஸ்திசுரம் வெட்டைபோகும்-மேலானசுவாசமோ டீளைபோகும் தையப்பாமேகசுத்தின்பாண்டுபோகும் - தளமான வூறலெல்லாஞ் சாராதென்றே. கஙo

## கண்டாத்திரிசூரணம்.

சாரவேகண்டாத்திரி சூரணஞ்சொல்வேன்-கருவானவிஞ்சியது பலந்தான் பத்து, சேரவேமேற்றோலைப் போக்கிப்போட்டுச் சிறுகவேநறுக்கியதைப் பழச்சாறூட்டித், காரவேநாமென்று ஊறப்போட்டுத்தவறாமல்மறுநாள்தான் ரவியுலர்த்தி, ஆரவேசீரகமும் பலந்தானென்று அப்பனேமுன்போலே பழச்சாறூட்டே. கஙக

ஊட்டியேமறுநாள்தான் காயப்போட்டு உத்தமனே மிளகொடு தாளிசப்பத்திரி, நாட்டியேதிப்பிலியின் மூலங்கிராம்பு நலமானகோஷ்டமொடுவாய்விளங்கம், வாட்டியேபிளவறுப்பாய்ச்சூரணித்துவளமானசர்க்கரைதான் சமனாய்க்கூட்டி, நீட்டியேவெருகடிதான்கொண்டாயானால் நீங்கிவிடும்பித்தமுதல் வாய்வுபோமே. கஙஉ

போமப்பாவரோசிகங்களன்னத்தோஷம் புகழான பித்தவெட்டை பொருமல்விம்மல், நாமப்பாவாயுவொடு வாதமெல்லாம்நாடாது சூலையெல்லாநளினமாகும், சேமப்பாவயிற்றிலுள்ள வியாதியெல்லாந்திறமாகத்தீருமடாபத்யங்கூர்வேன், நாமப்பாவுலகோர்க்காயிரங்கிச் சொன்னோம் நலமானசூரணத்தை நாட்டிப்பாரே. கஙங

## தாளிசப்பத்திரிச்சூரணம்.

நாட்டியேசொல்லுகிறேன் புலத்தியனேயையா நலமானதாளிசப்பத்திரிச்சூரணந்தான், காட்டியேதாளிசப்பத்திரி பலந்தான்பத்து கருவானதிரிகடுகு திரிபலாதி, நீட்டியேகோஷ்டமோ டக்கிராகாரம் நிணைவாகவத்தி திப்பிலிசீரகம், கூட்டியேகொத்தமல்லி வாய்விளங்கங் கூருணகிராம்பேலஞ் சாதிக்காயே. கஙச

காயோடுபத்திரியு மாஞ்சில்சோம்பு கருவானவாயமிளகு லவங்கப்பட்டை, தாயோடுவிவையெல்லாம் பலமொன்ருகத் தவருமல்சூரணித்து வடியேகொண்டு, சேயோடுசர்க்கரைதான் சமனுய்க்கூட்டித் திறமாகபிசைந்துகொண்டு வெருகடிதானேரம், வாயோடுமண்டலந் தான்கொண்டாளுல் வாங்குமடாக்ஷயகாச மீளேபோமே. கஙரு

போமடாவஸ்திசுர மஸ்திவெட்டை பொறுக்காத நீர்க்காகம் புண்ணுநெஞ்சில், நாமடாபித்தவெட்டை பித்தபாண்டு நாடாதுகிராணிவகையெல்லாந்தீரும், தாமடாவரோசிகங்க ளன்னத்தோஷம் தளராதவிம்மலொடு விக்கல்கக்கல், சாமடாகைகாலி லெரிவுகாந்தல் சாந்தமாம்புளியோடு புகையுந்தள்ளே. கஙசு

பஞ்சதீபாக்கினிச்சூரணம்.

தள்ளவேபஞ்சதீ பாக்கினியென்னுந் தளமான சூரணத்தைச் சொல்லக்கேளு, விள்ளவேதிரிகடுகோடேலஞ்சீரகமும்-விதமாக வகையொன்று பலமொன்ருக, நள்ளவேயிளவருப்பாய்ச் சூரணித்து நலமாகவடிகொண்டு சர்க்கரைதான்சேர்த்துத், தள்ளவே தேனெய்யில்வெருகடிதான்கொள்ளத் தாமாகத்தீரும்நோய் செப்பக்கேளே.

செப்புகிறே னுஷ்ணநோய் சூலவாய்வு சேர்ந்தபித்தவாயுவொடு சிலேத்மரோகம், தப்புகிறேன்பொருமலொடு செரியமாந்தம் தளமானமயக்கமொடு கிறுகிறுப்பு. வெப்புகிறேனஸ்திசுர மஸ்திவெட்டை வேருனமூலத்தின் வாய்வுதீரும், செப்புகிறேன்புளிகசப்பு புகையுந் தள்ளு-திறமானசூரணத்தைத் தெரிந்துகொள்ளே. கஙஅ

நிலவாகைச்சூரணம்.

மலமாகச்சூரணமொன்று சொல்லக்கேளு நின்ருனநிலவாகை சுக்குங்கூட்டிப், பிலமாகமிளகுவாய் விளங்கமோமம் பேராகவகைக்குவொரு பலமேதூக்கிச், சிலமாகரவிமுகத்திலுரைப்போட்டுச்-சிதருமவிடித்துச்சூரணந்தான்செய்து, தவமாகச்சர்க்கரைதான் சமனுய்க்கூட்டித் தவருமலிருநேரங்கொண்டாற்கேளே. கஙகூ

கேளப்பாவாயுவெனற தெல்லாம்போகும்-கெடியானபித்தமெல்லாங் கீழ்நோக்கிப்போகும், வாளப்பாவுஷ்ணநோ யெல்லாந்தீருமவளமானபொருமலொடு விம்மல்தீரும், நாளப்பாசேத்துமநோயெலலாம்தீரும் நலமானவிக்கலொடுவாந்திதீரும், தாளப்பாவுடம்பெரிவு சுவாசகாசந் தவறுண்டுபோகுமடா சாற்றக்கேளே. கசுய

சாற்றுகிறேனீரருகல் மலபந்தங்கள் தளராதவயிறுவிம்ம லிரும
ல்தீரும், தேற்றுகிறேன்குன்மமெட்டு மகோதரங்கள் தெளிவானவா
யுவெல்லாந்தீருந்தீரும், ஆற்றுகிறேன்கெர்ப்பவலி கெர்ப்ப ரோகம்
ஆச்சரியம் புழுக்களெல்லா மகன்றுபோகும், காற்றுகிறேன்வெந்நீரி
ற் கொண்டாயானால் கலங்காதேவயிற்றிலுள்ளவியாதிபோமே.

## வல்லாரைச்சூரணம்.

போமப்பாசூரணமொன்று சொல்லக்கேளு புதுமையாம் வல்லா
ரைப்பாலிற்போட்டு, நாமப்பாவித்துலர்த்திக் காயப்போட்டு நலமா
கச்சூரணித்துப் பலம்பத்தானால்; தாமப்பாகிராம்பேலஞ் சாதிக்கா
யும் தளமானபத்திரியு மாசக்காயும், தேமப்பாதாளிசப்பத்திரி திரிப
லாதி-திறமாகவிளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. கசஉ

செய்யப்பா வகையொன்று பலந்தானென்று திறமாகவிரண்டு
மொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு, வையப்பாசர்க்கரைதான் சமமாய்
க்கூட்டிப் பதறுமல்வெருகடிதா னெய்யிற்கொள்ள, தையப்பாமேக
மெல்லாம் தவறுண்டோபோய் சரீரத்திலுள்ளதெல்லாம் சாந்தமாகு
ம், கைபப்பாபிரமியங் கிரந்தியெல்லாம் கணமானவுஷ்ணநோய்காணு
தென்றே. கசங

காணுதுநீரருகல்நீரெரிப்பு கண்ணெரிவு கண்புகைச்சல் காணு
தோடும், மேதாணுமேயுடம்பெரிவு மூலச்சூடும் சுருக்கான நீர்ச்சூடும்
குளிர்ந்துபோகும், நாணுதுமதுமேகந் தந்திமேகமநாடாதுக்ஷயரோ
கம் நளினமாகும், கோணுதுதேகமெல்லாங் குளிர்ச்சிகாணும்கொண்
டுவாவப்பிரேகம் வைத்துக்கொள்ளே. கசச

## சஞ்சீவிச்சூரணம்.

கொள்ளவேசஞ்சீவிச்சூரணத்தைச்சொல்வேன் குணமானசீந்தி
லடித்தண்டுவாங்கி, விள்ளவேமேற்றோலை வாங்கிப்போட்டு வெருளா
தேநறுக்கியதையுலரப்போட்டுக், கள்ளவேயிடித்துநன்றாய்ச் சூரணி
த்துக் கருவாகவடிகொண்டு படித்தூள்வாங்கி, நள்ளவேமுந்நூற்றில்
சுத்திசெய்து நலமானபொடிபடிக்கு ஆவின்பாற்படியே. கசரு

படியாகவரைப்படிதான் சீனிபோட்டுப் பாங்காகவரவியுலர்த்தி
க்காய்ந்தபின்பு, அடியாகவுரலிலிட் டிடித்துக்கொண்டு-அப்பனேசா
திக்காய் சாதி பத்திரி, சடியாகவால்மிளகேலங்கிராம்பு கசகசாதாளி
சமுமாசக்காயும், வடிவாகவிளவறுப்பாய்ச் சூரணித்து வளமாகவ
கைக்கொரு பலந்தான்கூட்டே. கசசு

கூட்டியேயிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு குறையாம லாறுபலஞ் சீனிசேர்த்து, நாட்டியவெருகடிதா னெய்யிற் கொள்ள நலமாகத்திருநோய் நவிலக்கேளு, தாட்டிகமா மேகநீ ரிருபதும்போம் தளமானபிரமியங்கள் மேகமெல்லாம், வாட்டியே வற்றியதோர் தேகமெல்லாம் வளமாகுமஸ்திசுரம் வெட்டைபோமே. கஎ

மோமப்பாமூலத்தின்சூடுபோகும் பொல்லாதபித்தவகையெல் லாம்போகும், நாமப்பாகண்ணெரிவு கைகால்காந்தல் நாடாதுதேக மெல்லாங்குளிர்ச்சியாகும், தாமப்பாவூறலெல்லாம் தவறுண்டுப்போம் ததிமானகபாலத்தின் ரணங்கள்தீரும், வேமப்பாவாலாகச்செந்தூ ரந்தான் வெருகுசுறுக்காய்ப்பணவெடையப் பிரேகங்கொள்ளே. கசஅ

## ஏலாதிச்சூரணம்.

கொள்ளவேயேலாதிச்சூரணங்கேள் குணமான லவங்கமொன்று மிளகிரண்டு, விள்ளவேநாகம்நால் தாளிசமெட்டு விதமான சூகைநீறு பதினாறாகும், நள்ளவேசுக்கதுதான் முப்பத்திரண்டு நலமானவேல மது வறுபத்துநாலு, கள்ளவே சர்க்கரைதான் சமனாய்க்கூட்டிக்கலந் து புதுக்கலசமதிற் பதனம்பண்ணே. கசகூ

பண்ணவேவெருகடிதூளிருநேரங்கொள்ளப் பறக்குமடாபித்த மொடுவாதம்வாய்வு, தண்ணவேகிரந்தி ரணமரிகிரந்தி தளமானமே வூறல் சொரிசிறங்கு, நண்ணவேசிலவிஷங்க ளுடாதோடும் நலமான குஷ்டமொடு குறைநோய்தீரும், பெண்ணவேபெரும்பாடு வெளும்பு ருக்கிப் பின்பாராதோடுமின்ன மொன்றுகேளே. கடுO

## அசுவகெந்திபலராட்சதத்தைலம்.

ஒன்றானவுலகத்தோர் நோய்கட்கெல்லாம் உரைக்கிறேன் தைல மொன்றுறுதியாக, நன்றானவசுவகெந்தி பலராட்சத நாமமதுசொல் லுகிறேனவிலக்கேளு, சென்றானவசுவகெந்தி பலமூவைந்து சிற்றா முட்டிபதினைந்து வெள்ளெருக்குநாலு, குன்றானநன்னாரிசீந்தில்விலா மிச்சு கோரையுடனெய்ச்சட்டி யவுரியெண்ணே. கடுக

எண்ணவேநாரத்தை துளசிவெட்டி இதமானமூலத்தைபலந்தா னாலு, நண்ணவேயகில்நாலு தேவதாருநாலு நலமானகீழ்நாடன் பல ந்தாமெட்டு, தண்ணவேகொம்பரக்குபலந்தாமெட்டு தள்ளிவிட்டுவ கையெல்லாம் பதினைந்தாகும், ஒண்ணவேயிடித்துநன்றாயிரு தூணிநீ ரில் ஒருவிறகாய்த்திட்டுச்சோ டிசத்தொன்றுக்கே. கடுஉ

ஆக்ருவாயெள்ளெண்ணெய் சேர்தாணைந்து அதின்பாதிதயிர்த
ண்ணீர்பால்சேரைந்து, தூக்குவாய்கலக்கவகை மருந்துகேளு தூடி
யானதிரிகடுகு திரிபலாதி, மாக்குவாய் ஆதூரிமதுராங்கோஷ்டம் மா
ஞ்சில்முச்சிரகமும்பூஞ் சாந்துகெந்தம், பாக்குவாய்மஞ்சள்ரோகிணி
செவ்வள்ளி பச்சிலைபூலாமூலங் கிளியூறல்கூட்டே. ௧௰௩

கூட்டுவாய்சதகுப்பி லவங்கப்பட்டை கூறேதம்வகைக்கரைப்
பலமதாக, ஆட்டுவாயாவின்பால் விட்டுநன்றாய் அப்பனேகியாழமெ
ண்ணெய் தனிற்கரைத்து, நாட்டுவாயடுப்பேற்றிக் கொதிக்கும்போ
து நலமாகமுன்னரைக்கியாழம்விட்டு, மூட்டுவாயடுப்பேற்றி முதிரா
மற்றுன் முன்னவர்க்குப் பூசித்துவடித்திடாயே. ௧௰௪

வடித்திட்டதலமது முழுகுப்போது வாகாகத்தீருகிறவியாதி
கேளு, பிடித்திட்டமேகத்தின்சூலைபதினெட்டும் போனவாதத்தின்
சூலைதானும், படித்திட்டவாதசுரம் பித்தசுரம்வாய்வு மயக்கமொடுசி
லேத்மசுர மாண்டுபோகும், அடித்திட்டுச்சண்ணுபடா பித்தவெட்
டையெல்லாம் அணுகாதேயக்கினியா மந்தந்தானே. ௧௰௫

மந்தமொடுபாண்டுவகை யெல்லாம்போகும் மைந்தனே கண்பு
கைச்சல் கைகால்காந்தல், பெந்தமாமூடம்பெரிவு சுவாசகாசம்பின்
பாராதோடுமடா மேகமெல்லாம், பந்தமாம்பத்தியங்கள் புளிகசப்பு
பாங்கானபுகையோடு பெண்ணுக்தள்ளு, இந்தவகையென்னைப்போலி
யாருஞ்சொல்லார் இகத்திலுள்ளோர் பிழைக்கவென்றிரங்கினேனே.

## வில்வாதிலேகியம்.

இரங்கியேலேகியமொன்று சொல்லக்கேளு இதமானவில்வாதி
யென்றநாமம், பரங்கியேவில்வம்விலாமிச்சைகோரை பாங்கான சஞ்
சீவிவகையொன்றுக்கு, தாங்கியேகீழ்நாடன் பலந்தானெட்டு தாணி
டத்துக்கல்வெள்ளநீரிற்போட்டு, அரங்கிபேசோடசத் தொன்றுகக்
காய்ச்சி அப்பனே கொம்பரக்குசேர்தான்ரண்டே, ௧௰௭

ரண்டான தூணிநீரெட்டொன்றுக்கி நினைவாகஎள்ளெண்ணெ
ய் படிதான்சுத்தி, குன்றானவாவின்பால்படிதானஞ்சு குலமானகற்க
வகை சொல்லக்கேளு, நன்றான திரிகடுகுந் திரிபலாதி நலமான கஸ்
தூரி மதுராங்கோஷ்டம், கன்றானவிருசீர மாஞ்சில் மஞ்சள்கருது கெ
ந்தங்கிளியூறல் பூஞ்சாந்தென்னே. ௧௰௮

என்னவே செவ்வெள்ளிலவங்கப்பட்டை இதமான பச்சையொடு பூலாவேலம், பன்னவேகை ஒன்று பலந்தான் வாங்கிப் பாங்கானவாவின்பால் விட்டேயாட்டி, முன்னவே கியாழமெண்ணெய் தனிற்கரைத்து மோகமாயடுப்பேற்றிக் கமலமாகக், கன்னவே முதிராமல் கவனமாகக் கணபதியைப்பூசித்து வடித்திடாயே. ௧௫௯

வடித்திட்டதைலமது முழுகும்போது வாகாகத்தீருகிற வியாதிகேளு, மிடித்திட்டமேகநீ ரிருப்பதும்போம் போராணபித்தவகை நாற்பதும்போம், துடித்திட்டகுன்மமெட்டுந் தொலைந்து போகுந் தொலையாதசிரசில் நோய் சொல்லாதோடும். கடித்திட்டமேகவகை வரட்சியெல்லாங் காணுமலோடுமடா கருதிப்பாரே. ௧௬௦

## குமரித்தைமலப்.

கருதியேநீகேளு புலத்தியனேயையா கருவானகுமரியிட தைலஞ்சொல்வேன் விருதான குமரிச்சாறு படியிரண்டு வெள்ளாவின் பாலஞ்சுதான் படியிரண்டு, கருதான எள்ளெண்ணெய் படியிரண்டு சாற்றுறேன் கற்கவகை திரிகடுகு கோஷ்டம், மருவானமாஞ்சிலொடு திரிபலைச்சீரம் மதுரைமொடு பூஞ்சாந்தோ டேலமென்னே. ௧௬௧

என்னவே பேச்சையிலை பூலாமூலம்இதமான லவங்கப்பத்திரியும்பட்டை, அன்னவேசெவ்வெள்ளி யக்கிராகாரம் அருளான கஸ்தூரி லவங்கங் கெந்தர், தின்னவே ரோகணியும் சென்பகப்பூயானை திப்பி யுமந்திஷ்டி சோம்புமஞ்சள், பன்னவேவகை யொன்று பலமரைதான் வாங்கிப் பரிவான வாவின்பால் படிவிட்டாட்டே. ௧௬௨

ஆட்டியேவரைத்தெண்ணெய் சாற்றினுள்ளே அப்பனேயடுப்பேற்றிக் கமலமாக, மூட்டியேமெழுகு பதமாக வாங்கி முதிராமல் வடித்ததனைச் சீசாவில் விட்டு, நாட்டு வாய் தானியத்தில் வைத்து மூடி நலமாக மண்டலங்கால் சென்றபின்பு, தாட்டிகமாய் மண்டலந்தான் முழுகும் போது சாதகமாய்த்தீருநோய் சாற்றக்கேளே, ௧௬௩

கேளடாமேகமென்ற தேல்லாம்போகும் கெடியான வஸ்திசுர வெட்டை போகும், தாளடாபித்தமெல்லாஞ் சாந்தமாகும் சரீரத்தில் வறட்சி முதலூறல் போகும், வேளடாகுன்ம மெட்டும் பாண்டுமாறும் வெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோலாம், வாளடாவயித்தியர்க்காய்த் தைலம் சொன்னேன் வளமான மனமுடையோய்மகிழ்ந்துபாரே. ௧௬௪

## கொம்பரக்குத்தைலம்.

மகிழவே கொம்பரக்குத் தைலங்கேளு மகத்தானகொம்பரக்கு ப்பலந்தானெட்டு, நெகிழவே தூணிநீ ரெட்டொன்றாக்கி நிசமானதா ளிக்குள் வடித்துவிட்டுத், தகழவேவெள்ளெண்ணெய் சேர் தானஞ்சு தயிர் தண்ணீர் சேரிரண்டுபால்சேரஞ்சு, நிகழவேகாடியது சேர்தா ன்ரண்டு நிசமாகக்கற்கவகை சொல்லக்கேளே. ௧௬௫

கேளப்பாசதகுப்பை கடுகுரோணி கிளியூறல்பூஞ்சாந்து பச்சை ப்பூலா, நாளப்பாசெவ்வெள்ளி லவங்கப்பத்திரி நலமானலவங்கத் தோல் மாஞ்சில் கோஷ்டம், தாளப்பா கஸ்தூரிமதுரங்கெந்தந் தய வாகவிருசிரம் விநகுவேலம், ஆளப்பாவகையொன்று கழஞ்சிரண்டு அப்பனே ஆவின்பால் விட்டுஆட்டே. ௧௬௬

ஆட்டுவாயெண்ணெய்க்குட் கரைத்துவிட்டு அடுப்பேற்றி மெழு குபதமானவாறே, நாட்டியேவடித்ததனை முழுகும்போது நலமாக த்தீருகிற வியாதிகேளு, தாட்டியமாம்பித்தவெட்டை யஸ்திசுரம் போம் தலைமயக்கும்வாயூறல் சாந்தமாகும், வாட்டியதோர்சீதசுரம் மாண்டு போகும் வற்றியதோர் தேகமெல்லா மூறும்பாரே. ௧௬௭

ஊறுமேகனவெட்டை கனசுரங்கள் உத்தமனேகனப்பாகண்டு வெளுத்ததேகந், தேறுமேதேகத்தில் வலிகடுப்புத் திறமான சூலையெ ல்லாந்தீருந்தீரும், நாறுமேகற்றாழை புறங்கைவீசி நலமானதழுகலையு நாடாதோடும், சீறுமேகாசமெல்லாந் தீர்ந்து போகுந்திறமான வொ ன்றைவிட்டு டொருநாளென்னே. ௧௬௮

## மிருகாமலத்தைலம்.

என்னவேபத்தியந்தான் புளிசசப்பு இதமானபுகையோடுபெண் ணுமாகா, தள்ளவேதைலமொன்று சொல்லக்கேளு தளமானமிருகா மலத்தைலஞ்சொல்வேன், நன்னவே மிருகாபழச்சாறுபடியிரண்டு நலமான காணிச்சாறு படியிரண்டு, பன்னவே குமரிச்சாறுபடியிர ண்டு பாங்கானசெவ்விளநீர் படிதானெட்டே. ௧௬௯

படியான சிறுகீரை சாறுபடியிரண்டு பழுதில்லாவாவின்பால் படிதான்ரண்டு, செடியான வெள்ளெண்ணெய் படிதான் மூன்று சே ர்க்கவிதிற் கற்கருதைமருந்து கேளும், கொடியானமதுரமொடுகோஷ் டமேலங் குரோசானிபச்சையிலை பூலாமூலம், கடியான கஸ்தூரிமா ஞ்சில் மதுரக் கருவானபத்திரியும் சாதிக்காய் கூட்டே. ௧௭௦

கூட்டுவாய்லவங்கப்பத் திரியும்பட்டை - கொடிதானதிரிகடுகுதி
ரிபலாதி , நாட்டுவாய் பூஞ்சாந்து சோம்புவால்மிளகு - நலமானவ
கைபொன்று கழஞ்சுமூன்று, ஆட்டுவலாபாலின்பால் விட்டுநன்றாய் அ
ப்பனேசாறெண்ணெய்கனிற்கரைத்து, மூட்டுலாயடுப்பேற்றிக்கமல
மாக-முதிராமல்கணபதிக்குப்பூசைபண்ணே. (௧௭௧)

பண்ணியேமெழுகுபதந் தனில்வடிக்கப் பாங்காக வுழுகிவரத்
திருநோய்கேள், கண்ணிலேதாகமோ டந்திமாலை-கருவானநேத்ரநோ
ய் கொண்ணூற்று; மண்ணிலேபித்தவெட்டைபித்தவாய்வு-மயக்க
முடனஸ்திவெட்டைமாண்டுபோகும், கண்ணிலேயுடம்பெரிவுகைகா
ல்கரர்தல்-கலமானயுஷ்ணநோய்சாராதென்னே. (௧௭௨)

சங்கணுதிக்கைதலம்.

சாரமேவசங்கணுதிக் கைதலந்தன்னை-சார்பானபுலத்தியனேசொல்
லக்கேளு, சேரமேவமலர்க்காவின் சங்கணக்துள்-செப்புகிறேனெடை
யொன்று தூக்கியே தான், வாரமேவ விலாமிச்சை வெட்டிவேரை-வ
கையுடன்சிந்திலொடுசிற்றாமட்டி, காரமேபேராமுட்டிபேராமல்லி-க
ருவானசிற்றாமல்லியசுவமாமே. (௧௭௩)

ஆமப்பநன்னாரிபற்பாடகந்தான்- அப்பனேவகையொன்று பல
ந்தான்தானு, போமப்பாவிருதா வெள்ளநீரில்-பொடியாக விடிதகிடித்
தகிப்பிலேற்றி, நாமப்பாசோடகத்தொன்றாகக்காய்ச்சி-நலமானபாண
டத்திலவடித்துக்கொண்டு, காமப்பாசெவ்விளநீர் படியிரண்டு!தப்பா
மல்காணிச்சாறு படியிரண்டுவாமே (௧௭௪)

வாரப்பா சிறுகீரை படிதானொன்று - வ கனபொடுதலைச்சாறு
படியொன்று, சீசாப்பாவல்லாரை படிதானொன்று-சிறுசின்னிச்சாறு
தானபடிதானொன்று, காரப்பாபொற்றலைச் சாறுபடி யொன்று-கரு
வானநெல்லியுஞ் சாறுபடியொன்று, ஆமப்பா கர்ப்பூர வள்ளிசசாறு
அழகாகக்கூடவிட்டுப்படிதானொன்றே. (௧௭௫)

ஒன்றப்பா தாழையிடவிழுதின்சாறு - உத்தமனே யெள்ளெண
ணெய்ப் படிதான்மூனறு நன்றப்பா நெய்தான் படிதானொன்று
நலமானவாவின்பால படிதானனாலு குன்றான தயிர்தண்ணீர்ப்படியிர
ண்டு - குறையாமலபாண்டத்தி லூறவிட்டு கொண்டு, சென்றுநீபெப்பி
மேல் கொதிக்கவைத்துத்-திறமான கடைச்சரக்குச் சொலலக்கேளே.

கேளப்பா திரிகடுகு திரிபலாதி, திருவையாங்கஸ்தூரி மதுரமேலம் தாளப்பா பூஞ்சாந்து கிளியூறப்பட்டை-தளமான லவங்கப்பத்திரியும்பட்டை, நாளப்பா கிராம்பு ஜாதிக்காய்பத்திரி-நலமானபச்சையிலே பூலாமூலம், ஆளப்பா செவ்வள்ளிசெண்பகப்பூ- அப்பனே கெந்தமொடுசீர ம்ரண்டே. (௧௭௭)

ரெண்டானசெங்கழுநீர் கோஷ்டமக்கிரா- நிலையானமஞ்சிஷ்டிபலகைமஞ்சள், செண்டானசந்தனமு மூத்தக்காசும்-திருக்கானவலம்புரிக்கா யிடம்புரிக்காய், குன்றமல்வகையொன்று பலமரை தான்வாங்கி-நலமானவாவின்பாவிட்டேயாட்டி, வென்றான * மேஷப்பால்படியிரண்டில்கரைத்து விறவேவெண்ணெயிலேவிட்டுக்கேளே (௧௭௮)

கேளப்பா வடிப்பேற்றிக் கமலமாகக்-கிருபையாய் மெழுகுபதந்தன்னிலேதான், காளப்பாகணபதிக்கு பூசைபண்ணி-நலமான கம்பிளியால்வடித்துக்கொண்டு, காளப்பாகுங்குமப்பூ கோரோசனையும்-களமானபுழுகதிலே கழஞ்சுவீதம், கேளப்பாபொடித்திட்டுக் கலத்துள்ளேகுணமாகத்தாளியதில்வைத்துமூடே. (௧௭௯)

மூடியேமண்டலங்கால் சென்றபின்பு-முழுகிவரச் சீயக்காயரைப்பத குங்காடியேதீருகிறவியாதிகேளு-நாடாதுமேகமென்றதிருபதுங்காண், சாடியேசீழ்விழுநீரு நக்கால்-தள்ளுண்டுபோகுமடா சூதபூந்தானெட்டும், காடியேகண்ணெரிவு கண்புகைச்சல்-கைகெரிவுகாலெரிவு போகுங்காணே, (௧௮௰)

ஓடுமடாபிரமியங்கள் ரணக்கிரந்தி-உத்தமனேசற்றுமைழ நாற்றந்தீருமடா, சாடுமடாவஸ்திசுர மஸ்திவெட்டை-தீரக்கில மயக்கமெல்லஞ் சாந்தமாகும்போகுமடா சிக்கிரகண்டி புண்புரைகள்போகுமபுழுவெட்டுகெண்டகத்தின் புரைகள்போகும், தேடுமடாபெண்மேலேமோகமெத்தச்-சிக்காதேவல்லவினுள்ளே தெளிந்துநில்லே (௧௮௧)

தெளிந்துகொண்டுமயக்கிற் சிக்கவேண்டாம்-தேகத்திலுள்ள நோய்சிதறிப்போகும், அளிந்தகொரு குட்டமொடு சொறிசிரங்கும்-அப்பனேயுள்ளவெட்டையாயிப்போகும், களிந்ததிந்ததயிலமதுமுழுகுமபோது-நன்றானபுளியோடுபுகைகசப்பு, வளிந்துமிகவாய் வென்றபதார்த்தங்கள்ளு, வளமாகுஞ்சரீரமெல்லாமவருணமாமே. (௧௮௨)

---

* மேஷம்-வெள்ளாடு.

## பொன்னாங்காணித்தைலம்.

ஆமப்பாபொன்னாங்காணித் தைலங்கேளு-அப்பனே கரிசா
று படியிரண்டு, காமப்பாபரிச்சாலைப் படியொன்று-நலமான நெல்லிக்
காய்ச் சாறுபடியொன்று, காமப்பா வெள்ளெண்ணெய்ப்படியிரண்டு-த
ப்பாமலாவின்பால படியிரண்டு வேமப்பாமதுரமது பலமிரண்டு-விரு
தானமுலைப்பால லரைத்துப்போட்டே. (௧௮௪)

போட்டப்பா மெழுகுபதந் தனில்வடித்துப் புசமூ கமுழுகிவரத்
தீருநோய்கேள், நீட்டப்பாநேத்திரநோய் தொண்ணூற்றாறும்- நிலை
கெட்டகாசமெல்லா நீங்கிப்போகும், வாட்டப்பாபித்தமெல்லாம்வாங்
கிப்போகும்- வளமாகநேத்திரங்க ளொளியேமீறும், நாட்டப்பாவுஷ்
ண நோயெல்லாந்தீரும்-நலமானகீழ்க்காய்நெல்லி தைலங்கேளே. ()

## கீழ்க்காய்நெல்லித்தைலம்.

கேளப்பாகீழ்க்காயின்நெல்லித்தாளுங்-கிருபையாய்தூக்கிடித்து
த்துணிநீரில், வாளப்பாவெட்டொன்றாய் வடித்துக்கொண்டு-வளமா
னவெள்ளெண்ணெயப் படியிரண்டு, நாளப்பாவாவின்பால் படியிரண்
டு-நலமானசீரகந்தான பலமிரண்டு வேளப்ப்ர பாலிலே யரைத்துவிட்
டு-விருதாகமெழுகுபதம வடித்துவாங்கே. (௧௮௫)

வாங்கியே முழுகிவரப் பித்தவெட்டை - மயக்கமொடு மஞ்சள்
காமாலைதீரும், தாங்கிபேவாந்தியெல்லாம்தவருண்டேபோம் தலைமய
க்கம்வாயூறல் சாந்தமாகும், தேங்கியே யுட்சுரங்கள் தீர்ந்துபோகும
தீரமுடனேயிதனைச் செய்துபாரு. ஏங்கியேதிரியாதே மனம்சோம
பாதே-எளிதல்லநோயப்பா விரங்கிப்பாரே. (௧௮௬)

## ஆகண்டத் தைலம்.

பாரப்பாசிரசிலுள்ள சூலைதீரப்-பக்குவமாய்தைலமொன்றுசொ
ல்லக்கேளு, நேரப்பாவதண்டைநொச்சிசங்கு-நினைவாக வெருக்கோடு
சிற்றாமுட்டி, ஆரப்பாவகை யொன்றுபலம்பக்காகும் - அப்பனே தூ
ணிநீரெட்டொன்றாக்கிக், காரப்பாவெருக்கிலை பழுப்புச்சாறு-கரு
வானபடியொன்றுபழச்சாறொன்றே. (௧௮௭)

ஒன்றப்பாஎள்ளெண்ணெய்ப் படிதானொன்று-உத்தமனேவேப்
பெண்ணெய்ப் படியரைதான்கூட்டி நன்றப்பாதிரிகடுகு வேப்பம்பூண்
டு-நலமானவசம்பேலமஞ்சள்கூட்டிக், கன்றப்பாவரைத்தெண்ணெய்
ப்தனிற்கரைத்து-கருவானமெழுகுபதந்தனில்வடித்து மொன்றப்பா
முழுகிவரத் தீருநோய்கள்-முதலானசிரசிலுள்ள சூலைபோமே.

சூலைபோம்வாயுவெல்லாம் சொல்லாதோடுஞ்- சுருக்கானவாததின் சூலைதீரும், வாலைபாந்திமிர்வாதமிரைப்புதீரும்-வயிற்றிலுள்ள வாயுவெல்லாம வாங்கிப்போகும், சூலைபோஞ் சிறுகடுப்பு சேத்திரக்குத்தல-செரிசிரங்குகரப்பனோடிரணங்கள் தீரும, ஆலப்பாபத்தியந்தான் புளிசைப்பு-அப்பனேபுகைவாய்வு பதார்த்தந்தள்ளே. (கஅசு)

## பதின்மூனறுசன்னிக்குந்தைலம்.

தள்ளவே சன்னியெல்லாங்கடலேபுக்கும் தயவாகத்தைலமொன்று சொல்லக்கேளு, தள்ளலேவேப்பெண்ணெய்ப்புங்கனெண்ணெய்நலமானபுன்னைஎண்ணெய் பசுவினெய்யும், கள்ளவேகாட்டிலுமணத்தினெண்ணெய்-கருவாகச் சமன்கூட்டிச் சட்டியிலேவார்த்து தள்ளவேழுசுறு முட்டைகாலதாகும்- கடைவிலே யெண்ணெய்படி காலதாமே (கசுஎ)

காலானபடிவீதஞ்சேர்த்துக்கொண்டு-கருவான )( குக்குடத்தின்முட்டைபத்து, மாலாகமஞ்சளையுங் கூடவிட்டு-மயங்காதேகடைமருந்து சொல்லக்கேளு, சாலானசாதிலிங்கந்தீமுருகவேர்-சமர்த்தானகெந்திரசம் பாஷாணந்தான், ஆலானநாபியுடன் மிளகுதிப்பிலி அழகானபானைதிப் பிலியும்போடே. (கசுக)

போடுவாய்லவங்கமொடுசேர்வாளந்தான்-புகழானகழஞ்சுநிறைசமனுப்கூட்டி, நாடுவாய்கொடிவேலி கியாழத்தாலே-நலமாகச்சாமமொன் றரைத்துக்கொண்டு, சாடுவாயெண்ணெயிலே தான்கரைத்துச் சதுராகக்கொதிக்கையிலே யெருக்கம்பாலும், கோடுவாய்கொடிக்கள்ளி சதுரக்கள்ளி-0 ணமானவிலைக்கள்ளிப் பாலுங்கூட்டே. ()

கூட்டியேதிருகுகள்ளி0 காணுங்கள்ளி-கூசாதேபடர்ந்திருந்தமுள்ளிக்கள்ளி, சாட்டியேபால்வகைதா னுழக்குமாகும - சாதகமாயெண்ணெயுடன் கலந்துகொண்டு, மூட்டியேகமலமாந்தீயிலன்பாய் முதிரமற்கொதிக்கையிலே கஸ்தூரிகேளு, நீட்டியேயஞ்சுபண முலைப்பாலாலே-நீயரைத்துக்கரைத்தெண்ணெய் தன்னில்வாரே. (கசுரு)

வார்த்திடுவாய்முலைப்பாலதான்படிகால்வீதம்-வளமான தேசிப்பால்படிகாலாமே சேர்த்திடுவாய்க்காட்டெருமைப் பாலபடிதான்திரியாமலெண்ணெயிலே விட்டுக்காய்ச்சி, ஆர்த்திடுவாயற்றலரி யிலைகாள்போடு-அன்பாகவெள்ளுள்ளிபரைத்துப்போடு, மூர்த்திடவேயெழுகுபதமானவுடனே- புன்னவனைப்பூசித்து வடித்திடாயே. கசுச

)( குக்குடம்-கோழி. 0 காணுங்கள்ளி-இலைக்கள்ளி.

வடித்திட்டதைலமதைப் பானையிலேற்றி--வாகு கோரோசனையு
ங்கழஞ்சிபொடிகதிட்டு, பிடித்திட்டசன்னிவகைபதின்மூன் றுக்குமபே
ரானகாண்டிநிறையீய்ந்தாயானால், துதித்திட்டசன்னியெல்லாந்தொ
லைந்துபோகும்-துடியானவிசுவுச்குத துவளைபோட, நடிசதிட்டநரம்
பெல்லாமிருதுவாகும்-நலமில்லா விசுவெல்லாநளினமாமே. (௧௬௫)

## நிலப்பனைக்கிருதம்.

நள்ளநீலகிருதமொன்று சொல்லக் கேளு-நலமான நிலப்பனையு
மொதியமபட்டை, விள்ளவேகருகைலிகாசப்பட்டை-விதமான)(வே
ந்தனிடபட்டைதனும, அள்ளவே வகைக்கொன்று பலபபதகாக, அ
ப்பனையிடித்துநன்றாயிருதூணிநீரில், கள்ளவேசோடசத்தொன்றாகக்
காய்ச்சித்--தளமானவாவின்பால் படிதானரெண்டே. (௧௬௬)

ரெண்டப்பாவாவின்பால் படிசான்ரண்டு-நினைவாகப் புளியாரை
ச்சாறு படியொன்று, விண்டப்பாகோரையிட தண்டுச்சாறு-விதமாக
ப்படியதுகான கூடவிட்டு, நன்றப்பாபொன்முசுட்டை சிறுகாஞ்சொ
று-நலமானவிலாய்வித்து கொத்துமல்லி, சன்றப்பாதிரிகடுகு திரிப
லாதி-கருவானபேரீச்சமுந்திரிகையாமே, (௧௬௭)

ஆமப்பாகர்க்கடமாம் பருப்பரத்தை-அப்பனே காட்டத்தி சீழ்
காய்நெல்லி, தாமப்பாவதிவிடையப்கூவிளததிலை பிஞ்சு-நலமானவிளா
ப பிஞ்சு மாதுளையின்பிஞ்சு, தாமப்பா சந்தனமுஞ் சாத்திரபேதி-
களமானபுள்ளிரைத்தோல முத்தக்காசு, வேமப்பாசிறுநாகம் லவங்
கப்பட்டை--விதமானகுரோசாணியோமங்கூட்டே. (௧௬௮)

கூட்டப்பாபருந்துவெள்ளை யமுக்குறாவேர்-கூசாதேவகைக்கிரண்
டுகழஞ்சுவீதம், ஆட்டப்பாவாவின்பால் விட்டரைத்து-அப்பனைசெ
ய்தனிலே கரைத்துவிட்டு,மூட்டப்பாவடுட்பேற்றிக்கமலமாக-முகிரா
மல்மெழுகுபதமாகும்போது, நாட்டப்பாவடிகொண்டு - பரணிசெய்
து நலமாகவிருநோங் கழஞ்சுகொள்ளே (௧௬௯)

கொள்ளவேபெரும்பாண்டு வெலும்புருக்கி-கூறானபிரமியங்கள்
கடுப்புமூலம்,விள்ளவேகிராணிவகை யெல்லாந்தீரும்-விதமானசுக்கில
ந்தானிறுக்குமபாரு,தள்ளவேசடமவெளுப்புகைகால்காந்தல்-தளமா
ன குறியெரிப்புநீர்கடுப்பு, நள்ளவேதிருமடா பத்தியங்கார்-நலமாகச்
சிரகக்கியாழுங்கொள்ளே. (௨௱)

---

)( வேந்தன்பட்டை--அரசன்பட்டை.

## பொன்னாங்காணிக்கிருதம்.

வெள்ளைவேகிருதமொன்றுசொல்லக்கேளு--துயிப்பானகாணிச் சாறுபடிதானொன்று, கள்ளிவெபொற்றலைக்கய்யான்சாறுபடியொன்று நல மானபழச்சாறு படியரைதான விட்டு, வெள்ளைவேம்பு விலைய் படிதானொ ன்று-விருதானவாவின்பால் படிகாணொன்று, செந்நெய்மதுரமொ டுபலந்தானிரண்டு- வெளிலானவாவின்பால் விட்டுகூட்டே. (உ௱௧)

ஆட்டியேநெய்க்குள்ளே கரைத்துவிட்டு--அடுப்பேற்றிமெழுகு பதமானவாறே, நீட்டியேசாதிப்பத்திரி--நினைவாகக் கோரோசனைங்க ற்கண்டப்பா காட்டியேகழஞ்சுநிறைபொடித்துப்போட்டு-நலமாகக்கி ண்டிவைத்துக் கரண்டிவீதம, மூட்டியேயிருநேரங்கொண்டாயானால் மூக்கியமாய்த்தீருமடாமூலச்சூடே. (உ௱௨)

சூட்டுடனேயஷ்ணரோகமெல்லாந்தீருமசுகமாகமேலெரிவுகைகா ல்காந்தல, நாட்டுடனேயுலத்துக்கிறைமேகந்தீரும் நணுகாதுவயிற்றிலு ள்ள வெரிகட்செல்லாம், வாட்டுடனேநேத்திரமெல்லாங் குளிர்ச்சியா கும-வளமாகுபவாய்நாற்றம விட்டுப்போகும, தீட்டுடனேயிரங்குகின் றபிரமியர்தான் தீருமடாபுளியாரைக்கிருதங்கேளே, (உ௱௩)

## புளியாரைக்கிருதம்,

கேளடாபுளியாரைச்சாறுபடியொன்று-கிருமையுள்ளவள்ளிச்சா றுபடிதானொன்று, காளடாகாணிச்சாறு படிதானிரண்டு-நல்மானசெ வ்விளநீர் படிதானிரண்டு தாளடாவாவின்நெய்சேர்த்தணஞ்சு-தளமான கருவாவின்பால்சேரஞ்சி, ஆளடாசீரகமுமாசிக்காயும்-- அப்பனேமது ரமொடு கழஞ்சுநாலே. (உ௱௪)

காலப்பாவாவின்பால்விட்டேயாட்டி--நலமாகநெய்சாற்றிற்கறை த்துவிட்டு, வேலப்பாலடுப்பேற்றிமெழுகதானல்-விருதாகவடித்துமே பொடிதான்கேளு, காலப்பாபத்தியமேலாம்பாண்டு-கருவாகக்கழஞ்சிர ண்டுபொடித்துசதாவி, ஆலப்பாகற்கண்டுபலந்தானொன்று அப்பனே பொடித்திட்டு கரண்டிநிறையாமே. (உ௱௫)

ஆமப்பாவிருநேர மண்டலங்கொள்- அப்பனேபித்தவெட்டைபி த்தவாய்வு, தாமப்பாவெரிச்சலெலேடுநீர்ச்சுருக்கும் - சளமான மயக்க மெல்லாந்தணிப்போகும, நாமப்பா வாயூறல்ரோசியங்கள் - நாடாது பித்தமெல்லா நடுங்கிப்போகும், போமப்பா வாந்திமுதல் சரீரமூறும் புதிதாகவின்னமொரு கிருதங்கேளே. (உ௱௬)

வல்லாரைக்கிருதம்,

கேளப்பா வல்லாரைக் கிருதந் சொல்வேன்-கெடிதான வல்லாரைச் சாறுபடியொன்று, தாளப்பா காணிச்சாறுபடிதானொன்று-தளமானபொடுதலைச் சாறுபடி யொன்று, களப்பா பழச்சாறு படியரை தான்விட்டு-நலமானவாவின்னெய்ப்படிதானரண்டு, ஆளப்பா வாவின்பால்படிதானரண்டு- அப்பனேகற்பவகை சாதிக்காயே. (உ௱௭)

காயோடுபத்திரியும்மாசிக்காயும-கருவானசிங்கியெ டுகோட்டாத் திப்பிலி. தாயோடுமிளகேலங் கிராம்பு-தளமான மதுரமொடுலவங்கமொன்றுக்குப்,பாயோடுமிருகழஞ்சு நிறைதான் தூக்கிப் பருவமாயாவின் பால்விட்டேயரட்டி, வாயோடுகரைத்து விட்டடுப்பி லேற்றி-வளமாக மெழுகுபதந்தனில்வடித்தே (உ௱௮)

வடிக்கிட்டுசீனிரண்டுபலந்தான் தூக்கி-வாகாகப்போட்டதிலே யிண்டிக்கிண்டிக, கடிக்கிட்டுக்கண்டிநிறைகொண்டாயானால்-கலங்காதேமண்டலத்தில் தீருநோய்கள். கடித்திட்டமேகவகை யெல்லாந்தீருமே--நளமானகுளிர்ச்சியுஞ்சரீரமெல்லாம் வெடித்திட்டாணங்கிரந்திவிழலாய்ப்போகும--விருதானபிரமியமும் விட்டுப்போச்சே. ()

போச்சப்பாரசபஸ்பம்வைத்துக்கொள்ளு--புகழான மேகவகை சூலைபோகும. கச்சப்பா குஷ்டமொடுசெரிசிரங்கு-கருவான )( சிங்குவைநோய் காணாதோடும், விச்சப்பாகிரந்தியொடு யோனிப்புற்று-விதமனபுண்ணுமைகள்விழலாய்ப் போகும்,மாச்சப்பாநீருகல் குறியெரிப்பு-மைந்தனேயஸ்திரண மாறிப்போமே, (உ௱௯)

கூழ்பாண்டககிருதம்

ஆமமே கூழ்பாண்டக் கிருதங்கேளு--அப்பனே பூசினிக்காய்ச் சாறுபடிரண்டு. காறமேதாழைவிழுதின்சாறு-கனறுகப்படியொன்றுகொண்ணாபூச்சாறு, காருமேபடியொன்று கூடவிட்டுக்கலங்காதேகுமரிச்சாறுபடிதானொன்று, காறுமேசெவ்விளநீர் படிதானொன்றுகனமானவாவின்னெய்ப்படிதானரண்டே. (உ௰௧)

ரெண்டானதற்கு வகை சொல்லக்கேளு--நிலையான சாதிக்காய் சாதிப்பத்திரி, பண்டானசாதிக்காய் திரிபலாதி - பாங்கான சீரகமு மேலம்வால்மிளகு, குன்றுவகட்டத்தி காக்கடகச்சிங்கி-குறுணமல்லியொடுகோரோசனியோமம், கன்றுகக்கழஞ்சு நிறைமூன்றதாக-நலமானவாவின்பால் விட்டூட்டே. (உ௰௨)

)( சிங்குவை-நாக்கு.

ஆட்டியேயாவின்பால் படிரண்டுக்குள்-அப்பனே கரைத்துவிட்
டுடுப்பிலேற்றி, காட்டியே மெழுகுபதமாகும்போது-நலமாகவடிகொ
ண்டுகலசத்துள்ளே, காட்டியேகற்கண்டு பலந்தானரண்டு- கருவாகப்
பொடித்திட்டுக்கரண்டிவீதம், மூட்டியே மண்டலங்கால கொண்டா
யானால்-மூதண்டபிரமியங்கள் மேகமபோமே. (௨௧௩)

போமப்பா வுஷ்ணங்க ளெரியுங் காந்தல்-பொல்லாத நீர்க்குத்
துகுறியெரிப்பு. காமப்பாவஸ்திரண மஸ்திவெட்டை-நாடாதுகிராணீ
யெல்லாகளினமாகும், தாமப்பா எலும்புருக்கி மாலையெல்லாம்-தவரு
ண்டேபோகுமடா பித்தமெல்லாம், ஆமப்பாவப்பிரேகம்போட்டுக்
கொள்ளு அணுகாதுமேகநீ ரற்றுப்போமே. (௨௧௪)

## தூதுளைக்கிருதம்

அற்றுப்போம் தூதுளைக் கிருதங்கேளு-- அப்பனே தூதுளையெ
டைதானொன்று, சற்றுப்போ நன்முள்ளி கண்டங்கத்திரி-கருதுசிறு
காஞ்சோரி யாடாதோடை, சற்றுப்போம் மிளகுதிப்பிலி கடுக்காய்-
சதிரானதுராலபையும் வகையொன்றுக்கு, நற்றுப்போம்பலம்நாலு
கொண்டிடித்து-நலமாகவிருதூணிநீரிலூடடே (௨௧௫)

ஊட்டியேசோடசத் தொன்றாகக்காய்ச்சி-- உத்தமனே வடித்து
வொரு பாண்டதூற்றி, நாட்டியேயாவினெய் படிதானரண்டு-நலமா
வாவின்பால் படிதான்ரண்டு, காட்டியேதிரிகடுதிரிபலாதி- கருவா
னதாளிசங்கோஷ்டமக்கிரா, வாட்டியேவாய்விளங்கஞ் சீரகமுமோமம்
வால்மிளகோடரத்தைரண்டுமேலந்தானே (௨௧௬)

ஏலமொடு கிராம்பு சாதிக்காய்பத்திரி-எடுசதிடுவாய் வகையொ
ன்றுகழஞ்சுமூன்று, ஆலமொடுவாவின்பால்விட்டேயாட்டி-அப்பனே
நெய்தனிலே கரைத்துவிட்டு ஞாலமொடு மெழுகுபதமாகுநேரம்நல
மாகவடிகொண்டு சரண்டிவீதம, காலமேமண்டலந்தானே கொண்டா
யானல்-கருவானக்ஷயமெட்டுங்காணுதன்றே. (௨௧௭)

காணுதயிளையோடிருமல்காசப்-நலங்கதேசேத்துமநோய்தொ
ண்ணூற்றாறும, நாணுமேமேகமெல்லா நாடாதோடும-நலமானவுஷ்
ணநோயெல்லாந்தீரும, ஆணுமேயீளையிளைப் பற்றப்போகும-அப்ப
னேவாயுவென்ற தெல்லாந்தீரும், தோணுமே குண்டலமாம் வாய்வு
தீரும்--குறிப்பாகவின்னமொரு சேதிகேளே. (௨௧௮)

## கண்டங்கத்திரிக்கிருதம்.

கேளடாகண்டங்கத்திரிக் கிருதஞ்சொல்வேன்-கிருபையாங்கண் டங்கத்திரி தூக்கப்பா, நாளடாநன்றான சிறுகாஞ்சோரி-நலமான தூதுளை சங்குமூலம், வாளடாவகையொன்று பலந்தானஞ்சு-வகையாகவடித்துயிரு தூணிநீரில், தாளடாசோடசத்தொன் றுகக்காய்ச்சித்-தப்பாமல் வடிகொண்டு பாண்டத்திலூற்றே. (௨௧௯)

ஊற்றியேயாவினெய்படிதான்ரண்டு-உத்தமனேயாவின்பால்படி தான்ரண்டு, தாற்றியேகற்பவகைசொல்லக்கேளு-தளமானதிரிகடுகு திரிபலாதி, ஏற்றியேயேலமோடக்கிராகாரப்-இதமானகிராம்புசாதிக் காய்பத்திரி, ஆற்றியேதாளிசம்லவங்கப்பட்டை-அரத்தைரண்டுசீரக ம்ரண்டோமமாமே. (௨௨௰)

ஆமப்பாவகையொன்று கழஞ்சுமூன்று-அப்பனேயாவின்பால் விட்டேயாட்ட, நாமப்பாநெய்தனிலே கரைத்துவிட்டு-நலமாகமெழுகுபதந் தனில்வடித்து, தாமப்பாகாண்டிநிறை கொண்டாயானால்-தவறுண்டேசயகாச மெல்லாந்தீரும், வேமப்பாவலிப்பிசுவும் வெகுண்டுபோகும்-விருதானவயிறுவிம்மல் தளரும்பாரே. (௨௨௧)

பாரப்பாவிஷக்கடிக ளெலிகடிகள்தீரும்-பதறுகின்றவலிப்பெல்லாம் பரிந்துபோகும், நேரப்பாகுன்மமெட்டு நீங்கிப்போகும்-நிலையானமந்தார காசநீங்கும். வாரப்பாசேத்துமநோ யெல்லாந்தீரும்-வளமானவாய்வெல்லா மாண்டுபோகும், ஆரப்பாதாளகத்தின் பற்பங்கூட்டி-அப்பனேமண்டலங்கொள் ளகன்றுபோமே. (௨௨௨)

## கணத்தெண்ணெய்

போயப்பாகணத்தெண்ணெய் சொல்லக்கேளு-புகழ்முத்துக்கொட்டையெண்ணெய் படிதானொன்று, நாமப்பா கையான்சாறு-நலமான குமரிச்சா றீருள்ளிச்சாறு, வேமப்பாகோவைச்சாறு புளியாரைச்சாறு-விதமானகர்ப்பூர வள்ளிச்சாறு, தாமப்பாவகையொன்று சாறுபடி காலாய்-தப்பாமலெண்ணெயிலே கூடவாரே. (௨௨௩)

வார்த்தப்பாசாதிக்காய் சாதிபத்திரி-மைந்தனேமாசிக்காய் கர்க்கடகச்சிங்கி, ஏத்தப்பாகோஷ்டமோ டக்கிராகாரப்-இதமானசீரம்ரண் டு வெந்தயந்தான், காத்தப்பாலவங்கப்பத் திரியும்பட்டை - கருவான வெள்ளுள்ளி வகையொன்றுக்குச், சாத்தப்பாகழஞ்சுநிறை வாங்கியே தான்-தளமானவாவின்பால் விட்டே ஆட்டே. (௨௨௪)

ஆட்டியேவெண்ணெயிலே கரைத்துவிட்டு-அப்பனேபால்படியா லடுப்பிலேற்றி, நாட்டியேமெழுகுபத மாகவேதான்-நலமாகவடிகொண்டு கலசத்துள்ளே, கூட்டியேகோரோசனைக் குங்குமப்பூ-குணமானசாதிக்காய் கழஞ்சுவீதம், ஆட்டியே பொடித்திட்டுக் கழஞ்சுநிறையாக-அப்பனேகொடுத்துவாச் சொல்லக்கேளே. (உஉரு)

கேளடாகணவெட்டை கணசுரங்கள் - கெடியானமாந்தமொடுப் பிசங்கள், நாளடாவுலர்த்துகின்ற ரணங்களெல்லாம்-நலமாகவாறுமடா கெர்ப்பவெட்டை, தாளடாகணப்பாண்டு வெளுத்ததேகம்-தளதரானீரிழிவு விடாதசூடு, வேளடாவுடம்பூறு மூஷ்ணம்போகும்-வெகுசுறுக்காயின்னமொரு சேதிகேளே. (உஉசு)

## கரப்பானெண்ணெய்.

சேதியென்றகரப்பானும் ரணத்துக்கெல்லாம்-தெளிவானயெண்ணெயொன்று சொல்லக்கேளு, சாதியென்றபூவரசு செங்கத்தாரி-தளம்பூதகரப்பனொடு கண்டங்காலி, வேதியென்றநிலவாகை வகையொன்றுக்கு-விதமாகப்பலம்பத்து நறுக்கிக்கொண்டு, ஆதியென்றதூணிநீரெட்டொன்றாக்கி-அப்பனேயாமணக்கெண்ணெய படியொன்றே. ()

ஒன்றப்பாவெள்ளாட்டின் பால்தானொன்று-உத்தமனேமிளகுகருஞ் சீரகந்தான், வின்றப்பாகார்கோலம் வெள்ளுள்ளிவசம்பு-வேறூனசதகுப்பை வலம்புரிக்காய், நன்றப்பாபரங்கியிட பட்டைதானும்-நலமாகவகையொன்று கழஞ்சிரண்டு, தன்றப்பாமுன்பாலா லரைத்துக்கொண்டு-தளமானவெண்ணெயிலே கரைத்துவிட்டே. (உஉஅ)

விட்டப்பாவடுப்பேற்றி மெழுகுபதமானல்-வெருளாதேகரண்டிநிறை கொடுத்தாயானல், தட்டப்பாசகலகரப் பானும்போகும்-தளமானவரிப்பெலலாஞ் சாரதோடுங், கட்டப்பாரணத்தின்மேல் தடவிப்போடக்-கச்சாமலுதிர்ந்துபோங் கருவாய்கேளு, பட்டப்பாபத்தியந்தான் காத்தாசானல்-பறக்குமடாகரப்பனொ டிரணங்கள்தானே. ()

## மாந்தவெண்ணெய்.

தானென்றமாந்தெண்ணெய் சொல்லக்கேளு-தயவானவாமணக்கினெண்ணெய் படியொன்று, வானென்றவெள்ளிரண்டு வுசிலின்பட்டை-வளமானவறுகுமஞ்சள் வெள்ளைப்பூண்டு, கானென்றவெவ்வேறே நிம்பக்காய்மட்டும் - கருவாகவரைத்தெண்ணெய் தனிற்கரைத்து, நானென்றபேய்த்தும் மட்டிக்காயப்பா-நலமாகப்பாதியதில் நறுக்கிப்போடே. (உ௩௰)

போட்டப்பாவடுப்பேற்றிக் காய்ச்சிவந்தால்-பொட்டெனவேயி றக்கியதை நிறுத்துக்கொண்டு, நாட்டப்பாமூன்றுநாள் கால்சேர்வீதம்-நலமாகக்காலமே கொடுத்தாயானால், காட்டப்பாமாந்தமெல்லாங் காணுதோடுங்-கருவானவிசுவுமுதல் கண்டிப்பாகும், நீட்டப்பாபெயர்மந்தம் பொருமமெல்லாம்-நிலைகெட்டேயோடுமா மின்னங்கேளே. ()

## மேகத்தெண்ணெய்.

கேளப்பாமேகமென்றதெல்லாந்தீரக்-கெடியானவெண்ணெயொன்று சொல்லக்கேளு, நாளப்பாகோவைச்சாறு காணிச்சாறு-நலமானவல்லாரை செருப்படையின்சாறு, வேளப்பாயானையிட நெருஞ்சிச்சாறு-வெகுசுறுக்காஞ்சிந்தியிட தண்டுச்சாறு, ஆளப்பாயாவரசனிட பட்டைச்சாறு-அப்பனேவகைக்குப்படி யரையதாமே. (உ௩௨)

ஆமப்பாவாமணக்கி னெண்ணெய்படிமுக்கால் - அப்பனேயெள்ளெண்ணெய்ப் படிதான்முக்கால, சாமப்பாசாற்றிலே விட்டுக்கேளு சதுரானசாதிக்காய் சாதிப்பத்திரி, வாமப்பாமாசிக்காய் கற்கடகச்சிங்கி - வளமானசண்பகப்பூ காட்டாத்திப்பூ, வேமப்பாசிறுநாகமேலங்குரோசானி-வெகுசுறுக்காய்கழஞ்சிரெண் டேடைதான்றூக்கே. ()

தூக்கியேயாவின்பால் விட்டேயாட்டிச் - சுறுக்காகவெண்ணெயிலே கரைத்துவிட்டுத், தாக்கியேசித்திரமூலிவேரின்பட்டை-சாதகமாப்பலமொன்று கூடப்போட்டுத், தேக்கியேயடுப்பேற்றி மெழுகுபதம் பார்த்துத் - திறமாகவடித்ததனைக் கலசத்துள்ளே, ஆக்கியேகற்கண்டு பலம்ரண்டிட்டு-அப்பனேகாண்டிநிறை கொள்ளுகொள்ளே. (உ௩௪)

கொள்ளப்பாமண்டலந்தான் கொண்டாயானால்-கூறுகெட்டமேகமெல்லாங் குளிர்ந்துபோகும், தள்ளப்பாரணக்கிரந்தி லிங்கப்புற்று-தள்ளுமேயோனிப்புற் றரிகிரந்தி, நள்ளப்பாவெடிசிலை மேகவூறல்-நலமானசொரிசிரங்கு நாடாதோடுந், தள்ளப்பாசீழிரத்தம் பிரமியங்கள்-தவருண்டேபோகுமடா சார்ந்துபாரே. (உ௩௫)

## விழுதியெண்ணெய்.

பாரப்பாகொர்ப்பனோ யெல்லாந்தீரப் - பகருகிறேன்விழுதியெண்ணெய்ப் பண்பாய்க்கேளு, சேரப்பாமுத்தெண்ணெய்ப் படிதானென்று-திறமானவாவினெய் படிதானென்று, தாரப்பாவிழுதிச்சாறு படிதானென்று-தளமானதிரிகடுகு வம்சபீருள்ளி, ஆரப்பாகோஷ்டமொடுலவங்கமேலம்-அப்பனேவெள்ளுள்ளி காலதாமே. (உ௩௬)

ஆமப்பாவாவின்பா லாலரைத்து-அப்பனேநெய்தனிலே கரைத்
துவிட்டுப், போமப்பாவடுப்பேற்றி மெழுகுபதம்பார்த்துப் - பொட்
டனவேயிருத்தொரு கலசத்துள்ளே, நாமப்பாமூன்றுநாள் கால்சே
வீகம்-நலமாகக்கொண்டுவா வாறுநாள்தான், வேமப்பாபத்தியந்தா
னுப்பைத்தள்ளு-வெருசுறுக்காய்திருமடா கெர்ப்பவாய்வே. (உ௯எ)

கெர்ப்பத்தின்வாய்வெல்லாங் கெதிகெட்டோடும்-கிட்டாத சூத
கத்தின வலியெல்லாம்போம், கற்பத்தில்புழுக்களெல்லாநழுவிவிழும்
காணுதுசூலையெல்லாங் கண்டிப்பாகும், கற்பத்திலிசுவுமுதல் களர்ந்து
போகும்-சந்திடுப்பில்சூலையெல்லாஞ் சாந்தமாகும், அற்பமதுவல்லவ
டா கெர்ப்பமுண்டாம்-ஆச்சரியமின்னமொன் றறைகிறேனே. ()

அறைகிறேனல்லெண்ணெய்ப் படிதானென்று - அப்பனேயாவி
ன்நெய் படிதானென்று, முறைகிறேனமூலவேர் பலந்தான்ரண்டு-மு
னையாகவாவின்பால் விட்டேயாட்டி, நிறைகிறேன்கரைத்துவிட் டடு
ப்பிலேற்றி-நினைவாகமெழுகுபதந் தனில்வடித்து, குறைகிறேன்கரண்
டிநிறை கொண்டாயானால்-கொடிதானமேகமெல்லாங் கூறிப்போமே.

கூறிப்போகுங்குறியெரிப்பு லிங்கப்புற்று-கொடிதானகிரந்தியெ
ல்லாங் குடிபோமப்பா, நாடிப்போமுள்ளழலை வாய்நாற்றங்கள்-நாடா
தேயெரிப்பெல்லா நளினமாகும், தேறிப்போஞ்சூலைமுதல் வெடிரண
ங்கள்-தீராதகுட்டமெல்லாந் தீர்ந்துபோகும், நாறிப்போங்கெந்தியிட்
டுக் கொண்டாயானால்-நலமுடன்கடல்புகும் ரணங்கள்குன்மந்தானே.

## * கலிங்காதி எண்ணெய்.

குன்மவகைதீருதற்கு கலிங்காதியெண்ணெய்-குணமாகச்சொல்
லுகிறேன் புலத்தியனேகேள், கன்மமென்றதும்பட்டிக் காய்ச்சாறப்
பா-சருவாகப்படியிரண் டாவினீர்தான், தன்மமென்றபடியிரண்டுவெ
ள்ளாட்டுநீர்தான்-தப்பாமல்படியொன்று கூட்டிச்சேர்த்து, பன்மமெ
ன்றவாமணக்கி னெண்ணெயப்பா-பகராதேபடியிரண்டு கூடவாரே. ()

வார்த்தப்பாகடுக்காயுங் கடுகுரோணி - வளமானவாய்விளங்கந்
திரிகடுகுமேலம், எத்தப்பாவிந்துப்பு வளையலுப்பு-இதமானகல்லுப்பு
ச் சவுட்டிலுப்பு, காத்தப்பாநவாச்சார மெவாச்சாரங்காரங்-கலங்கா
தேயப்பளா காரங்கூட்டி, பார்த்தப்பாவால்மிளகு யானைத்திப்பிலியும்-
பால்சானவெள்ளுள்ளிப் பருப்புமாமே (உசஉ)

---

* கலிங்கம - தும்மட்டிக்காய்.

ஆமப்பாநிலவாகை கண்டங்கத்திரி-அப்பனேவெள்ளைச்சாரணை யின்மூலம், நாமப்பாசத்திச்சாரணைக்கிழங்கு - நலமாகவரைப்பலமா யரைத்துக்கொண்டு, தாமப்பாநொச்சிச்சாறு பசுமஞ்சள்சாறுந்-தள மானவிஞ்சிச்சாறு குமரிச்சாறு, வேமப்பாபடியரையாய்க் கூடவிட்டு-விருதானகடைச்சரக்குக் கழஞ்சுமூன்றே (உசங)

மூன்றப்பாவரைத்தெண்ணெய் தனிற்கரைத்து - மூதிரமலடுப் பேற்றி மெழுகுபதமானால், ஏன்றப்பாகலசமதில் வடித்துவைத்தே-என்னசொலவேனரைக்கால்சேர்வீதமாகக், கான்றப்பாகொண்டுவர ப் பத்துநாள்தான்-கவுசையொடுபீலிகையுங் கரைந்துபோகும், ஆன் றப்பாபெருவயிறு வாய்வுகட்டி - அணுகாதுமகோதரங்க ளற்றுப் போமே. (உசச)

அற்றுப்போம்வாயுவென்ற திரட்சியெல்லாம்-அப்பனேகுணமா கு மெட்டுவாய்வு, நற்றுப்போங்கெர்ப்பவலி கெர்ப்பச்சூலை-நாடாதே யிசுவுபுழு நழுவிவீழும், கற்றுப்போங்கைகாலில் கட்டுச்சூலை-கடல்பு க்குங்குத்துவலி காணுதோடும், பற்றுப்போம்வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்-பறக்குமடாவின்னமொன்று பகரக்கேளே. (உசரு)

## வாதயெண்ணெய்.

கேளடாவேப்பெண்ணெய் புங்கனெண்ணெய் - கெடியானவாம ணக்கின் புன்னையெண்ணெய், நாளப்பாவெள்ளெண்ணெய் ஐந்துங்கூ ட்டி-நலமாகவகையொன்று படியரைதான்சேர்த்துத், தாளப்பாவெ ள்ளுள்ளி வசம்புகாயம்-தனமாகதிரிகடுகு வோமங்கிராம்பு, ஆளப்பா சதகுப்பை கடுகுரோணி-அப்பனேசித்திர மூலமாமே. (உசசு)

ஆமப்பாவகையொன்று பலமரைதான்வாங்கி-அப்பனேகாடியா லரைத்துப்போட்டு வேமப்பாசாடிபடி ரண்டிலேதான்-விருதாகக்கா லதுவிட் டடுப்பிலேற்றிப், போமப்பாமெழுகுபதம் வடித்துக்கொண் டு-புகழாகக்கலசமதில் பதனம்பண்ணி, தாமப்பாமேற்பூசிப் பிடித்து க்காய்ச்சத்-தவறிப்போய்வாதமெண் பதுவுந்தானே. (உசஎ)

தானென்றமேகவகை சூலையெல்லாந்-தளமானதிமிர்வாதம் புற விசுவுமுதலா, நானென்றவிசுவுமுதல் நடுக்குவாதம்-நாடாதுசிறுகடுப் பு நளினமாகும், தேனென்றகாசெடைதா னுள்ளேதாக்கி-தேகத்தின் வாதமெல்லாந் தெறிபட்டுப்போகும், வானென்றதேகவலி யெல்லாந் தீரும்-வளமாகுந்துவாலையிட வாதம்போமே. (உசஅ)

## சுகசீதபேதியெண்ணெய்.

போமப்பாசுகபேதி யெண்ணெய்யொன்று-புகலுகிறேன்மூத்தெண்ணெய் படிதானென்று, காமப்பாகுமரிச்சாறு படிதானென்று-கருவானபிரமிச்சாறு படியரைதானும், தாமப்பாமிளகுகள்ளிப் பாக்குகடுக்காய்-தவறாமல்கருவேலி பலமிரண்டப்பா, நாமப்பாபதக்குநீர் தன்னிற்போட்டு-நலமாகவெட்டொன்றாய் வடித்துவாங்கே. (உசகூ)

வாங்கியேயெண்ணெய்தனக் குள்ளேயப்பா-வளமாகக்கடுக்காயும் கடுகுரோணி, தாங்கியேமிளகுடனே யுள்ளிவகையொன்று-தவறாமல்பலமரைதா னரைத்துப்போட்டு, ஏங்கியேவடுப்பேற்றி மெழுகுபதமானல்-என்னசொல்வேன்கலசத்துள் வடித்துவைத்து, ஆங்கியேகால்சேர்தான் கொடுத்தாயானல்-அப்பனேசுகசீத பேதியாமே. ()

ஆமப்பாநீர்கட்டு வாய்வுஊதல்-அப்பனேவாய்வெல்லா மகன்றுபோகும், தாமப்பாசரீரமெல்லாம் குளிர்ச்சியாகும்-தளராதவயிறுவிம்மல் தளர்ந்துபோகும், நாமப்பாமூலத்தின் சூடெல்லாம்போம்-நாடாதுபித்தமெல்லாங் கீழேசாடும், போமப்பாவிதனைப்போல் பேதியெண்ணெய்-பூதலததில்சுகபேதி யில்லைதானே. (உருக)

## பழத்தெண்ணெய்.

தானென்றபழத்தெணணெய் சொல்லக்கேளு-தவறாமல்பழச்சாறு படிதானென்று, நானென்றமுத்தெண்ணெய் படிதானென்று-நலமானகுமரிச்சாறு படிதானென்று, வேனென்றகடுக்காய்தான் பலமிரண்டு-விருதாகவரைதெண்ணெய் தன்னிற்போட்டுக், கானென்றவடுப்பேற்றி மெழுகுபதமானல்-கண்டப்பாவடிகொண்டு கலசம்வாரே. ()

வார்த்தப்பாகால்சேர்தான் கொடுத்தாயானல்-வாங்குமடாபித்தமென்ற நாற்பதும்போம், ஏத்தப்பாவெரிவுமூதல் காந்திதீரும்-என்னசொல்வேனுஷ்ணநோ யெல்லாந்தீரும், காத்தப்பாபட்சமொன்று கொடுத்தாயானல் - கருவானநோயெல்லாங் காணதோடும், பார்த்தப்பாவயிற்றிலுள்ள வியாதியெல்லாம் - பறக்குமடாபித்தநோய் பாருபாரே. (உருரு)

## வீரபத்திரக்கலிக்கம்.

பாரப்பாவீரபத்திரக் கலிக்கங்கேளு-பறக்குமடாபசாசுமுதல் சன்னியெல்லாம், சேரப்பாதிரிகடுகு கடுக்காயிந்து-திறமானவாளமொடு கிராம்போடேழும், வேரப்பாவெந்தயச்சா றதனலாட்டி-வெகுசுறுக்காய்நால்சாம மரைத்துக்கொண்டு, ஆரப்பாமுன்சாற்றிற் கலிக்கம்போட-அப்பனேசன்னிமுதல் தோஷம்போகும். (உருசு)

## ஆக்கிராணநசியம்.

போமப்பாவாக்கிராணஞ் சொல்லக்கேளு - புகழானகண்டவேர் தும்பைமூலம், நாமப்பாவிலுப்பைப்பிண் ணாக்குசுட்டு-நலமாகமுன் னிரண்டும்ரவியுலர்த்தி, சேமப்பாபொடிசெய்து வடிகொண்டேதான் திறமானகுழலடைக்காக் கிராணஞ்செய்யத், தாமப்பாதலையிலுள்ள தோஷமெல்லாம்-கண்ணூண்டுபோகுமடா வின்னங்கேளே. (௨௫௫)

## நசியம்.

கேளப்பாவிலுப்பையிட பழம்பிண்ணாக்குக் கிரிகையாய்ப்பொ டிசெய்து துணியிற்கட்டி, வாளப்பாவலையிட வூசிநீரில் - மைந்தனே நசியமிடச் சன்னிதோஷம், காளப்பாபித்தத்தா லெடுத்ததோஷம்- தளமானகபவாத தோஷமெல்லாம், ஆளப்பாபிரமராட்சதன்முதலா ய்ஆகாயபசாசுமுத லகன்றுபோமே. (௨௫௬)

## கண்டாவிழ்தம்.

போமப்பாகண்டாவிழ்தஞ் சொல்லக்கேளு - புதுமையாந்தங்க மொடுவெள்ளிமுத்து, நாமப்பாமதுரமொடு கிராம்புதிப்பிலி-நலமான பவளமொடு ருத்திராட்சம், தாமப்பாகோஷ்டமோ டக்கிராகாரம்- தளமானகாமப்பூ கூவிளத்தின்மூலம், ஆமப்பாகலைக்கொம்புச் செந் தூரம்-அப்பனேயாடாதோடை மூலந்தானே. (௨௫௭)

தானென்றமூலைப்பாலா லரைத்துக்கொண்டு - தப்பாமல்தேன் குத்திராவிற்போட, நானென்றதோஷமொடு சன்னியெல்லாம்-நாடா துராவரட்சி நாவழுத்தல், தேனென்ற ஸ்திரீசங்கோத தோஷம்வா ங்கி-திறமானவிக்கல்முதல் தீரும்தீரும், வானென்றவாதமெல்லாம்வா ங்கிப்போகும்-வளமானநாக்கின்முள்ளும் வாங்குந்தானே. (௨௫௮)

## சூரணங்களின் சுத்தி.

தானென்றசூரணத்தின் சுத்திகேளு - தப்பாதேசரக்கெல்லாஞ் சூரணித்து, நானென்றவாவின்பா லாற்பிசைந்து-நலமானசட்டியிலே பாலைவிட்டு, வானென்றசுத்தசலம் பாதிவிட்டு-வளமாகமேற்சீலைகோ டுகட்டிப், பானென்றசூரணத்தைப் பிட்டுபோல்வைத்துப்-பதறாதே வெந்தெடுக்கச் சித்தியாமே. (௨௫௯)

ஆமப்பாரவியுலர்த்திப் பொடிதான்செய்து - அப்பனேசமனாய்ச் சர்க்கரையைச்சேர்த்து, நாமப்பாகொண்டுவாத் தோஷம்போச்சு-நன் றாகச்சுத்திசெய்யாச் சூரணந்தான், தாமப்பாரோகத்தை வெல்லாது ப்பா-தளமானவியாதியெல்லாம் பாரிக்கும்பார், வேமப்பாசுத்திசெய் துக்கொண்டாயானால்-வெகுசுறுக்காய்த் தீருமடாவியாதிகளு. ()

## செந்தூரவைப்புக்குக் கரு.

கேளப்பாசெந்தூரப் பற்பமெல்லாப்-கெடியானசிங்கமுப்பூதொட்டாலாகும், நாளப்பாவிதைவிட்டால் பற்பமில்லை-நன்றானலோகமுதல்சிவப்பேறாது, வாளப்பாவிதுவல்லோ புடத்துக்காதி-வகையறியாவைத்தியனல்லோ மாடுமேய்ப்பன், தாளப்பாவைத்தியர்க்காய்க் கருவைச்சொன்னேன்-தப்பாதுபற்பமுறை செந்தூரந்தானே. (உசுக)

## லோகசெந்தூரம்.

தானென்றலோகசெந் தூரங்கேளு-தயவானவரப்பொடியில் நல்லெண்ணெய்விட்டு, வானென்றநாழிகைதான் அறுபதானால் வளமாக வலுத்ததனைப் பீங்கானில்விட்டு, நானென்றபழச்சாறு பிழிந்துவிட்டு நலமாகக்கிண்டிவைத்து நாலாநாளில், தேனென்றேயுருஞ்சியதைக் கழுவிப்போட்டுத் திறமாகரவியுலர்த்திப் பலந்தான்தூக்கே. (உசுஉ)

தூக்கியேசுத்திசெய்த கெந்திசேரு-சுகமாகப்பலமொன்று கூடப்போட்டு, தாக்கியேபழச்சாற்றால் சாமம்நாலு சரியில்லாப்பொற்றலையால் சாமம்நாலு, தேக்கியேயரைக்கையிலே மூப்பூவப்பா-திறமாகக்கழஞ்சுநிறை சேர்த்துப்போட்டு, வாங்கியேபில்லைசெய்து ரவியிற்காய்ந்தால்-வளமானமூப்பதெருப் புடத்திற்போடே. (உசுங)

போடப்பாமுக்காலும் பொற்கையானல் புகழாகநாற்சாமமாட்டிக்கொண்டு, நாடப்பாபில்லைசெய்து ரவியுலர்த்தி-நலமாகமுன்போலே புடத்தைப்போடு, ஆடப்பாவாறினபின் னெடுத்துப்பாரு-அப்பனேமுருக்கம்பூப் போலாம்வர்னம், நாடப்பாபணவெடைதா னனுபானத்தில் நலமாகத்தேன்கூட்டிக் கொள்ளுகொள்ளே. (உசுச)

கொள்ளவேபாண்டுவகை யெல்லாந்தீரும் குறிபானபித்தவெட்டைபித்தவாய்வு, நள்ளவேவாய்வென்ற தெல்லாந்தீரும் - நாடாதேயரோசியங்க ளனைத்தோஷம், விள்ளவேமயக்கமொடு வாந்திதீரும் - விருதானபித்தமெல்லாம் விழலாய்ப்போகும், தள்ளவேயிஞ்சியென்றசூரணத்தில்-சாப்பிடவேதேன்கூட்டிச் சாறுமவாரே. (உசுரு)

## அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பாகாந்தத்தை இப்படியேசெய்யில்-பரிவானகாந்தமொடு சிவப்புமெத்த, சாரப்பாவனுபான மறிந்துகொண்டால்-தப்பானமூலவகையாவுந்தீரும், சேரப்பாபித்தமெல்லாஞ் சிதறிப்போகும்-தேகத்தில்பாண்டுவெல்லாந் தீரும்தீரும், ஆரப்பாதேனிலே கொண்டாயானால் அருணனைப்போல்காந்தியா மறிந்துக்கொள்ளே. (உசுசு)

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரங்கேள்-குறிப்பானரண்டையுந்தான் சுத்திசெய்து, நள்ளவேசமனுக ரண்டையுந்தான்கூட்டி-நலமானசாதிலிங்கஞ் சமனுய்க்கூட்டித்-தயவானரசங்கால்தான் கெந்திசமனப்பா, விள்ளவேசுத்திசெய்து கல்வத்திட்டு-விருதான பழச்சாற்றூற் சாமம்நாலே. (உசுஎ)

நாலாகமுப்பூவுங் கழஞ்சிரண்டு-நலமான பொற்றலையால் சாமம்நாலு, காலாகவரைத்துபில்லைரவியிற்காய்ந்தால்-கருவானவோட்டில்வைத் தோடுமூடிச், சாலாகமுப்பதெருப் புடத்திற்போடு-தப்பாது செந்தூர மருணன்போலாம், மாலாகப்பணவெடைதானனுபானத்தில்-மைந்தனேகொண்டுவரப் போம்நோய்கேளே. ()

கேளப்பாபாண்டாறுங் கிராணிபாறும்-கிருபையாம் பித்தமது நாற்பதும்போம், நாளப்பாவாய்வோடு வாதமெல்லாம்-நாடாதேயக்கினியா மந்தங்கேளு, சூளப்பாதாதுவெல்லா முறுக்கத்தேறும்-சுகமாகவெளுத்தசடம் வண்டுபோலாம், ஆளப்பாயிதைத்தேனிற்கொண்டாயானல்-அணுகாதுபாண்டுவென்றரோகம்போமே.

போமப்பாசூலையொடு வாயுவெல்லாம் - பொல்லாதகெர்ப்பநோய்சொல்லாதோடும், நாமப்பாவாந்தியொடு பொருமல்விம்மல்-நாடாதவுஷ்ணமாம் வாய்வுதீரும், தாமப்பாசேத்துமங்க ளெல்லாந்தீரும்-தலைமயக்கம்வாயூறல் சாந்தமாகும், வேமப்பா பத்தியங்கார் பித்தமெல்லாம்-வெகுசுறுக்காய்தீருமடா வின்னங்கேளே. ()

## திரிலோகச் செந்தூரம்.

கேளப்பா திரிலோகச்செந்தூரந்தான்-கெடியானலோகமோடப்பிரேகங்காந்தல், நாளப்பாமூன்றையுந்தான் சுத்திசெய்து-நலமாகச் சமன்கூட்டிக் கல்வத்திட்டுத், தாளப்பாசுத்தித்தகெந்திசமன்கூட்டித்-தப்பாமல் வாலைரசம் பாதிசேர்த்து, ஆளப்பாபழச்சாற்றூற் சாமம்நாலு-அப்பனேயரைக்கையிலே பூரீறுபோடே. ()

போடப்பாமுக்கழஞ்சு தூக்கியேதான்-பொற்றலையால் நாற்சாம மரைத்துக்கொண்டு, நாடப்பாசெருப்படையால் சாமம்நாலு நன்றூனகுமரிச்சாறுசாமம்நாலு, தேடப்பாபில்லைசெய்து ரவியிற்போடு-திறமாகவோட்டில்வைத் தோடுமூடி, ஆடப்பாசீலைசெய்து புடத்தைப்போட்டு-ஆறியபின்னேயெடுத் தரைக்கக்கேளே. ()

கேளப்பாலிங்கமரைப் பலந்தான்கூட்டிக் - கெடியானகுமரிச் சாறுசாமமெட்டு, நாளப்பாவரைத்துபில்லைரவியிற்காய்ந்தால்-நன் ருக மூப்பதெருப் புடத்தைப்போடு, வேளப்பாசெந்தூர மருண ன்போலாம்-வெகுசுறுக்காய்ச்சஞ்சீவிசூரணத்தில், தாளப்பாபண வெடைதானெய்யிற்கொள்ளத்-தப்பாதுமேகநீர்தவறிப்போமே.

தவறிப்போம்பாண்டுவகையெல்லாந்தீரும்-தப்பாதுபித்தமெ ன்ற நாற்பதும்போம், தவறிப்போம் மேகமென்ற விருபத்தொன் றும்-சாந்தமாம் வாயுவெல்லா மொழிந்துபோகும், தவறிப்போ முட்சூடு மிருமலெல்லாஞ்-சந்திரன்போல் தேகமெல்லாங் குளிர்ச் சியாகும், தவறிப்போம்பித்தத்தின் கோபமெல்லாம்-சண்ணுமடா வின்னமொன்று சாற்றக்கேளே. (உஎச)

பஞ்சலோகச் செந்தூரம்.

கேளடா பஞ்சலோகச் செந்தூரந்தான்-கெடியானதங்கமொ டு வெள்ளிசெம்பு, நாளடாகாந்தமோடிரும்பில்வைத்து- நலமாகச் சுத்திசெய்து சமனுய்க்கூட்டி, வேளடாகெந்தகந்தான் ரட்டிப்பி ட்டு-வெகுளானசூதமரைவீரங்கால்தான், ஆளடாமுப்பூவின்சுண் ணமொன்று-அப்பனேபழச்சாற்றல் சாமம்நாலே. (உஎரு)

நாற்சாமமரைத்துமே யுலரவைத்து-நன்று கவோட்டிலிட் டோடுமூடிச், சீலானசீலைசெய்து முழப்புடத்தின்-சென்றேதாறு றினபின்னெடுத்துக்கொண்டு, காலானகறிசலைச் சாற்றிலாட்டிக்- கசகாமல் நாற்சாம மரைத்துக்கொண்டு வேலானமுழப்புடத்திற் செந்தூரமாகும்-விதமாகச்செருப்படைநாற் சாமமாட்டே. ()

ஆட்டியேமுழப்புடத்திற் செந்தூரந்தான்-அருணனைப்போ னிறமாகு மெடுத்துக்கொண்டு, மூட்டியேதிரிகடுகிற் பணந்தான் கொள்ள-முதண்டதேன்கூட்டிமண்டலந்தான், நாட்டியேவாயுவெ ன்றதெண்பதுபோம்-நாடாதுபித்தத்தின்மூலந்தீரும், காட்டியே சேத்துமங்களிருபதும்போம்-கருவாகவின்னமொரு சுருதிகேளே.

மண்டூரச்செந்தூரம்.

கேளடா வாயிரந்தான் வருஷஞ்சென்ற-கெடியானசிட்டமது கொண்டுவந்து, தாளடாவாவினீர் தன்னிலேதான்-தளமாகக்காய் ச்சியே தோய்ச்சுத்தோய்ச்சு, வேளடாபத்துவிசை தோய்ச்செ டுத்து-விருதானகல்வத்திற் பொடியாய்ச்செய்து, நாளடாபத்தி லொன்று கெந்திசூதம்-நலமானலிங்கமுப்பு வெண்காரங்கூட்டே.

கூட்டியேபழச்சாற்றில் புடந்தான்பத்து-கூ சாதேகரிச்சாலை ப்புடந்தான்பத்து, ஆட்டியேசெருப்படையின் புடந்தான்பத்து-அப்பனேசெம்பைச்சாறு புடந்தான்பத்து, நீட்டியேயரசனிட பட்டைச் சாற்றில்-நேராகப்புடமஞ்சு போட்டெடுத்து, நாட்டியேசெந்தூரம்-பொடிதான்செய்து நலமானபரணிதனிலடைத்துக் கொள்ளே. (உஎகூ)

கொள்ளவேதிரிகடுகு தேனிலேதான்-கூசாதேபணம்ரண்டு கூட்டிக்கொள்ளே, விள்ளவேவிஷப்பாண்டு காமாலையாறும்-விறுதான பாண்டுவகை குடிபோமப்பா, தள்ளவேபித்தமெல்லாங் கீழேசாடும்-தளமான சேத்துமநோய்தொண்ணூறும், கள்ளவே கடல்புக்கிக் காணுதோடும்-கண்டாயோவெண்பாண்டங் கரும்பாண்டமாமே. (உஅ௦)

ஆமப்பாவரோசிகங்களன்னத்தோஷம்-அகலாதவாந்திவிக்கல் அகன்றுபோகும், தாமப்பாவாயுவென்ற தெல்லாம்போகும்-தளமானநீர்த்தோஷ நாடாதோடும், காமப்பாலூறுமடா தேகமின்னும்-கலகலெனத்தேகமுழு திறுகிப்போகும், நாமப்பாகண்டபடி சொன்னோமின்னம்-நலமானவப்பிரேக வகைசொல்வேனே. ()

அப்பிரேகச்செந்தூரம்.

சொல்லக்கேள்கிருஷ்ணவப்பிரேகம்வாங்கி-சுறுக்காக காய்ச்சியேபாலிற்போட்டு, வல்லக்கேள்கழுவியதையெடுத்துக்கொண்டு-வாகானநெல்லோடப் பிரேகங்கூட்டி, நல்லக்கேள்காடியிலேபிசைந்தாயானல்-நலமானவப்பிரேக மிறங்கும்பாரு, வெல்லக்கேள்மறுநாள்தான் றெளிவிறுத்து-விருதானவப்பிரேகம் ரவியிற்போடே.

போட்டப்பாவுலர்ந்தபின் னெடுத்துக்கொண்டு-புகழான கல்வத்திற்போட்டுநீயும், ஆட்டப்பாபழச்சாற்றால் நாலுசாமம்-அப்பனே பத்திலொன்றுகெந்திகூட்டி, நாட்டப்பாபிலலைதட்டி ரவிரண்டேதான் நலமாகமுப்பதெருப் புடத்திற்போட்டு, நீட்டப்பா கெந்தியிட்டுப்பழச்சாற்றாலே-நேராகநாற்சாமமரைத்துக்காட்டே.

காட்டியேரவிதனிலே காய்ந்தபின்பு-கனமானவோட்டிலிட்டுப்புடத்தைப்போடு, ஆட்டியேகல்வத்திற் போட்டுநீயும்-அப்பனே கெந்தியிட்டுப் பழச்சாறூட்டி, ஆட்டியேபத்துவிசைப்புடத்தைப் போடு-அழகாகப்பின்னெடுத்துக் கரிசாலைச்சாற்றில், வாட்டியேபுடம்பத்துப் போட்டெடுத்து - வாகானசெருப்படைச் சாறுவிட்டாட்டே. (உஅச)

ஆட்டியேயிருசாம மூறவைத்து-அப்பனேபுடம்பத்துபோட் டெடுத்து, நீட்டியேபொடுதலைச்சாறு புடந்தான்பத்து - நேரான பொற்றலையிற்புடந்தானஞ்சு, நாட்டியேசிறுசெருப்படையின்சாற் றூற்-நசகாமற்புடமஞ்சு போட்டெடுத்து, மாட்டியேமுருங்கப்பூச் சாற்றாலாட்டி-மைந்தனேபுடமைந்து போட்டுக்கொள்ளே. ()

கொள்ளப்பாசெந்தூர மருணன்போலாம்-கொடிதானவனு பானமறிந்துகொள்ளு,விள்ளப்பாபயமெட்டு மீளையிருமல்-விருதா னசேத்துமநோய்தொண்ணூற்றூறும், கள்ளப்பாபறந்தோடுங்கட லேபுக்குங்-கருவானசஞ்சீவிசூரணத்தில், அள்ளப்பாபணவெடை தான் றேனிற்கொள்ள-அற்றுப்போகாநீரிழிவு மகன்றுபோமே.

போமப்பாதேகத்துள்மாந்தையெல்லாம்-போகுமடாபிரமிய நோயிருமலெல்லாம், சாமப்பார்வுட்சூடுகள் ளெரிவுதானும்-தளமா ன தேகமெல்லாம் குளிர்ச்சியாகும், வேமப்பாவிந்தூறும் புஷ்டி யாகும்-வெகுநாளை யெலும்புருக்கி விழலாய்ப்போகும், காமப்பா கண்குளிருந்தேகமின்னும்-கனமானபற்பவகை சொல்லக்கேளே.

## துருசுகுரு.

சொல்லக்கேளபுலத்தியனே பற்பத்துக்குச்-சுறுக்கான குரு வொன்று சூட்டக்கேளு, வல்லக்கேள் துருசுசுத்தி பண்ணிக்கொ ண்டு-வகையாகமுப்பூநீர் மூன்றுநாள்தான், அல்லக்கேளசாரநீர் மூன்றுநாள்தான்-அழகாகரவியுலர்த்திப் பலந்தான் தூக்கு, வல்லக் கேள்வங்கத்தைக்கடுஞ்சுண்ணமூசி - வாகாகவெடைக்கெடைதான் கவசம்போடே. (௨௮௮)

## இரசபற்பம்.

போடப்பாரவியிலேயேமுநாள்தான்-புகழாகக்காய்ந்தபின்பு சுண்ணச்சிலை, நாடப்பாமூன்றுசுத்தி காயவைதது-நலமானகாடை யிலேஅருவுமாகும், பாடப்பாசிமிழுக்குள் பதனம்பண்ணி-பறக்கி றதோர்சூதத்தில் பத்திலொன்று, நீடப்பாவாய்நீரா லரைத்துப் பில்லை-நிசமாகரவியுலர்த்தி யோட்டில்வையே. (௨௮௯)

வையப்பாமேற்கீழுங் கல்லுச்சுண்ணம்-வகையாகநடுவில்வில் லைவைத்துமூடி, செய்யப்பாசீலையதுமூன்றுசெய்து-திறமாககுக்கு டத்திற்பற்பமாகும், மெய்யப்பாரசபற்பம்பரணிதனிலடைத்து- விருதான நெய்தேனிற் பணந்தான்கொள்ள, கையப்பாகாலோடு முடக்குச்சூலை-கண்காணுதோடமடா வின்னங்கேளே. (௨௯௰)

கேளடாசர்வாங்க வாதந்தீரும்-கெடியானகுன்மநோ யெட் டுந்தீரும், பாளடாவிசுவுமுதல் பறந்தேபோகும்-பறக்குமடா சன் னியென்ற பதின்மூன்றுந்தான், கேளடாகுத்தியதோர்கபாலசூலை

தெரிகெட்டேயோடுமடா சிரநோயெல்லாம், வாளடாதேகமது வலுத்துப்போகும்-மகத்தானகெர்ப்பநோய் மாறுந்தானே. ()

## தாளகபற்பம்.

மாறுமடாவின்னமொன்று சொல்லக்கேளு-வகையானதாளகந்தான் சுத்திசெய்து, விறுமடாரசபற்பந் துருசுநீரும்-விரகாதவாய்நீராலரைத்துக்கொண்டு, சாறுமடாசமந்தானுந் தாளகத்திலப்பிச்-சதுராகரவியுலர்த்திச் சுண்ணச்சிலே, சீறுமடாமூன்றுசெய்து சுண்ணத்தில்வைத்துச்-சிறப்பாகக்குக்கிடத்தில் சிவன்போலாமே. (உகூஉ)

ஆமப்பாமால்தேவி பற்பந்தன்னை-அளவிலொருபணந்தூக்கித்தேனிற்கொள்ள, போமப்பாக்ஷயமெட்டு மீளைப்போடீளை-விருதான சிலேஷ்மநோ யெல்லாந்தீரும், சாமப்பாபிரமியநோய்சாராதோடும்-சடலத்தில்கெர்ப்பநோய் சுட்டென்றோடும், காமப்பாவெலும்புருக்கி யஸ்திரணங்கள்-கண்காணாதோடுமடா வின்னங்கேளு.

## வங்கபற்பம்.

கேளடாவங்கத்தை சுத்திபண்ணிக்-கெடியாகலேசாகத் தகடுதட்டித், தாளடாதாளகமும் ரசமுங்கூட்டிச்-சமனாகவாய்நீரா லரைத்துக்கொண்டு, வாள்டாவங்கமென்றக்கட்டிதன்னை-வளமாகப்பூசியே சமனாய்நீயும், ஆளடாரவிமுகத்தி லுலரப்போட்டு-அப்பனேசுண்ணாம்புச்சீலேசுற்றே. (உகூச)

சுற்றியேசுண்ணாம்புக்குள்ளேவைத்துச்-சுகமாகமுழப்புடத்தில்நீறிப்போகும், மத்தியேவங்கமென்ற பற்பந்தன்னை-வரிசையாய்த்திரிபலாதிசூரணத்தில், குத்தியேபணவெடைதான் தேனிலப்பா-கொண்டுவரப்பத்துநாள் தீரும்நோய்கேள், வற்றியே பிரமியங்கள் பிரமேகங்கள்-வளருகின்றவெலும்புருக்கி மாண்டுபோமே.

மாண்டுபோம் கிரந்திபது நூற்றுப்பத்தும் - வரட்சியொடு சொரிசிரங்கு மாண்டுபோகும், மாண்டுபோம்மேலூறல் படர்ந்துவூறல்-வகையானசிலவிடங்கள் மாறிப்போகும், மாண்டுபோம்பெரும்பாடு வயிற்றுக்குத்தல்-மகத்தானபுகைச்சல்விழி மாறிப்போகும், மாண்டுபோமேகமென்ற சூலையெல்லாம் - வகையானநாகத்தின் பற்பங்கேளே. (உகூரு)

## நாகபற்பம்.

கேளப்பாநாகத்தைச் சுத்திபண்ணிக்-கெடியாகலேசாகப்பிலேதட்டித், தாளப்பாதாளகமும் வங்கபற்பம் - சமனாகநாகத்துக்கிடையேதூக்கி, வாளப்பாவாய்நீரா லரைத்துக்கொண்டு-வளமாகச்சீலேமேல்பூசிக்காய்ச்சித், தாளப்பாசுண்ணாம்புச் சீலேசுற்றிச்-சுத்தமாஞ்சுண்ணாம்புக் குள்ளேவையே. (உகூள)

வைத்தப்பாமுழுப்புடத்தில் நீறிப்போகும்- † வாசுகிதானீ
றியபின்சொல்லக்கேளு, கைத்தப்பாதிரிகடுகுதாளிசப்பத்திரி-கரு
வானலவங்கமைந்துஞ் சமனாய்க்கூட்டிப், பைத்தப்பாரவியில்வை
த்துச் சூரணித்துப்-பதருதேவடிகொண்டு வைத்துக்கொண்டே,
சுத்தப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள எழுந்ததொரு சி
லேத்துமநோய் தொண்ணூற்றாறே. (௨௯௮)

ஆறானரோகமெல்லாமற்றுப்போகும்-அப்பனேவாதமென்ற
தெண்பதும்போம், வீறானபித்தமது நாற்பதும்போம் வெகுசுறு
க்காய்மேகமொடுசூலைதீரும், நாறானகுட்டமென்ற தெட்டுந்தீரும்
நலமான கடிவிஷங்கள் சாராதோடும், கூறானகுறியெரிப்புப் பத்
துந்தீரும் குன்மமென்றசூலைமுதல் குடிபோம்பாரே. (௨௯௯)

## தாம்பிரபற்பம்.

பாரப்பாதாம்பிரபற்பம்பழச்சாறுதன்னில்-பதருதே பதினை
ந்து தரமேசாய்த்து, நேரப்பாலேசாகத் தகடுதட்டி-நீனைவாகநாக
முந்தாளகமுங்கூட்டிச், சாரப்பாவாய்நீரா லரைத்துக்கொண்டு
சமனாகத்தாம்பிரந் தனக்குப்பூசி, ஆரப்பா ரவியுலர்த்திச் சுண்ண
ச்சீலை அப்பனே சுற்றியே சுண்ணத்தில்வையே. (௩௦௦)

வைத்தப்பாகனபுடமாய்ப்போட்டெடுக்க-வாகானதாம்பிரபற்
பமாகும், கைத்தப்பாபோகாது வெகுசுறுக்காய் காண்டாவனுபா
னமறிந்துபோடு, குத்தப்பாகுன்மமெட்டுஞ் சூலைபதினெட்டுங் கு
டிபோகுந்திரிகடுகு தேனிற்கொள்ளச், சித்தப்பாயீளையோடிரும
லெல்லாஞ் சிதறிப்போம்வெள்ளியிட பற்பங்கேளே. (௩௦௧)

## வெள்ளிபற்பம்.

கேளப்பாவெள்ளியது தகடுதட்டிக்கெடியானரசபஸ்பம்வங்
கபற்பம், நாளப்பாதாகமொடு மூன்றுநேராய் நலமாகவாய்நீரா ல
ரைத்துக்கொண்டு, கேளப்பாவெள்ளிக்குச்சமனாய்ப்போடு விரு
தானரவியுலர்த்திச் சீலைசெய்து, சூளப்பாசுண்ணாம்புக் குள்ளே
வைத்துத் துடியாகமுழப்புடத்தில் தூக்கிவாங்கே. (௩௦௨)

வாங்கியதோர்பற்பமதைப் பதனம்பண்ணு-வகையாகப்பண
வேடைதான்தேனிற்கொள்ளத், தேங்கியதோர்கல்லடைப்புசதை
யடைப்புத்தீராததிரிச்சணங்கள்தீருந்தீரும், ஏங்கியதோர்காசமோ
டிளைப்புந்தீரு மிளைக்குமேலிங்சப்புற்று யோனிப்புற்று, பாங்கியே
கிரந்தியரி மேகமெல்லாம்பறக்குமடாவின்னமொரு பற்பங்கேளே

† வாசுகி-நாகம்.

## தங்கபற்பம்.

கேளப்பாதங்கமொரு பலந்தான்வாங்கி-கிருபையாய்த்தகடு தட்டிச்சொல்லக்கேளு, நாளப்பாபழச்சாற்றில்பூங்காவியாற்றிநல மாகத்தகட்டின்மேற் பூசிக்காய்ச்சித், தாளப்பாவைந்துகரங் காய்ச்சிக்கொண்டு- தளமாகவங்கபற்பம் நாகபற்பம், கேளப்பாரசபஸ்பம் வீரம்வெள்ளை- சேர்சமனையண்டத்தி னீராலாட்டே. (ரு௦௪)

ஆட்டியேசமனைகத் தகட்டிற்பூசி-அப்பனேயண்டத்தில்சுண்ணம்வைத்து, நீட்டியேமேல்மூடிச்சீலைசெய்து நேராகமுழப்புடத்தில்நீலிப்போகும், காட்டியேகறுத்தக்கால் வீரங்கால்கூட்டிக்-கனமானவண்டநீர் தன்னுலாட்டிச், சாட்டியேரவியுலர்த்தி யோட்டில் வைத்துச்சாங்கமாய் முழப்புடத்தில் தாக்கிவாங்கே. (ரு௦ரு)

வாங்கியேயெடுத்துப்பார் வெண்ணீராகும்-வளமானதேனெய்சர்க்கரையிற்கொள்ளச், சாங்கியேசனியென்ற மூலமெல்லாம்-தப்பாதுதோழமென்றவேழுந்தீரும் நீங்கியேவலிப்பிசிவும் பறந்துபோம்-நினைவுகெட்டசேத்துமநோய் தொண்ணூற்றுறும், தேங்கியவாதநோயெண்பதுந்தான்-சிதறிப்போம் பித்தமது வொழிந்துபோமே. (ரு௦சு)

ஒழிந்துபோம் பித்தவெட்டை கிராணிபெரும்பாடு-ஒழியாதபிரமியமோ யொடுங்கிப்போகும், ஒழிந்துபோகும் குன்மமெட்டும்பாண்டோராறும்-உத்தமனே மேகரலக்கழிச்சல்தீரும், ஒழிந்துபோம்சூலைமுதலிசுவுரோகம்-ஓகோகோகுட்டமெட்டும்கடலேபுக்கும், ஒழிந்துபோம் கிரந்தியொடு வெடிமேகந்தான் - உட்சுரங்கள் நீர்ச்சுருக்குமோடும்பாரே. (ரு௦எ)

வெண்காரஞ் சிலாசத்து கலைக்கொம்புகல்நாற்பற்பம்.

பாரப்பாவெண்காரஞ் சிலாசத்துதான்-பாங்கானகலைக்கொம்புகல்நாருந்தான்சேரப்பாசமனைகப் பொடித்துக்கொண்டு-சிறப்பானபருத்திதான்மூலமெல்லாம், சேரப்பாசுட்டதனைச்சாம்பலாக்கி-சீராகப் படியொன்ற தளர்ந்துகொண்டு வாமப்பாநாலாறு படிசலந்தான்-வாகாகக்கலக்கியதை மூடிவையே. (ரு௦அ)

வைத்தப்பாநாலாநாள் தெளிவிறுத்து-வாகாகமுன்மருந்தின்விட்டேயாட்டிற், கைத்தப்பாநால்சாமமரைத்துவில்லை-கனமானரவியில்வைத்துலரப்போட்டு,ஒத்தப்பாவோட்டில்வைத்தோடுமூடி-யுத்தமனேசீலைகட்டி முழப்புடத்திற்போடு, நித்தப்பாநீறுமதுவெள்ளையாகும்-நினைவாகப்பின்னுமந்த நீராலாட்டே. (ரு௦கூ)

ஆட்டையிலேசாரமது காசுபோடு-அடங்காதுசூடனது காசுபோடு, நீட்டையிலேவீரமதுகாசுபோடு-நினைவாகப்பூநீறுகாசுபோ

டுநாட்டையிலே நால்சாம மரைத்துக்கொண்டு-நலமாகப்பில்லைதட்டிரவியுலர்த்திச், சூட்டையிலேசுண்ணும்புப் பொடியில்வைத்துச்-சுறுக்காகமுழப்புடத்திற் சூட்டிவாங்கே. (௩௧௦)

வாங்கியேசுறுக்காக வண்டநீரால்-வளமாகவரைத்தொரு புடந்தான்போடு, தாங்கியேவெண்மையதுசங்குபோலாம்-தளமானலிங்கமது சுத்திசெய்து, பாங்கியேபலத்தில்பாதிலிங்கம்-பச்சையாய்ச்சேர்த்துநீ பொடியாய்ச்செய்து தேங்கியேயிளநீரிற் பணந்தான்ரண்டு-தீர்க்கமாய்க்கொண்டுவரப் போம்நோய்கேளே. (௩௧௧)

கேளப்பாபெருவயிறுமகோதரங்கள்-கிரிச்சனங்கல்லடைப்புசதையடைப்பு, நீளப்பாநீரருகல்நீரெரிவுதானு-நீடரதுகதையொடுநீராம்பல்தானும்,ஆளப்பாநீர்ச்சுரப்பு வுப்பிசங்கள்-அணுகாதுவயிற்றிலுள்ள நீர்க்கட்டுபோம், கேளப்பாநீரருகல் துள்ளிவிழ்தல்-தீருமப்பாபவளமது பற்பங்கேளே (௩௧௨)

கேளப்பாபவளமது பலந்தானொன்று கொடியானபீங்கானில்நறுக்கிப்போடு, வேளப்பாபழச்சாறு விட்டுநீயும் - விருதானநாழிகைதானறுபதானல், நாளப்பாகழுவியதை யெடுத்துக்கொண்டுநலமானகர்ப்பூரச் சிலாசத்துதான், தாளப்பாசமனுகக்கல்வத்திட்டுச்-சார்வான பிரண்டைச்சா றதனலாட்டே. (௩௧௩)

ஆட்டியேநால்சாமம் பில்லைதட்டி-அப்பனேரவியுலர்த்தியோட்டில்மூடி, நாட்டியேமுழப்புடத்தில்நீரும்பாரு-நன்றாகப்பின்னும்மந்தசாற்ருலாட்டிக், காட்டியேரவியுலர்த்திப்புடத்தைப்போடு-கருவானபுளியாரைச்சாற்ருலாட்டி, நீட்டியேவிருசாமமரைத்துக்கொண்டுநினைவாகப்புடம்போடப் பற்பமாமே. (௩௧௪)

ஆமப்பாபணவெடைதான் வெண்ணெயிலேகொள்ள அடங்காதமேகமெல்லாம்மகன்றுபோகும், வேமப்பாவெலும்புருக்கியஸ்திமேகம் விருநானமதுமேக மெட்டும்போகும், தாமப்பாதேனிலே கொண்டாயானல் சகலரணமேலூறல்தவறிப்போகும், தாமப்பாவாயுவெல்லாம் கீழேநோக்கும் தப்பாதுமேகத்தின் தினவுபோமே. (௩௧௫)

வாதசுரக்கியாழம்.

போமப்பாசுரங்களப் பத்துநாலும் புகழாகவாதசுர முப்பத்திரண்டு, ஆமப்பாபித்தசுரமிருபத்தொன்றும் அளவானசேத்தும்நோய்பதினென்றப்பா, வகையானமூன்றது பத்துநாலுக்கும் நலமானவாதசுரக் கியாழங்கேளு, வேமப்பாசிறுதேக்குசுக்குதிப்பிலிவிதமானசெவியமொடு கோஷ்டந்தானே. (௩௧௬)

தாமென்றதுராலப்பை திப்பிலிமூலம்-தகுமானசித்திரமூலஞ்
சங்குமூலம், வேனென்றவெள்ளருகுநிலவேம்போடு-விருதானமுரு
க்கம்வேர் கழற்சிவேரும், கானென்ற கண்டங்கத்திரி பேராமுட்டி
கருவானசிற்றரத்தைமாவிலிங்கம்வேரும்,தேனென்றசிறுகாஞ்சோ
ரிபேரரத்தை-தெளிவானசதகுப்பை விஷ்ணுகாந்திபாரே. ௱௧௭

பாரப்பாவிந்தவகையிருபத்தொன்று-பலம்வீதம்தூக்கியேயிடி
த்துநையச், சேரப்பாவிருபத்தோர் பங்குபண்ணித்திறமாகவொரு
பங்குசட்டியிலிட்டு,வாரப்பாமூன்றுசேர்சலந்தான்விட்டு-வளமான
நாழிகைதான்முப்பதானல்-ஆரப்பாவடுப்பேற்றிக் கால்சேரானல்-
அப்பனேவடிகொண்டு பீங்கானில்வாரே. ௱௧௮

வார்த்தப்பாவாதராட் சதன்குளிகை-வளமாகப்பணமொன்று
பொடித்துப்போட்டுத், தேத்தப்பாதேனதிலேகழஞ்சிகுத்தித்-திற
மாகவிருநேரங்கொடுத்தாயானல்,பார்த்தப்பாவாலசுரம்நடுக்குவா
தம்-பதறுகின்றநாளின்முறை பறநதுபோகும், காத்தப்பாகடுப்புவ
லிகடலேபுக்கும்-கருவானபித்தநோய்க்கியாழங்கேளே. ௱௧௯

பித்தசுரக்கியாழம்.

கேளப்பாபித்தசுர மிருபத்தொன்றும்-கெடியர்கத்தீருமடாகி
யாழங்கேளு, நாளப்பாவிலாமிச்சை சிறுகாஞ்சோரி-நலமானவில்வ
வேர்பாதிரிவேர்தானும், ஆளப்பாவதிமதுரஞ்செவ்வல்லிகோஷ்டம்
அப்பனேநன்னரிநிலவாவாடை, தேளப்பாசீரகமுங்கொத்துமல்லி
திறமான தும்பைவேர் பேரிச்சங்காயே. ௱௨௰

காயோடுயானைத்திப்பிலியுமப்போ-கருவானநெல்லிமுள்ளிசுக்
கோடொக்கப், பாயொடுபதினைந்துபலவீதந்தூக்கிப் பக்குவமாயிடி
த்துநையப் பங்குகேளு, தாயோடுவிருபத்தோர்பங்குபண்ணித்-தப்
பாமலொருபங்கு சட்டியிலிட்டுச், சேயோடுசலமதிலே மூன்றுசேர்
தான்-திறமாகவிட்டதிலே யடுப்பிலேற்றே. ௱௨௧

ஏற்றப்பாநாழிகைதான்முப்பதானல்-என்மகனேகால்சேர்தா
னெடுத்துக்கொண்டு, சேர்த்தப்பாதேனதிலேகழஞ்சுகூட்டித்-திற
மானகோரோசனைக்குளிகையொன்று,பார்த்தப்பாவிழைத்ததனையி
ருநேரந்தான்-பதறுமல்கொடுத்துவரப்பித்தசுரமெல்லாம், காத்தப்
பாகண்காணுதோடிப்போகும்-கருவானநாவரட்சிகழன்றுபோமே.

போமப்பாநாக்கிலுள்ளமுள்ளதெல்லாம்-பொறுக்காதநீர்த்தா
கம்போகுஞ்சொன்னேன்,நாமப்பாவுடம்பெரிவுகாந்தலெல்லாம் நடு
நடுங்கியோடுமடாவாயூறலெல்லாம், சேமப்பாசிரசிலுள்ளபித்தமெ

ல்லாம்-சீக்கிரத்திலிறங்கிவிடுஞ்சிரோபாரம்போம், ஆமப்பாசேத்து
மசுரம்பதினொன் றுந்தான்-அப்பனேதீருதற்குக்-கியாழங்கேளே. ()

### சேத்துமசுரக்கியாழம்.

கேளப்பாசுக்குதிப்பிலிகிராம்பு-கெடியானதூராலப்பையக்கிர
காரம், காளப்பாகருமுள்ளிகடுக்காயோடு-கனத்தவாடாதோடைக
ர்ப்பூரவல்லி, நாளப்பாமுத்திரிகைகண்டங்கத்திரி-நலமானபதினொ
ன்றுவகையைக்கேளு, ஆளப்பாபலவிதம்சிறுத்துக்கொண்டு-அப்ப
னேயிடித்துவையப் பங்குகேளே. ௩௨௪

பங்கென்னபதினைந்துபண்ணிக்கொண்டு-பக்குவமா யொருபங்
குசட்டியிலிட்டுப், பங்கென்னரெண்டுபடிசலந்தான்வாரு-பதறுதே
மூப்பதுநாழிகையூறினக்கால்-பங்கென்னவடுப்பேற்றிக்-கமலமாகப்
பதறுமல்கால்சேர்தானிடித்துக்கொண்டு, பங்கென்னதேனிலேகழ
ஞ்சுகுத்திப்-பாரப்பாசந்திரேகம் பணந்தான்போடே. ௩௨௫

போட்டப்பாகோரோசனைக்குளிகையொன்று-புகழாககலக்கி
யிருநேரங்கொள்ளக், காட்டப்பாகம்மலெல்லாங்கீழேசாடுங்கனமா
னசேத்துமசுரங்காணுதோடும், சேட்டப்பாவிருமலெல்லாம் க்ஷண
த்தில்தீரும்-சிறுகடுப்புகுத்துவலிசேராதோடும்,காட்டப்பாவலியிசு
வுங்கலங்கியோடுங்-கருவானசேதியொன்று சொல்லக்கேள். ()

### சன்னிபதின்மூன்றுக்கும்பெயர்.

கேளப்பாசன்னிவகை பதின்மூன்றுக்கும்-கெடியானநாமந்து
சொல்லக்கேளு. நாளப்பாதாந்திரிகனந்தகனுமாகும்-நலமானசீதா
ங்கமுருத்திரதாரம்,வேளப்பாசித்தவிப்பிரமையோடு-விதமானகண்
டகுப்சங்கருனியாசம், ஆளப்பாவிக்கனுதம்பக்கநேத்திரம்-அருளா
னரத்தபுஷ்டிவிருக்கிதாகமாமே. ௩௨௭

### தோஷமேழுக்கும்பெயர்.

ஆமப்பாபிரலாபம் பீனியாசம்-அப்பனேசன்னிவகைபதின்மூ
ன்றுக்கும் வேமப்பாதோஷமெனறதேழுங்கேளு-விருதானவுஷ்ண
தோஷம்ரத்ததோஷம்,நாமப்பாநீர்தோஷமஸதிதோஷம்-நலமான
கொடிதோஷம் வலிதோஷந்தான், சாமப்பா சையோக தோஷத்
தோடு-சதுரானதோஷவகையேழுந்தானே. ௩௨அ

தானென்றசன்னிவகை பதின்மூன்றுக்கும்-தளமானதோஷவ
கையேழுக்குந்தான், நானென்றமருந்துவகைமுன்னேசொன்னேம்
நலமானசன்னிக்குத்தைலஞ்சொன்னேம்,தானென்றமாத்திரையுங்
கலிக்கஞ்சொன்னேங், கருவானவைத்தியத்தில்மனதையூன்றி, வா
னென்றவைத்தியத்தைப் பார்த்தானாகில், மைந்தனே தன்வந்திரிக்
கொப்பாம்பாரே. ௩௨௯

## கெந்திசெந்தூரம்.

பாரப்பாசெந்தூரஞ் சொல்லக்கேளு - பண்பானகெந்தியரைப் பலந்தான்வாங்கி,நேரப்பாவேரட்டிவிட்டிருக்கும்போது நேரானரசம்பலந்தானுமூவிட்டே, சாரப்பாவறுத்தாக்கால்பற்பம்போலாம்-சாதகமாய்ப்புதுச்செங்கல் பாக்குப்போலுடைத்து, வாரப்பாபாண்டத்தில்போட்டுப்பின்பு-வளமானகறியுப்புச் சோரைத்தான்வாங்கே.

வாங்கியேமுன்பறபங்கல்லுப்புக்கலந்து வாதாகப்பாண்டத்திற்றாவிநீயும், தங்கியேமேல்பானைகவிழ்த்து மூடித்-தப்பாமலெழுசீலைமண்ணுஞ்செய்து, சாங்கியேகாயவைத்தடுப்பிலேற்றிச்-சாதகமாய்க்கமலசா டாக்கினியினாலே, தேங்கவே நாற்சாம மெரியிட்டாக்கால்-திறமாகயேல்தூறில் பற்பமாமே. ௩௩௧

ஆமப்பாசூதமற்பம் பலந்தானு-அப்பனேகெந்திபலமரையுங்கூட்டி,நாமப்பாவரிதாரம்பலந்தான் தூக்கி-நலமாகப்பொடிசெய்து குப்பியிலேபாதி, வேமப்பாபோட்டதிலேயெழுசீலைசெய்து-விருதானரவியிலே காயப்போட்டுத், தாமப்பாதாளிக்குள் நாலுவிரல்மண்தான்-தப்பாமல்பாதிமேல் குப்பிவையே. ௩௩௨

வைத்தப்பாகழுத்தளவுமணலைக்கொட்டிவாகாகமுத்தியுஞ்சாமம்நாலு, கைத்தப்பாவெரியிட்டேயாறிப்பார்த்தால்-கசக்காதுதேங்காய்போய்செந்தூர்மாகும்,நைத்தப்பாவுடைத்தெடுத்துப்பாணம்பண்ணு, நலமானவியாதியெல்லா நாடாதோடும், மைத்தப்பாசெந்தூரமபலந்தானென்று-மைந்தனேமுன்பற்பம் பலந்தானாலே. ( )

நலமானகெந்திபல மரைதான்போட்டு-நலமானதாரங்கால் பலருமாகும், காலானகல்வத்தில் பொடித்துநீயுங்-கசகாமல் குப்பிக்குப்பாதிபோட்டுச், சேலானசீலையோரேழுஞ்செய்து திறமானவாய்க்குச்செங்கல்தேய்த்துப்போட்டு, வாலானசீலையோரேழுஞ்செய்து மைந்தனே வாலுகையி லடுப்பிலேற்றே. ௩௩௪

ஏற்றியேநாற்சாம முத்தியாற்போட்டு எடுத்துப்பார் செந்தூரமருணன்போலாம, பாத்தியே யிப்படியே பத்துமுறை செய்துப்-பாங்கான செந்தூரமெடுத்துக்கொண்டு, தேக்கியேசெந்தூரம் பலந்தானுந் திறமானபற்பமது பலந்தானும், ஆக்கியேகெந்தியது பலந்தான்ரண்டு அப்பனேதாரமது பலமரையுமாமே ௩௩௫

ஆமப்பாசிலைகால்தான் தாளகங்கால்-அப்பனேகல்வத்திற்பொடித்துக்கொண்டு,நாமப்பாசெம்பரத்தப்பூச்சாற்றாலே...

சாமமாட்டிக்கொண்டு, தாமப்பாபூவரசன்பூசாற்சாமம்-தப்பாமல் தக்காளிபழச்சாறுகேளு, சாமப்பாவிருசாமமாட்டிக்கொண்டுசமர்த்தாகப்பொற்கையான் சாறுகேளே. ௫௫௭

கேளப்பாசாமம்ரண் டாட்டிக்கொண்டு கெடியான ரேக்கத்திலேபலமும்போட்டு, காளப்பாவரைத்துருட்டிப் பொடியாய்செய்துநலமானகுப்பியிலே யரைதான்போட்டு, கேளப்பாசீலையோரேழுஞ்செய்துவெகுசுறுக்காய்வாங்கிச்செங்கல்தேய்த்துப்போட்டு, ஆளப்பாவாய்க்குமந்தசிலைசெய்து-அப்பனேவாலுகையி லாற்றியாட்டே.

ஆட்டப்பாசாமம்நால்தீபமாக - அப்பனேசாமம்கால் கமலவன்னிமூட்டப்பாகாடாக்கினிசாமமெட்டு மூதண்டநிருவாணிபூசைசெய்து காட்டப்பாவாறினபின்னெடுத்துப்பாரு-கதிர்போலேசெந்தூரங்கண்கொள்ளாது,நீட்டப்பாலோகத்தில் நூற்றுக்கொன்றுநிலைக்குமடாவானமது பத்துதானே. ௫௫௮

பத்தாகுந்தேகத்தில்குன்றியெடைதேனில்பக்குவமாய்வருடமொன்று கொண்டாயானால்வித்தாகும்விந்துவது கீழ்நோக்காது விட்டுவிட்டுச் சரித்தோர்வாசிகட்டும், அத்தாகும்ஸ்திரிகளுடனனுபோகித்தால்-அப்பனேநூறுபேர் தோற்றுபோவார் சித்தாகுந்தேகமதுசிவந்துமின்னும்-செ:டமிறுகிவயிரம்போலாகும்பாரே. ௫௫௯

காலகண்டமேகநாராயண செந்தூரம்.

பாரப்பாகாலகண்டமேகநாராயணன்பரிவானசெந்தூரஞ்சொல்லக்கேளு, சேரப்பாசற்பம்பலந்தானெட்டுத்-திறமானகந்தகமோபலந்தானப்பா வாரப்பா தாளகமோ பலந்தானென்று-வளமானசிலையரைசெந்தூர மதைதான், ஆரப்பாலிங்கங்கால்வெள்ளிகால்தானப்பனேவெள்ளீயம் பலந்தானென்றே. ௫௬௰

ஒன்றானநாகமரைவங்கங்கால்தா-னுத்தமனேசெம்பதுவுங்கழஞ்சிரண்டு,நன்றானதங்கமதுகழஞ்சுவொன்று-நாட்டப்பாநாபியொருபலமும்நீதான் குன்றுமற்பொடிசெய்தேயுரைப்புகேளு - கூறானபொற்கையான் சாமம்நாலு, சென்றானகுமரிப்பூச்சாமம்நாலு-சேர்முருக்கம்பூச்சாறு சாமம்ரண்டே. ௫௬௧

ரண்டானபாதிரிப்பூச்சாறுசாமம்-ரண்டாகும்பழச்சாற்றில்செம்பரத்தம்பூபோட்டு,தென்றுதவெளுத்தபின்பெறிந்துபோட்டுவிருத்தாகவருசாம மெடுத்தேயாட்டு, சென்றுகரவியுலர்த்திப்பொடிதான்செய்து சேரப்பாகுப்பிக்குச் சீலைசெய்து நவின்றப்பா குப்பிக்குப்பாதிபோட்டு விருதாகவாய்மூடிச் சீலைசெய்யே. ௫௬௨

செய்தப்பாவாலுகையிலடுப்பேற்றித்-திறமாகத்தீபாக்கினியெட்டுச்சாமம், செய்தப்பாகமலமோரெட்டுச்சாமம் - தீர்க்கமாய்க்காடாக்கினி சாமமெட்டு, செய்தப்பாதீயாற்றி யீசானியத்திற்-சேர்க்கறியுமதுவோடுபூசைபண்ணு, செய்தப்பாகுப்பிதனை வாங்கிப்பாரு-திறமாகக் கருஞ்சிவப்பாய்ச் செந்தூரமாமே. ௫௪௩

ஆமப்பாபணவெடைதான் தேனிற்கொள்ள-அணுகாது குன்மமெட்டுமபீலியாறும், போமப்பாபெருவயிறுமகோதரர்கள்-பொல்லாதசசைதவிம்மல்நீரருக்கல், காமப்பால்விரைத்ததொருசோகைப்பாண்டு-கனமானநீர்க்குத்தல் காணாதோடும், சாமப்பாவக்கினியாமந்தமெல்லாம-சண்ணுண்டுபோகுமடா சேதிகேளே. ௫௪௪

## ரசலோகச்செந்தூரம்.

சேதியொன்றுசொல்லுகிறேன் புலத்தியனேஐயா - திறமானரசலோகச்செந்தூரந்தான், ஆதியென்றசூதபமபம்பலந்தான்ரண்டு அப்பனேலோகமென்றுகாக்குமரைகூட்டி, வாதியாம்லிங்கமரைவெண்தாமரைதான்-வளமாகச்சாரங்கால்நாபிகால்தான், காதியென்றகெந்தியினாற்செந்தூரங்கால்தான்-கனமாகப்பொடிசெய்தே யரைப்புகேளே. ௫௪௫

கேளப்பா பழச்சாற்றால்சாமம்நாலு-கெடியாகப்பொற்கையான்சாமம்ரண்டு, நாளப்பாநெருப்புகால்சாமம்ரண்டு-நலமான குமரிப்பூச்சாமம்ரண்டு, தாளப்பாசெம்முள்ளிசாமமொன்று-தளமாகவேயரைத்துரவியிற்போட்டு, வேளப்பா செய்ததனைக் குப்பிக்கேற்றி-விதபானவாய்மூடி வாலுகையில்வையே. ௫௪௬

வைத்தப்பாவடுப்பேற்றி யெட்டுசாமம்-வாகாகத் தீபாக்கினிகமலங்கேளு, கைத்தப்பாசாமமெட்டெரித்துக்கொண்டு-களமானகாடாக்கினிசாமமெட்டு, வித்தப்பாவாறவிட்டுடைத்துவாங்கு, விருதாகச்செங்கல்நிற மாகக்காணும், பைத்தப்பாபொடிசெய்து பணந்தேனிலுண்ணப் பறக்குமடா காமாலைபாண்டுதானே. ௫௪௭

தானென்றபித்தநோய்தலைகெட்டோடும்-தப்பாதுவாதமென்றதெண்பதும்போம், நானென்றசென்னியெல்லாம் நாடாதோடும் நலமானவாயுவென்றதெல்லாந்தீரும், தானென்றதலையிலுள்ளவியாதியெல்லாம-கடல்புக்குஞ் சூலைபதினெட்டுந்தீரும், மானென்றதேமேலைபத்துநாள்கொள்ள-மதுமேகந் தீருமடாவின்னங்கேளே. ௫௪௮

## ரசகற்பூரபற்பம்.

கேளடாரசகர்ப்பூரபற்பங்கேளு-கிருபையாய்சுத்தரசஞ்சுத்திசெய்து, நாளடாகலலுப்பு கைபோற்பண்ணி-நலமானர்வியிலேகாய

ப்போட்டு தேளடாசட்டிக்குளுப்பைபோட்டுத் திறமானமேற்சட்டி
க்கொண்டுமூடி, தாளடாவெழுசிலைமண் ணுஞ்செய்து ,தனமானரவி
யிலே காயப்போடே. கூசக

போட்டப்பாவடுப்பேற்றிக் கமலமாகப்புகழாகநாற்சாமமெரி
த்தாயானல், நீட்டப்பாதேங்காய்போ லிறுகிநிற்கும்-நிசமாகவதை
யெடுத்துத் தூக்கிக்கொண்டு, காட்டப்பாபலனுலு பீங்கானுக்குள்
கருவானவெற்றிலையின் சாற்றில்விட்டு, ஆட்டப்பாரவிமுகத்திலுல
ர்ந்தபின்பு-அப்பனேநீயஞ்சுதரம் சாறுவிட்டே. கூருய

விட்டப்பாரவியிலேயுலர்ந்தபின்பு விருதாகபொடிப்பண்ணிகு
ப்பிக்கிட்டு, விட்டப்பாவரைவாசிமட்டம்போட்டு-விளக்கியேயெழு
சீலை வெண்சாமமுத்தியிட்டு, விட்டப்பாவாறியபின் னுடைத்துப்பா
ரு விதமானபற்பமதை யெடுத்துக்கொள்ளே. கூருக

கொள்ளப்பாநாலுபலமெடுத்துக்கொண்டுகுறிப்பானபற்பமது
பலநால்தூக்கி, நள்ளப்பாபொடிசெய்து வெற்றிலையின்சாறு நலமா
கவிட்டதிலேரவியுலர்த்தி, வீள்ளப்பாமேருவிலே யரைவாசிபோட்டு
விருதானவாலுகையி லடுப்பிலேற்றி, கள்ளப்பாமுத்தீயுஞ் சாமமெ
ட்டு கசகாமலெடுத்தாறியபின் னுடைத்துப்பாரே. கூருஉ

பாரப்பாமுன்போலே பத்துக்கொந்தம் பரிவாகவெடுத்தெடு
த்துப்பதனம்பண்ணி, சாரப்பா பணவெடைதா னெய்தேனிற்றுள்
சார்வாகமண்டலங்கால் கொண்டாயானல. சேரப்பாசூலைபதினெட்
டுந் தீரும்திரமானகிரந்திபுண் புரைகள்தீரும், வேரப்பா மேலூறல்
வஸ்திரணமெல்லாம் வெவ்வேறுப்தீருமடா வின்னங்கேளே.

## காரீயச்செந்தூரம்.

கேளப்பாகாரீயச் செந்தூரந்தான் கெடியானகாரீயம் பலந்தா
னுலு, நாளப்பா பழச்சாற்றிலுருக்கிச்சாய்த்து நலமான நல்லெண்
ணெய்க்கோமயத்திலேழு, சாளப்பாகோசலத்திற்கொளுச்சாற்றில
மானகாடியிலேயுருக்கிச்சாய்த்து, ஆளப்பாவகையொன்றுகேழுத
ரஞ்சாய்த்து அப்பனேபலநாற்சட்டியிலேவையே. கூருச

வைத்தப்பாபாகமதுகாலதான்கூட்டிவயமாகவுருக்கையி ல
வாரைப்பட்டை, தைத்ததிலேசறுக்கியே புடைத்துக்கொண்டுதள
மாகப்போட்டதிலே வறுப்பாயப்பா வைத்ததிலேநாற்சாமம்வறுத்
தாயானல நலமானசெந்தூர மருணன்போலாம், பைத்ததிலெ
தூரமெடுத்துக்கொண்டு பத்திரமாய்ச்சீசாவிற்பற்பமாமே. ரு

ஆமப்பாநாற்சாமம் வறுத்துப்போட்டு-அப்பனே காஞ்சாமம்
மமாய்வைத்து, தாமப்பாசெந்தூர மெடுத்துக்கொண்டு-தளமான
தனெய்யில பணந்தா னுண்ணப், போமப்பாபிரமியநோய் பெரும்
ஈடெல்லாம்-பொல்லாதகிரிச்சனங்கள்போகுஞ்சொன்னேன், காம
பாகிரிழிவுகடலேபுக்கும்கலங்காதேகலலடைப்புதெறிக்கும்பாரே.

## பூரணச்சந்திரோதயம்.

பாரப்பா பூரணச்சந்திரோதயமென்றால - பறக்குமடாவியாதி
யெல்லாஞ் சொல்லக்கேளு, தாரப்பாரசமிரண்டுசில்லையரைக்கால-த
ருமலவெருசுறுக்காய் ரேக்கதுவும்பலந்தானென்று, காரப்பாசரக்
கெல்லாங்கலவத்திட்டு-கசகாமற் பொடித்துமனமொன்றுபட்டே.

பட்டப்பாவரைப்புக்குச் சாறுகேளு - பண்பாகபழச்சாற்றிற்
செம்பரத்தம்பூபோட்டு, கன்றப்பாவெளுத்ததிலேநாள்தான்சென்
றால், கலங்காதேபிழிந்தெறிந்துமருந்தில்விட்டு, வின்றப்பாசாமமே
யிருபதாகும், வேளாதபொற்கையா னிருபத்தொன்றும். சென்றப்
பாவரைக்கையிலே துருசுகேளு-திறமாகபணவெடைதான் கூடப்
போடே. நகூ

போட்டப்பாவியுலர்த்திப்பொடிதான்செய்து-புகழானமேரு
கியில யரைவாசிபோடடு, காட்டப்பா சீலையோரேழுஞ்செய்து-கன
வா லுகையிலடுப்பிலேற்றி, நீட்டப்பாதீபமோரெட்டுச்சாமம்,
னகமலவன்னியெட்டுச்சாமம், ஆட்டப்பாகாடாக்கினி யாறு
-அப்பனேசலாகையிட்டுக் கிண்டிப்பாரே. நகூ

ாரப்பாசலாகைமுகங்கறுப்புகண்டால்-பக்குவமென்றேதீயை
ப்போட்டு, சேரப்பாபூரணச்சந்திரனைப்போலே-திறமாகக்கா
ாயிருக்கும்பாரு, வாரப்பாவடைத்தெடுத்து பலமேதூக்கி வ
கப் பொடிசெய்து கஸ்தூரிகேளு, ஆரப்பா கழஞ்சியொன்று
போடு-அப்பனேகோரோசினைதான் கழஞ்சியாமே. நகூ0

ுமப்பாகூடவிட்டுப்பொடிதான்செய்து-அப்பனேபாணிதனி
துக்கொண்டு. சேமப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள
ன்னியென்ற மூலந்தீரும், வேமப்பாதோஷமென்ற தேழுந்தீ
பருளாக சேத்துமநோய் தொண்ணூற்றாறும், வாமப்பாசேழ்
வலியுந்தேகம்-வளமாகதேவிலையைநீதியானஞ்செய்யே. நகூக

சய்யவேபூரணசந்திரோதயமென்றால்-திடுக்கிடுமேசுரமென்ற
நினுலும், சையவே காசமெட்டுங் கடலேபுக்கும் - கனமான

மேகநோயிருபத்தொன்றும், பையவேபிரமியங்க ளகன்றுபோ பாரப்பாதேகமதுசிவந்துமின்னும், வையவேவருடமொன்று ப வெடைதான்கொள்ள-வளமானதேகமது சந்திரன்போலாமே.

ஆமப்பாகோங்கின்பூ சூரணமேசெய்து அப்பனேபூரணச்சந் ரோதயம்வைத்து, நாமப்பாமண்டலந்தான மூன்றுசென்றால் ந மானதேகமோ அருணன்போலாம், போமப்பாசரஸ்வதிதானிருந் தனுசெய்வாள்-புகழானசுபமெல்லாம் பாடலாங்கேள், காமப்பாலி றுகுமடா சையோகத்தில்-கருவானவிந்துவது வீழாதென்னே.

என்னவேபத்தியந்தான்பாலுஞ்சோறும்-இதமானயாவினெய் சிறுகீரையாகும், புன்னவேபொன்னுங்காணி புளியாரையாகும்பக ர்வசளேவண்டையுடன் பீர்க்குமாகும், சன்னவேமிளகுசீரகமாகும் கறியென்றால் முள்ளித்து தூளையுமாகும், தன்னவே பருப்புக்குள் பாசியாகும் தளமானசந்தனுதித் தைலமூழ்கே. ௩௬௪

மூழ்கவேவியாதியெல்லாங்கடலேபுக்கும்-முக்கியமாயகத்திய ர்க்குச்செபந்தான்பண்ணு திகழவேதியானமது நிலையாய்ப்பண்ணு- நேராகதேவியைத்தான் பூசைபண்ணு திகழவேசிவன்தன்னைத்துதி யேபண்ணு தீராதவியாதியெல்லாந் தீர்ந்தேபோகும் மகிழவேவைத் தியனிவ்வகையாய்ச்செய்தால்-மண்டலத்திலீசனமனுகுமுற்றே. ()

## வைத்தியரத்தினச்சுருக்கம்

முற்றிற்று.

—()—